
# தமிழரசு


1-5-1989 ரூ. 1









வெள்ளுடை வேந்தர் தியாகராயர்

தோற்றம் : 27-4-1852 மறைவு : 28-4-1925



# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2020
சுக்ல-சித்திரை 18
மலர்: 19 இதழ்: 21
1-5-1989



பக்கம் 33



பக்கம் 15



பக்கம் 39

## இந்த இதழில்

திரைப்படப் பவளவிழாவில் மேதகு குடியரசுத் தலைவர் உரை ... ... 2

காந்தி கிராம விழாவில் மேதகு குடியரசுத் துணைத்தலைவர் உரை ... ... 3

மாண்புமிகு முதல்வர் கலைஞர் மேதினச் செய்தி ... ... 5

மாண்புமிகு செய்தி தொழிலாளர் நலத்துறை அமைச்சர் மேதினச் செய்தி ... ... 6

நீங்களே சொல்லுங்கள் - பாவேந்தர் கவிதை ... ... 15

தமிழ்வளர்த்த பெரியார் - மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் கட்டுரை ... ... 17

உணர்வும் உறவும் - டாக்டர் மு. வரதராசனார் ... ... 24

சர்பிட்டி தியாகராயர் குறித்துப் பேரறிஞர் அண்ணா ... ... 33

அண்ணல் அம்பேத்கார் ... ... 39

தாளமுத்து நடராசன் மாளிகைத் திறப்பு விழா ... ... 42

பாவேந்தர் விருது, திரு.வி.க. விருது ... ... 46

தொழிலாளர் இயக்கம் குறித்து திரு.வி.க. ... ... 47

இந்த இதழுடன் இலவச இணைப்பு

## சொன்னதைச் செய்வோம்

(நீதி நிலை அறிக்கை மீதான சட்டமன்ற விவாதங்களுக்கு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அளித்த பதிலுரை)



# திரைப்படத் தொழில் ஒரு கலங்கரை விளக்கு

மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. ஆர். வெங்கட்ராமன்

"திரைப்படங்களில் புகுத்தப்படும் ஆபாசம் (செக்ஸ்) மற்றும் வன்முறைக் காட்சிகள் சமுதாயத்தைப் பெரிதும் பாதிக்கின்றன.

''திரைப்படத்தில் வரும் வன்முறையைத் தூண்டும் காட்சிகள், திரைப்படங்களில் இடம் பெறும் வன்முறைக் காட்சிகள், பார்ப்பவர்கள் மனதையும் பாதிக்கின்றன. என்பதை ஆராய்ச்சியாளர்கள் நிருபித்து இருக்கிறார்கள்.

''சமுதாயத்தில் நடைபெறும் வன்முறைகளுக்கும், திரைப்படத்தில் வரும் இதுபோன்ற காட்சிகளுக்கும் நேரடித் தொடர்பு இருக்கிறது. திரைப்படம் வெற்றி விழாவைக் கொண்டாட வேண்டும் என்பதற்காக, வன்முறை மற்றும் ஆபாசக் காட்சிகளைப் பொழுதுபோக்கு என்ற பெயரில் சேர்ப்பதைத் தவிர்க்க வேண்டும்.

''வன்முறைக் காட்சிகளைப் பார்த்துப் பார்த்து ஒரு கால கட்டத்தில் மக்களும் அதற்கு அடிமையாகி விடுகிறார்கள். எனவே, வேண்டத்தகாத இந்தக் காட்சிகளுக்குப் பட அதிபர்கள் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

''இந்தக் காட்சிகளுக்குத் தடை கொண்டு வருவதைக் காட்டிலும், படஅதிபர்களே சுயகட்டுப்பாட்டை வகுத்துக் கொண்டு செயல்பட்டால்தான் இதனை நடைமுறைப்படுத்த முடியும்.

''திரைப்படத் தொழில் ஒரு கலங்கரை விளக்கு போன்றது. தொலை தூரங்களில் கிராமப் புறங்களில் உள்ளவர்களுக்கும் எட்டும் தகவல் தொடர்புச் சாதனம் திரைப்படம்; கலங்கரை விளக்கு போல மக்கள் மத்தியில் நல்ல பண்புகளை வளர்த்து, நாட்டுக்கு நலன் தரும் நல்ல கருத்துக்களைக் கொண்ட தரமான படங்களைப் பட அதிபர்கள் தயாரிக்கவேண்டும்.

''விருது வாங்குவது எவ்வளவு முக்கியமோ, அதைப்போல தேசிய மற்றும் சர்வதேசப் புகழைப் பெறுவதற்கான படங்களைத் தயாரிக்க வேண்டும். திரைப்படத் தொழிலுக்கு ஒளிமயமான எதிர்காலம் உள்ளது.

''தொலைக்காட்சி மற்றும் வீடியோ, தொழில் நுட்பங்கள் வளர்ந்துவிட்டாலும், திரைப்படத் தொழில் அதன் மதிப்பை இழந்துவிடவில்லை. கடந்த 75 ஆண்டுகளாகச் சமுதாய மக்களிடம் தொடர்ந்து பிரபலமாகிக் கொண்டு இருக்கிறது.

''இந்தியா முழுவதும் உள்ள 13 ஆயிரம் திரைப்படக் கொட்டகைகளில் தினமும் 3 கோடி மக்கள் திரைப்படம் பார்க்கிறார்கள். தமிழ்ப்படங்களின் வெற்றிக்கு அதன் கதை வசனம் காரணமாக அமைகிறது.

''மறைந்த முதல் அமைச்சர் அண்ணா, தற்போதைய முதல்-அமைச்சர் கருணாநிதி போன்றவர்கள் இந்தத் துறையில் தனி இடத்தைப் பெற்றுள்ளனர்.

''நடிப்பைப் பொறுத்தவரை முன்னாள் முதல்-அமைச்சர் எம்.ஜி.ஆர்., சிவாஜிகணேசன் ஆகியோரின் பெயர்கள் தமிழ்நாட்டில் ஒவ்வொரு வீட்டிலும் ஒலிக்கும் வகையில் பாராட்டுப் பெற்றவர்கள்.

''திரைப்படத் தொழில் வளர்ச்சிக்குச் சோராப் மோடி, எஸ்.எஸ்.வாசன், கே.சுப்பிரமணியம், ஏவிஎம்., மெகபூப்கான், வி.சாந்தாராம், பீமல்ராய், பிரிதிவிராஜ், ராஜ்கபூர், எல்.வி.பிரசாத், நாகிரெட்டி, சத்யஜித்ரே, மிரினால் சென் ஆகியோர் சிறந்த தொண்டாற்றி உள்ளனர்.

''பட இயக்குனர்களில் கே.பாலசந்தர் போன்றவர்கள், கவிஞர்களில் கண்ணதாசன் போன்றவர்கள், இசை அமைப்பாளர்களில் இளையராஜா போன்றவர்கள் தேசிய அளவில் புகழ் பெற்றுள்ளனர்.

''நடிகர்களில் ராஜ்கபூர், நர்கீஸ், திலீப்குமார், அசோக்குமார், பிரேம்நசீர், உத்பால்தத், குருதத், மீனாகுமாரி ஆகியோர் தேசியக் கலைஞர்களாக வளர்ந்தவர்கள். லதா மங்கேஷ்கர், முக்மது ரபி, ஆர்.டி.பர்மன் ஆகியோர் திறமைமிக்க கலைஞர்கள். சத்யஜித்ரே, மிரினால்சென், அடூர்கோபாலகிருஷ்ணன் ஆகியோர் உலகப் புகழ்பெற்ற கலைஞர்களின் வரிசையில் இடம் பெற்றுள்ளனர்.''

—சென்னையில் திரைப்படப் பவன விழாவை 16-4-89 அன்று தொடங்கி வைத்து ஆற்றிய உரையிலிருந்து.

# ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு!

மேதகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் திரு சங்கர் தயாள் சர்மா

"அகில இந்திய அளவில் மதக் கலவரங்கள் நடைபெற்று வருகின்றன. அது தொடர்பாக, பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் ஆற்ற வேண்டிய பணிகள் என்ன என்று என்னிடம் இங்கு கருத்துக் கேட்டனர். காந்திஜி, மதக் கலவரங்களைத் தடுக்க தன் உயிரையும் கொடுத்த பிறகும் கூட இன்னமும் நாடு முழுவதும் ஜாதி, மத, இன வேற்றுமை என்ற கொடிய 'வைரஸ் நோய்' பரவிக் கொண்டே இருக்கிறது.

''இதற்கு முக்கியக் காரணங்களில் ஒன்று நமது கல்வி முறையில் உள்ள குறைகளாகும். நமது கல்வி முறை வருவாயைப் பெருக்கவும், வேலை வாய்ப்பை ஏற்படுத்தவும்தான் முக்கியமாகப் பயன்படுகிறது. கலாசாரம், மனித நேயம், மனித சிந்தனை ஆகியவற்றை நமது கல்வி முறை கொடுப்பதில்லை. தவிர, எங்கு தனி மனித உரிமை மறுக்கப்படுகின்றதோ, அங்கு மத, இனக் கலவரங்கள் ஏற்படும். இந்த நிலையில் ஜனநாயக நாட்டில் மக்களுக்குத் தங்களது உரிமை குறித்து அதிக உணர்வு இருப்பது இயற்கை.

''காந்திஜி, ஹரிஜன மக்களின் நல்வாழ்வையே முக்கிய நோக்கமாகவும், முக்கியக் கொள்கையாகவும் கொண்டிருந்தார். மனிதர்களிடையே சமுதாய, பொருளாதாரக் கல்வி வித்தியாசங்கள் மறையவேண்டும். நமது நாட்டில் அனைவருக்கும் சம அளவு அரசியல் உரிமை வழங்கப்பட்டிருந்தாலும், இன்னமும் அனைவரும் சமமான வளர்ச்சி பெறவில்லை. நல்ல முறையில் அதிகாரத்தில் உள்ளவர்கள்கூட தங்கள் அதிகாரத்தைச் சுய லாபத்துக்காகப் பயன்படுத்துவதாலும் இத்தகைய கலவரங்கள் தோன்றுகின்றன.

''இனக் கலவரங்களுக்கு மற்றொரு காரணம் அரசியல்வாதிதான் என்று கூறுவேன். அவர்கள் தங்கள் சொந்த லாபத்துக்காக வகுப்பு மோதல்களைத் தூண்டிவிடுகின்றனர். படித்தவர்கள் மத்தியில் மாற்றம் ஏற்படவேண்டும். தங்களைவிடக் கீழாக இருப்பவர்களுக்கு உதவும் வகையில் மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளவேண்டும்.

''மற்றவர் பொருளை எடுத்துக் கொள்பவன் மட்டும் சுரண்டல்வாதி அல்ல; தன்தேவைக்கு மேல் சேர்த்துக் கொள்ளுபவனும் சுரண்டல்வாதிதான்'' என்று காந்தி சொல்லியதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். நாம் நம்முடைய கல்விமுறையில், கலாசாரம், நன்னெறி ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் தர வேண்டும்.

''ஆரம்பக் கல்விக் கட்டத்திலேயே சமுதாய உணர்வை மாணவர்களுக்குப் புகட்ட வேண்டும். தாங்கள் சமுதாயத்தில் ஓர் அங்கம்; சமுதாயமின்றித் தங்களால் வாழ முடியாது என்ற உணர்வை இளம் வயதிலேயே மாணவர்களிடையே ஏற்படுத்த வேண்டும்.

''பொருளாதாரத்தில் ஒருவன் வளரும்போது மற்றவர்கள் பொறாமை கொள்வது இயல்பு. இது தனி நபர்களுக்கு மட்டுமின்றி, நாடுகளுக்கும் பொருந்தும். உலகச் சந்தையில் எந்தவிதப் போட்டியுமின்றி மற்றவர்களைச் சுரண்டவேண்டும் என்ற எண்ணமும் உள்ளது. எனவே நமது முன்னேற்றத்தைத் தடுக்க நினைக்கிறார்கள்.

''இந்தியாவில் இன, சமூகக் கலவரங்களைத் தூண்டுவது மிகவும் எளிது என்பதை உணர்ந்துதான் அதனைச் செயல்படுத்துகிறார்கள். இந்தியாவில் பஞ்சாபில் இந்துக்களுக்கும், சீக்கியர்களுக்குப் இடையே மோதல்கள் ஏற்படும் என்று எவரேனும் எண்ணியிருக்க முடியுமா?

''வேதங்களை மறந்துவிட்டோம். இஸ்லாமியத்தை மறந்துவிட்டோம். ஒவ்வொருவருக்கும் மதத்தின் அடிப்படைத் தத்துவங்களைக் கற்பிக்கவேண்டும். நம்முடைய கலாசாரம், ஒழுக்கம் ஆகியவை போதிக்கப்படவேண்டும்.

''ஒவ்வொருவருக்கும் அவர்களின் தாய் மொழிதான் தேசியமொழி. தமிழர்களுக்குத் தமிழ் என்பது போல, கேரள மாநிலத்தவருக்கு மலையாளம், மகாராஷ்டிர மாநிலத்தவர்களுக்கு மராட்டியம் தேசிய மொழியாகும். இந்தி, நாட்டு மக்களிடையே ஒரு இணைப்பு மொழியாகத்தான் இருக்க முடியும். ஒரு மொழியைப் பேசாத மக்கள் மீது, அந்த மொழியைத் திணிக்கும் பேச்சுக்கே இடமில்லை எனினும், பல்கலைக் கழகப் படிப்பை முடித்துச் செல்லும் மாணவர்கள் மற்ற மொழிகளைப் படித்தால், அவற்றின் இலக்கியத்தையும், மற்ற விஷயங்களையும் அறிந்து கொள்ள வசதியாக இருக்கும்.

''பட்டங்களைப் பெறுவதுடன் கல்வி முடிந்துவிடவில்லை. அறிவியலையும், தொழில் நுட்பத்தையும் புறக்கணிக்கக்கூடாது. தேவைப்படும் இடங்களில் அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

''தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்கள், தமிழ் மொழியை நாடு முழுதும் பரப்பவேண்டும்., அப்போது தான் அதன் சிறப்புகளை மக்கள் அறிந்து கொள்ள முடியும்.''

**—மதுரை, காந்தி கிராம கிராமியப் பல்கலைக் கழகத்தின் 11-வது பட்டமளிப்பு விழாவில் (9-4-89) ஆற்றிய உரையிலிருந்து.**

### மே நாள்

தந்தை பெரியார் அவர்கள் தான், ரஷ்யாவுக்குச் சென்று வந்ததும் தொழிலாளர்நலனில்பெரிதும்ஆர்வங் கொண்டு முதன் முதலாக மே நாள் கொண்டாடினார்.





# ஏழைக் குடும்பங்களுக்கு இலவச அரிசி

தமிழ்ப் பெருங்குடி மக்களின் புத்தாண்டுத் திருநாளில் ஏழை எளியோரின் இல்லமெல்லாம் மகிழ்ச்சி பொங்கிட, ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்ற வாக்கு நினைவாகிட தமிழகம் முழுவதும் ஏறத்தாழ 75 இலட்சம் ஏழைக் குடும்பத்தினர் 14.4.'89 அன்று 5 கிலோ இலவச அரிசி பெற்றனர். இதையொட்டி தமிழகத்தின் தலைநகராகிய சென்னையில் துறைமுகம் தொகுதி வடக்கு கடற்கரைச் சாலை 3-வது தெருவில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் இத்திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள்.

தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கிய இந்நிகழ்ச்சிக்கு தமிழக அரசு தலைமைச் செயலாளர் திரு. எம். எம். இராஜேந்திரன், இ.ஆ.ப., தலைமை வகித்தார்கள். கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திரு.ரெ. ஆறுமுகம், இ.ஆ.ப., வரவேற்புரை நிகழ்த்தினார்கள்.

மாண்புமிகு கூட்டுறவு மற்றும் உணவு அமைச்சர் திரு. ஆற்காடு நா.வீராசாமி, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் திரு.எஸ். தங்கவேலு, மாநிலங்கள் அவை உறுப்பினர்கள் திரு.முரசொலி மாறன், திரு.டி.ஆர்.பாலு ஆகியோர் உரையாற்றினார்கள்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஏழைக் குடும்பங்களுக்கு இலவச அரிசியை வழங்கி விட்டு, உரையாற்றும்போது,

''இந்த நாளில் பேரறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி கூறுகின்ற – நான் இதயத்தில் பதிய வைத்துக் கொண்டிருக்கின்ற 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்ற குறிக்கோள் வெற்றியடைய வேண்டும் என்பதற்காக நாம் பயணம் நடத்துகின்ற பல படிகளில் ஒன்றாக இலவச அரிசி வழங்குகின்ற பணியினை மேற்கொண்டிருக்கின்றோம்.

இன்று முந்நூறு ரூபாய் வருமானம் அதற்குக் குறைவாகவும் பெறுகின்ற குடும்ப அட்டைகள் வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு சற்றொப்ப எழுபத்து ஆறு லட்சத்துக்கு மேற்பட்டவர்களுக்கு தமிழக முழுவதும் இலவசமாக ஐந்து கிலோ அரிசி வழங்கப்படுகிறது. இங்கே விழாத் தலைவர் நம்முடைய தலைமைச் செயலாளரும், உணவு அமைச்சரும் சுட்டிக்காட்டியதைப் போல நகர்ப்புறங்களிலே உள்ள நியாய விலைக் கடைகளின் வாயிலாக மூவாயிரத்து எழுநூற்றி ஐம்பத்து இரண்டு இடங்களிலும், கிராமப்புறங்களிலே உள்ள நியாய விலைக்கடைகளின் வாயிலாக பதினேழாயிரத்து முந்நூற்றி எண்பத்திரண்டு இடங்களிலும் இந்த அரும் பணி இன்றைக்கு இந்த அரசினால் மேற்கொள்ளப்பட்டு ஆங்காங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது'' என்று குறிப்பிட்டார்கள்.

**இலவச அரிசி வழங்கும் திட்டத்தை அமைச்சர்கள், சட்டமன்றப் பேரவைத் தலைவர், பேரவைத் துணைத் தலைவர், முதல்வரின் பாராளுமன்றச் செயலர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், நகர்மன்றத் தலைவர்கள், ஒன்றியப் பெருந்தலைவர்கள், ஊராட்சித் தலைவர்கள் ஆகியோர் தமிழகம் முழுவதும் தொடங்கி வைத்தார்கள்.**

—அ. மருதவிநாயகம்



## மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின்

# மே நாள் செய்தி

**மே** நாள் - மேதினியெங்கும் கொண்டாடப்படும் தொழிலாளர்களின் திருநாள்.

ஒரு நூற்றாண்டுக்கு முன்பு அமெரிக்க நாட்டில், 'ஒரு நாளைக்கு எட்டுமணி நேர வேலை' என்பதைச் சட்டமாக்க உழைப்பாளி மக்கள் உரிமைக் குரல் கொடுத்த நாள்! இப்படி உரிமைக் கிளர்ச்சியில் ஈடுபட்ட தொழிலாளர்கள் அடக்குமுறைக்கு ஆளாகி, இரத்தக்களறி, சிறைவாசம், தூக்குக் கயிறு என்று பல சோதனைகளுக்கு ஆட்பட்டனர். விளைவு- விழிப்புற்ற தொழிலாளர் உலகு புதிய எழுச்சியுற்றது.

பாடுபட்டுப் பாடுபட்டுப் பார் உயர வழி வகுத்த உழைப்பாளி மக்களின் உயர்வைப் போற்றும் நாளாக மே நாள் இப்பொழுது உலகெங்கும் கொண்டாடப் படுகிறது.

தொழிலாளர் நாளான மே நாளை, கழக அரசு தான் ஊதியத்துடன் கூடிய விடுப்பு நாளாக்கியது.

ஆர்க்கின்ற இயந்திரங்களும், அளவற்ற தொழிற் பெருக்கமும் நாட்டில் உருவாக்கும் தொழிலாளர் வாழ்வு சிறக்க வழிவகுப்போம்! துணை நிற்போம்!

பேரறிஞர் அண்ணா சொன்னார்:- ''சாதாரண மனிதனை உயர்த்தும் பணியில் நாம் எங்கிருந்தாலும் ஈடுபட வேண்டும். அந்த மனிதன்தான் ஒரு நாட்டின் முதுகெலும்பாய் இருப்பவன்.

புன்னகை பூக்கும் நிலம் நோக்கும் ஏழை மனிதனை- குடிசையில் வாழும் சாமான்ய மனிதனை-தனது குழந் தைகளின் எதிர்காலம் பற்றி ஏங்கும் மனிதனை முன் னேற்றும் புனிதப் பணியே நம் பணி''.

அந்தச் சாதாரண மனிதனுக்கு வாழ்வு அளிக்கும் வகையில்தான் மே முதல் நாள்-

சைக்கிள் ரிக்ஷாக்களுக்கு மோட்டார் பொருத்த மானியம்,

ஆட்டோ ரிக்ஷா, டாக்சி வாங்க அரசு உதவி வழங்கும் திட்டம் துவங்குகிறது.

எல்லா வகையிலும் தொழிலாளர் உரிமை சிறக்க உறுதுணையாக இருக்கும் அரசு தமிழக அரசு.

காண்பதெல்லாம் தொழிலாளி செய்தான்! அவன் காணத் தகுந்த பெருமையை-உயர்வை தேடிக் கொடுப்போம்.

''தொழில் வளர்ப்போம்!
தொழிலாளர் நலங்காப்போம்!''

என்ற சூளுரையை மே நாளில் ஏற்போம்!



# உலகத் தொழிலாளர் உரிமை போற்றும் திருநாள்

*மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர்*

## திரு. பொன். முத்துராமலிங்கம்

**மே நாள்**

உலகத் தொழிலாளர் இயக்கங்களின் உரிமையைப் போற்றும் திருநாள்.

மே நாளின் வரலாறு ஒரு நூற்றாண்டை எட்டியதாகும்.

*1884*-ஆம் ஆண்டு அக்டோபர் 7-ஆம் நாள் அமெரிக்க நாட்டிலுள்ள தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு *1886* மே முதல் நாள் முதல், ஒரு நாளைக்கு எட்டு மணி நேர வேலை சட்டப்பூர்வமாக்கப்பட வேண்டுமென்று முடிவு செய்தது. இதற்கெனத் தீர்மானமும் நிறைவேற்றியது.

இந்தத் தீர்மானத்தின்படி அமெரிக்கா, கனடா நாடுகளில் உள்ள தொழிற் சங்கங்கள் மே முதல் நாள் எட்டு மணி நேர வேலைக்கு நீண்டவேலை நிறுத்தத்தில் ஈடுபட முடிவு செய்தன.

*1886*-ஆம் ஆண்டு மே முதல் வேலை நிறுத்தப்போராட்டம் தொடங்கியது. அந்த வேலை நிறுத்தம் அதுவரை தொழிற்சங்க இயக்கம் கண்டிராத போராட்டமாக விளங்கியது.

வேலை நிறுத்தத்தின் மையமாகச் சிகாகோ நகரம் விளங்கியது. பால்டிமோர். வாஷிங்டன், மில்லாக்கி, சின்னாட்டி, செயிண்ட் லூயிபிட்ஸ் பார்க், டெட்ராய்ட் நகரங்களிலும் பிற நகரங்களிலும் வேலைநிறுத்தம் நடைபெற்றது. ஆனால், சிகாகோ நகரில் வேலைநிறுத்தம் உச்சக்கட்டத்தை எட்டியது.

ஹே மார்கட் என்ற இடத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியால் அந்தப்பகுதி முழுவதும் தொழிலாளர்களின் குருதி கொட்டியதால் ஈரமாகியது. அடக்குமுறைக்கு அளவே இல்லை. 'சிறை வாசம்' தூக்குக்கயிறு என்பது தொழிலாளர் தலைவர்களுக்குக் கிடைத்த பரிசு'. அடக்குமுறையாக வெகுண்டது உழைப்பாளர்களின் உலகம். தொழிற் சங்க இயக்கத்தில் புதியவேகம், எழுச்சி. இது உலகு எங்கும் உள்ள தொழிலாளர்களை விழிப்படையச் செய்தது. ஒரு நாளைக்கு எட்டு மணி நேர வேலை என்ற உழைப்பாளி மக்களின் உரிமைக்குரல் உலகின் பலபாகங்களில் கேட்கத் தொடங்கியது.

மீண்டும் *1888*-ஆம் ஆண்டில் அமெரிக்கத் தொழிலாளர்கள் கூட்டமைப்பு செயிண்ட் லூயிநகரில் மாநாடு நடத்தியது. அதில் ஒரு நாளைக்கு எட்டு மணி நேர வேலை என்பதை வலியுறுத்தத் தீர்மானிக்கப்பட்டது. இந்த இயக்கத்தை அரசியல் முறையில் மே 12-ஆம் நாள் நடத்துவது என்ற வழக்கம் தொடர்ந்தது.

அமெரிக்கத் தொழிலாளர்கள் தங்கள் உரிமைக்குக் குரல் கொடுப்பதை உணர்ந்து உலகத் தொழிலாளர்கள் அனைவரும், மே முதல் நாள் உழைப்பாளி மக்களின் உரிமையை உணர்த்தும் நாளாகக் கொண்டாடத் தலைப்பட்டனர்.

1889-ஆம் ஆண்டு அமெரிக்கத் தொழிலாளர்கள் கூட்டமைப்பு தொழிலாளர்களின் உரிமை நாளாக மே முதல் நாளைக் கொண்டாட முடிவெடுத்தது. இதனை உலக நாடுகள் பலவும் பின்பற்றத் தொடங்கின.

அமெரிக்க நாட்டில் 1886-ல் 'ஹே மார்க்கெட்' நிகழ்ச்சி நடைபெற்றாலும் 1889 முதல்நாள் உலகநாடுகள் பல வற்றிலும் மே முதல் நாளை உழைப்பாளி மக்களின் உரிமை நாளாகக் கொண்டாடும் நிலை ஏற்பட்டது.

எனவே, உலகம் முழுவதும் 'மே-முதல்நாள் தொழிலாளர் நாளாக' மாறி ஒரு நூற்றாண்டு நிறைவடைகிறது.


தமிழ்நாட்டில் பேரறிஞர் அண்ணா தலைமையில் தி.மு.க. அரசு அமைந்த பிறகுதான் மே நாள் ஊதியத்துடன் கூடிய விடுப்புநாளாக அறிவிக்கப் பட்டது அனைவரும் அறிந்த செய்தி.

இன்றைய தமிழக அரசு ''வாழ்க தொழிலாளர், வளர்க தொழில்' என்ற கோட்பாடுடன் இயங்கும் அரசாகும். தொழிலாளர் நலங்காக்கும் அரசு இது என்பதை உழைப்பாளர் மக்கள் அனைவரும் உணர்வர்.

தமிழ்ச் சமுதாயத்தை வாழ்விக்கும் சமூக விஞ்ஞானியான தலைவர் கலைஞர் தலைமையில் உள்ள தமிழக அரசு, பாடுபட்டுப் பாடுபட்டுப் பார்உயர வழிவகுத்த பாட்டாளிகள் நலங்காக்கும் நல்லரசு ஆகும்.

உழைப்பாளி மக்களின் உரிமைத் திருநாளான மேநாளில் தொழிலாளர் நலங்காக்கும் பணிகளில் உறுதுணையாக நிற்போம் என்ற உறுதியைத் தொழிலாளர் சமுதாயம் அனைத்துக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாழ்க தொழிலாளர்...!
வளர்க தொழில் ...!



1

1 சர். பிட்டி. தியாகராயர் அவர்களின் 138-வது பிறந்த தின விழாவை முன்னிட்டு (27.4.89) சென்னை மாநகராட்சி வளாகத்திலுள்ள சர். பிட்டி. தியாகராயர் அவர்களின் திருவுருவச்சிலைக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் மாலை அணிவித்தார்கள்.


2 35-வது கைத்தறிக் கண்காட்சி விழாவினை, சென்னையில் 23.4.89 அன்று மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் திறந்து வைத்து, கண்காட்சியைப் பார்வையிட்டார். மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு. எஸ். தங்கவேலு அவர்கள் உடனிருந்தார்.

3 மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு. தமிழ்க்குடிமகன் அவர்களும், மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. பொன். முத்துராமலிங்கம் அவர்களும் சென்னையில் நடைபெறும் கைத்தறி விழா '89-ல் 26.4.89 அன்று கலந்து கொண்டு கைத்தறிக் கண்காட்சியினைப் பார்வையிட்டார்கள்.

2



3



# அறிவிப்புகள் ஆக்கப்பணிகள்

● நடப்பாண்டில் தொழிற் கல்லூரிகளில் சேர நுழைவுத் தேர்வு எழுத விண்ணப்பம் செய்வதற்கான தகுதி மதிப்பெண்களில் மாற்றம் இருக்காது. +2 பொதுத் தேர்வில் மூன்றாம் பகுதியில் 70 சதம் எடுத்திருக்கவேண்டும் என்ற நிலையே நீடிக்கும்.

● 20 சத இட ஒதுக்கீடு அளிக்கப்பட்டுள்ள பிற்பட்ட வகுப்பினருக்கும், சீர்மரபினருக்கும் இது பொருந்தும். ஆனால் பழங்குடியினருக்கும், தாழ்த்தப்பட்டோருக்கும் இது பொருந்தாது.

● வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ், குடிநீர்ப் பணிகளுக்காக தமிழ் நாட்டில் மேலும் குழாய்க் கிணறுகளைத் தோண்டுவதற்கு குஜராத்திலிருந்து துரப்பணக் கருவிகள் கொண்டுவர தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஏற்பாடு செய்து வருகிறது. தற்போது வாரியத்திடம் உள்ள 215 துரப்பணக் கருவிகளும் இப் பணிக்குப் பயன்படுத்தப்படும்.

தமிழ்நாட்டில் வறட்சியில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ரூ. 12.50 கோடி செலவில் 5,000 குழாய்க் கிணறுகள் தோண்டுவதற்கான திட்டத்தை அரசு அனுமதித்துள்ளது.

● வரும் கல்வி ஆண்டில் மாணவர்களுக்கு இலவசமாக அரசு வழங்கும் புத்தகங்கள் காலத்தில் கிடைப்பதற்காக இவ்வாண்டு 12.4.89 முதலே புத்தகங்களை மையங்களுக்கு அனுப்பும் பணி துவங்கப்பட்டுள்ளது.

1987-88 ஆம் ஆண்டு ரூ.11.85 கோடி மதிப்புள்ள புத்தகங்களும், 1988-89 ஆம் ஆண்டில் ரூ.16 கோடி மதிப்புள்ள புத்தகங்களும் இலவசமாக வழங்கப்பட்டன. இவ்வாண்டு ரூ.19.66 கோடி மதிப்புள்ள புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. ஒரு கோடியே 17 இலட்சம் மாணவர்களில் 64 இலட்சம் பேருக்கு இலவசப் புத்தகங்கள் வழங்கப்பட உள்ளன.




● அரசு ஊழியர்கள் பணியிலிருந்து ஓய்வு பெற்ற பிறகு ஓய்வூதியம் பெற்று வருகின்றனர். மின்வாரியத்தில் ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. அனைத்துப் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கும் ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட காலமாக இருந்து வருகிறது. அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தை இந்த அரசு மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்கிறது.

மத்திய அரசின் ஒப்புதல் பெற்றவுடன் இந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படும்.

1988 மார்ச் 15,1988 செப்டம்பர் 12 ஆகிய நாட்களில் நாடு தழுவிய அளவில் முன்அறிவிப்பு அளித்த பொது காரியங்களுக்காக வேலை நிறுத்தம் செய்யப்பட்டது. அதில் கலந்து கொண்ட தொழிலாளர்களுக்குப் போக்குவரத்துக் கழகத்தின் ஊக்கத்தொகை மறுக்கப்பட்டிருக்கிறது. சில கழகங்களில் அத்தகைய தொழிலாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு நாள் வேலை நிறுத்தத்தின்போது பணிக்கு வராதவர்களை அவர்கள் விடுப்பில் இருந்ததாகக் கருதப்பட்டு இந்தப் பிரச்னை தீர்க்கப்படும்.

பணியில் இருக்கும் தொழிலாளி இறந்துவிட்டால் அவர்களின் ஈமக் கடனுக்கு அளிக்கப்பட்டுவரும் மானியம் ரூ.200 லிருந்து ரூ.300 ஆக உயர்த்தப்படும். ஊழியர்கள் பணி செய்து கொண்டிருக்கும் பொழுது மற்றவர்களின் வன்முறைச் செயல்களால் இறந்துவிட்டால் அவர்களது வாரிசுகளுக்கு அளிக்கப்பட்டு வந்த தொகை ரூ. 5000லிருந்து ரூ.10,000 ஆக உயர்த்தப்படும்.

போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டக் கூடிய திட்டம் மேலும் எல்லாப் போக்குவரத்துக் கழகங்களிலும் தீவிரமாக்கப்படும். அவர்களுக்கு வழங்கப்படக் கூடிய கடன் 120 தவணைகள்தான் திருப்பிச் செலுத்துவதற்காக இப்போது வழங்கப்படுகிறது. அவர்களின் நீண்டநாள் கோரிக்கைக் கேற்ப, தவணையின் அளவு 180 மாதமாக உயர்த்தப்படுகிறது.




● உலகின் பல்வேறு மொழி, அறிவியல், கலை, இலக்கியம் போன்றவற்றின் சிறப்புகளைத் தாங்கி தமிழில் வெளிவரும் 'கூரியர்' மாத இதழுக்கு ஆண்டுதோறும் அரசின் சார்பில் ரூ.80,000 நன்கொடையாக வழங்கப்படும் என மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 11.4.89 அன்று அறிவித்தார்.

## சென்னையில்
## சுவாமி சிவானந்தர் சிலை
## திறப்பு விழா

சென்னையில் தொலைக்காட்சி நிலையம் அமைந்துள்ள ஆதம்ஸ் சாலைக்கு, சுவாமி சிவானந்தர் சாலை என்று பெயர் சூட்டிய தமிழக அரசு, சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு அருகில் சிவானந்தரின் திருவுருவச் சிலையைத் திறந்ததற்காக, சிவானந்த தபோவனம், சமயஜோதி நிறுவனங்கள் தமிழக அரசுக்குப் பாராட்டினையும் நன்றியையும் தெரிவித்துள்ளன.

மார்ச் திங்கள் 13-ஆம் நாள் அன்று, மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் திரு. கே. பி. கந்தசாமி அவர்கள் சிவானந்தரின் திருவுருவச் சிலையைத் திறந்து வைத்தார். ரிஷிகேசம் சிவானந்தாசிரம தெய்வநெறிக் கழகத்தின் தலைவர் சுவாமி சிதானந்தர், பொருளாளர் சுவாமி தயானந்தர் மற்றும் பலர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.











[தலைமைச் செயலகத்தில் 15-4-1989 அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் மாநாடு]



# ஏழையர் நலம்பெறத் திட்டம் தீட்டுவோம்

## –அவர்கள்


# இனியபயன் உடன்பெற வழிகள் காணுவோம்

## முதல்வர் கலைஞர்

உங்கள் அனைவரையும் இந்தச் சிறப்பான கூட்டத்தில் சந்திப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த அரசு உருவாகி சற்றேறொப்ப 75 நாட்கள் முடிவுற்று - உங்களையெல்லாம் அழைத்துப் பேசுகிற ஒரு நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்த மாநாட்டின் முக்கியமான நோக்கமே - மாவட்டங்களில் அதிகாரிகள் - ஆட்சித்தலைவர்களானாலும், காவல் துறை அதிகாரிகளானாலும், விரைந்து ஆக்கப்பூர்வமாக செயல்பட வேண்டும் என்ற ஊக்கத்தை ஊட்டுவதற்காகத்தான்! உங்களையெல்லாம் அழைத்து நீங்கள் வேகமாகச் செயல்படவேண்டுமென்று சொல்வதற்கு முன்னால் - அப்படிச் சொல்கிறவர்கள் வேகமாகச் செயல்பட்டிருக்கவேண்டுமல்லவா? அதற்கு சில எடுத்துக்காட்டுகளை - சற்றேறொப்ப இந்த 75 நாட்களில் அமைச்சர்களாகிய நாங்கள், இங்கே தலைமைச் செயலகத்தில் உள்ள அதிகாரிகள் செயல்பட்டிருக்கிற வேகத்தை உணர்ந்தால் - அதைப்பின்பற்றி நீங்களும் நடப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. நாங்களே செயல்படாமல் இருந்து, நீங்கள் செயல்படவேண்டுமென்று சொல்கிற உரிமை எங்களுக்கு இல்லை. எனவே தான் நாங்கள் செயல்பட்டிருப்பதை - முழுமையான பட்டியலை இங்கே கூற நேரம் இல்லாவிட்டாலுங்கூட - சிலவற்றை நினைவுக்குக்கொண்டு வருகிறேன்.

75,76 நாட்களுக்கு முன்பு இந்த அரசு உருவாக்கப்பட்ட பிறகு, தமிழகத்தில் மங்கிக்கிடக்கிற தொழில் வளத்தைப் பெருக்குவதற்காக, தொழிலதிபர்களையெல்லாம் அழைத்து, அவர்களுடன் கலந்துரையாடி, தொழில் வளம் பெருக என்னென்ன முயற்சிகளை மேற்கொள்ளலாம் என்ற அரிய ஆலோசனைகளைப் பெற்றும், அதன்தொடர்பாக, தலைமைச்செயலக அளவில் நானும், தலைமைச்செயலாளரும், மற்றும் ஆலோசகரும், தொழில்துறை செயலாளரும் கலந்து மற்றும் உள்ள தொழிற்துறையினரோடு தொடர்பு கொண்டு ஒரு நிலையான குழு அமைக்கப்பட, அந்தக்குழுவின் கருத்துக்களை அறிவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.



இந்து அறநிலையத்துறையில், நாம் கடைப்பிடிக்க வேண்டிய பல்வேறு முனைப்பான சீர்திருத்தங்களைப் பற்றியும், அங்கே ஏற்பட்டிருக்கிற முறைகேடுகளைக் களைவதைக் குறித்தும், சமயச் சான்றோர்களை அழைத்து கலந்துரையாடி அதற்கான திட்டங்களை மேற்கொள்ள குழு அமைத்திருக்கிறோம்.

காவேரிப் பிரச்சினை குறித்து கர்நாடக மாநிலத்தோடு பேச்சுவார்த்தை நடத்த, எந்த நேரத்திலே வாய்ப்பு கிடைத்தாலும், அதற்குத் தயாராக இருக்க வேண்டுமென்று, அந்தத் துறையின் இந்நாள் அதிகாரிகள், அந்தத்துறையின் அமைச்சர், மற்றும் முக்கியமான அமைச்சர்கள், அந்தத்துறையிலே இருந்த முன்னாள் பொறியாளர்கள், அதிகாரிகளையெல்லாம் அழைத்துப்பேசி இந்தப் பிரச்சினையில் கர்நாடக மாநிலத்தோடும், மத்திய அரசோடும் எப்படி அணுகுவது என்று பேசியிருக்கிறோம்.

இதற்கிடையே ஒன்பதாவது நிதிக்குழுவின் கூட்டம் நடைபெற்று, தமிழகத்தின் தேவைகளை எடுத்துரைத்து அதிக நிதி ஒதுக்கவேண்டுமென்று வலியுறுத்துகிற நிகழ்ச்சியில் ஒரு நாள் செலவிட்டிருக்கிறோம். சொன்னால் உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கும். பத்திரிக்கையாளர்களுக்குக் கூட ஆச்சரியமாக இருக்கும்.

இந்த 75 நாட்களில் அமைச்சரவைக் கூட்டம் ஏழு முறை நடைபெற்றிருக்கிறது. சில ஆட்சிகளில் ஆண்டு ஒன்றுக்கு ஒருமுறை நடைபெற்றிருக்குமா என்பதேகூட சர்ச்சைக்குரிய கேள்வி. ஆனால் கடந்த 75 நாட்களில் ஏழு முறை அமைச்சரவைக்கூட்டம் நடைபெற்று முக்கியமான முடிவுகள் எல்லாம் எடுக்கப்பட்டிருக்கின்றன.

**STANDING FINANCE COMMITTEE** - நிதி நிலைக் குழு மூன்று நாட்கள் தொடர்ந்துகூடி - பல திட்டங்களை வகுத்திருக்கின்றது. இதற்கிடையே தான் - கவர்னர் உரை, அதற்கான தயாரிப்புப் **பணி**களும், அதைத் தொடர்ந்து பட்ஜெட் உரையும், அதற்கான தயாரிப்புப் பணிகளும் நடைபெற்றிருக்கின்றன.

பட்ஜெட் உரையிலே அறிவிக்கப்பட்ட பல்வேறு திட்டங்களுக்காக, எல்லாத் துறையினரோடும் நானும் அமைச்சர் பெருமக்களும் கலந்து பேசுகிற பல நிகழ்வுகள் இந்த 75 நாட்களுக்குள் தான் நடைபெற்று, அந்தத்திட்டங்கள் எல்லாம் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இந்த நாட்களுக்குள்தான் —இலவசமாக ஐந்து கிலோ அரிசி புத்தாண்டுக்கு வழங்குவதற்கான திட்டத்தை அறிவித்து - அதனை நிறைவேற்றுவதற்கு, மிகுந்த பிரயாசை எடுத்துக்கொண்டு ஒவ்வொரு நாளும் அதிகாரிகளையும், அமைச்சரையும் கலந்தாலோசித்து நேற்றைய தினம் மிக வெற்றிகரமாக தமிழகத்தில், அது நிறைவேறியிருக்கிறது. அதனையொட்டி-இன்றும், நாளையும் மாவட்டஆட்சித்தலைவர்கள், காவல்துறை அதிகாரிகள் மாநாட்டைக் கூட்டியிருக்கிறோம்.

இவ்வளவையும சொல்லக் காரணம் - செயல்பட்டுக் காட்டிய நாங்கள், தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிற நாங்கள், நீங்கள் எல்லாம் செயல்படவேண்டுமென்று உரிமையோடு எடுத்துச் சொல்வதற்காகத்தான் — இந்த மாநாடு கூட்டப்பட்டுள்ளது.

இன்றைய இம்மாநாடு இருவகையில் முக்கியத்துவம் பெற்றதாகும். முதலாவதாக, குடியரசுத்தலைவரின் ஆட்சி முடிந்து மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட கட்சி அரசு அமைத்தபின் நடக்கும் முதல் மாநாடு இதுவே. இரண்டாவதாக, பருவமழை பொய்த்ததினால் ஏற்பட்ட கடும் வறட்சி நிலைமையினை எதிர்கொள்ள வேண்டிய முக்கியமான காலக்கட்டமும் இதுவே.

எனவே, புதிய அரசு மக்களுக்கு அறிவித்திருக்கின்ற திட்டங்களைச் சீரிய முறையில் அமல்படுத்தவும், வறட்சியை முறியடிப்பதற்கான திட்டங்களில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு, அவை செவ்வனே நடைபெறவும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பொறுப்பேற்க வேண்டும்.

இந்த அரசு பொறுப்பேற்றவுடன் முக்கியமாக எதிர்பார்ப்பது நிர்வாகம் செம்மைப்பட வேண்டும்; திறம்பட செயல்பட வேண்டும்; திட்டமிட்டபடி நடக்கவேண்டும் என்பதேயாகும். அரசு ஆணை கையொப்பம் இட்ட அந்த மை உலர்வதற்கு முன்பே, அந்த ஆணையினுடைய - திட்டத்தினுடைய பயன்களை மக்கள் பெற்றுவிட வேண்டும் என்பது இந்த ஆட்சியின் அவா. இவ்வரசு ஏழைகளுக்காக தீட்டும் திட்டங்கள் மூலம் உடனுக்குடன் மக்களுக்கு பயன்கிடைத்திடும் வகையில் நிர்வாகம் நடைபெறவேண்டும். இந்த அரசு, எடுக்கும்முடிவுகள் குறித்த காலத்திற்குள் மக்களைச் சென்றடைய வேண்டிய அளவுக்கு நிர்வாகம் முடுக்கி விடப்பட வேண்டும் என்றும், மக்களுடைய குறைகளை விரைந்து களைந்திட வேண்டுமென்றும் கருதுகிறது. மாவட்ட நிர்வாகத்தில் இருக்கக்கூடிய அனைத்து அதிகாரிகளும் மக்களுடைய தேவைகளை விரைந்து பூர்த்தி செய்யக்கூடிய அளவிலே செயல்படவேண்டும்.



மாவட்ட ஆட்சித் தலைவர்கள், முன்பு பணியாற்றியதற்கும் தற்போது பணியாற்றுவதற்கும் பெருத்த வேறுபாடுகளை மனதில் கொள்ள வேண்டும். ஆங்கிலேயர் கால மாவட்ட ஆட்சித் தலைவர்கள் சட்ட ஒழுங்கு பிரச்சினைகளை மட்டும் கருத்திலேகொண்டு செயல்பட வேண்டுமென்று இருந்தது. இன்று, மக்களுக்குச் செய்ய வேண்டிய வளர்ச்சித் திட்டங்களை உருவாக்குவது, அவற்றைச் செயல்படுத்துவது, பல்வேறு அரசுத்துறைகள் சம்மந்தப்பட்ட வேலைகளை மேற்பார்வை செய்து ஒருங்கிணைத்தல் முதலிய பல பணிகளைச் செய்ய வேண்டியுள்ளது. இவற்றைச் திறம்பட செயல்படுத்தி அதன்மூலம் இந்த அரசு, தான் செய்யும் திட்டங்களின் பயன்களை மக்களுக்கு அடையச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறது. பொதுவாக கிராமப்புறங்களில் பணியாற்றும் அரசு பணியாளர்கள், தலைமையிடத்தில் தங்குவதில்லை என்ற புகார்கள் உள்ளன. இன்னும் சொல்லப்போனால் சட்டம் ஒழுங்கு காக்கும் பொறுப்புகளில் இருக்கக்கூடிய வட்ட ஆட்சியாளர்கள்கூட, அவர்களது தலைமையிடங்களில் தங்குவது இல்லை என்று புகார்கள் வந்துள்ளன. இந்தக் குறைகளையெல்லாம் நாம் களைந்திட வேண்டும். இவற்றையெல்லாம் களைந்திட, மாவட்ட ஆட்சியாளர்கள் பொறுப்புடன் கண்காணிக்க வேண்டும். மேலும், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்ற அரசுப் பணியாளர்களுக்கு ஒரு நல்ல வழிகாட்டியாக விளங்க வேண்டும் என்று அறிவுறுத்த விரும்புகிறேன்.

பல்வேறு மாவட்டங்களிலிருந்து வட கிழக்குப் பருவமழைபெய்யாத காரணத்தால் ஏற்பட்ட நிலைமைகள் குறித்து அறிக்கைகள் பெறப்பட்டுள்ளன. இப்போது நம்முடைய தலையாய கடமைகளை மூன்று கோணங்களில் பார்க்க வேண்டும்.

1. வறட்சிப் பகுதிகளை கண்டறிந்து, நிலைமையைச் சமாளிக்க போர்க்கால நடவடிக்கைகள் போல திட்டமிடப்பட வேண்டும்.

2. வறட்சியின் காரணமாக உணவுப் பொருட்கள் தட்டுப்பாடு இல்லாமல், எல்லா மக்களுக்கும் நியாய விலைக் கடைகள் மூலம் அவைகள் கிடைக்கச் செய்ய வேண்டும்.

3. வறட்சியின் காரணமாக வேலை இல்லாமல் இருக்கக்கூடிய ஏழையெளிய மக்களுக்கு போதிய வேலை வாய்ப்பு அளித்தல் வேண்டும்.

ஏற்கனவே முன் ஏற்பாடாக 5,000 ஆழ்குழாய் கிணறுகள் போடுவதற்கு இந்த அரசு முடிவு செய்து, ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. இது மட்டுமல்லாமல், எந்தெந்த இடங்களில் ஏற்கனவே ஆழ்கிணறுகள் இல்லையோ, அங்கேயெல்லாம் ஆழ்குழாய் கிணறுகள் போடுவதற்கும் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. இருப்பினும் அரசு எதிர்பார்த்த வேகத்தில் இந்தப் பணிகள் நடைபெறவில்லை. இது வருந்தத்தக்கது மட்டுமல்ல; உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டியதாகும். ஏற்கனவே அறிவிக்கப்பட்ட பல திட்டங்கள் ஓராண்டு, ஈராண்டு, மூன்றாண்டுகளுக்கு மேலாகியும் இன்னும் முடிவடையாமல் தேக்க நிலையில் உள்ளன என்பதையும் உங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் ஒருதிட்டம் முடிக்கப்படவில்லையெனில், திட்டச் செலவு அதிகமாகிவிடுவதுடன் அரசு விரும்பும் பலனும் மக்களுக்கு உடனுக்குடன் கிடைக்காமல் போகும்நிலை ஏற்பட்டு விடுகிறது.

இந்த நிலைமைகளை நாம் தவிர்த்தாக வேண்டும். மாவட்ட ஆட்சியாளர்கள் ஒவ்வொரு திட்டப் பணியையும் உன்னிப்பாக கவனித்தல் வேண்டும். திட்டங்களுடைய பயன்கள் மக்களுக்கு கிடைக்கச் செய்ய வேண்டும்.

மாவட்ட ஆட்சியாளர்கள் 15 நாட்களுக்கு ஒரு முறை சம்பந்தப்பட்ட பொறியாளர்கள் கூட்டத்தை கூட்டி, திட்டப் பணிகளை ஆய்வு செய்து, திட்டப் பணிகளை முடித்திடச் செய்ய வேண்டும்.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அனைத்துத் துறைகளுக்கும் வழிகாட்டியாகவும் சிறந்த ஒருங்கிணைப்பு அதிகாரியாகவும் பணி புரிந்தால் இந்த அரசு நினைக்கும் பணிகளை நிச்சயம் திறம்பட ஆற்றிட முடியும்.

நிலத்தடி நீர் இருக்கக் கூடிய சில இடங்களிலேகூட காரணமின்றி மக்கள் அங்கே ஆழ்குழாய் கிணறு போட்டால் சரிப்படாது என்று கூறுகிறார்கள். எந்தெந்த இடங்களில் நீர்வளம் உள்ளது என்பதை விஞ்ஞான ரீதியாக ஆராய்ந்து இருக்கிறோம். அவைகளையெல்லாம் பயன்படுத்தி, திட்டங்களை நிறைவேற்ற வேண்டும். சில இடங்களிலே குடிதண்ணீர் மேல்நிலை தொட்டி இருக்கின்றன. ஆனால் அங்கே போடப்பட்ட ஆழ்குழாய் கிணறு பயனளிக்கவில்லை. சில இடங்களில் ஆழ்குழாய் கிணறுகள் உள்ளன. ஆனால் குடிதண்ணீர் மேல்நிலை தொட்டி இல்லை. இந்தக் குறைகளை எல்லாம் நிச்சயம் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அளவிலே தீர்த்து வைக்க முடியும். இது மாத்திரமல்லாமல், தேவையற்ற காலதாமதம் இந்த மோட்டார் பம்பு செட்டுகள் பழுதுபார்த்தலில் உள்ளது. இந்த கால தாமதங்கள் எல்லாம் தவிர்க்க வேண்டும்.

கிராம அளவிலே, ஊராட்சி ஒன்றிய அளவிலே, கோட்ட அளவிலே மாவட்ட ஆட்சித் தலைவர்கள் குடிதண்ணீர் பிரச்சினைகளை தங்களது அதிகார எல்லைக்குள் தீர்த்து






வைக்க வாய்ப்புள்ளது. இதுபோன்ற தவறுகள் நிகழா வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டியது மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பொறுப்பாகும்.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் குறைந்தது பதினைந்து நாட்களுக்கு ஒரு முறையாவது குடிதண்ணீர் குறித்து சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளுடனும் கலந்து பேசினால் இந்தப் பிரச்சினையை எளிதாகச் சமாளித்துவிட முடியும்.

குடி தண்ணீர் மக்களுக்கு கிடைக்க இந்த அதிகாரிகள் கண்ணும்கருத்துமாக இருந்து செயல்பட வேண்டியது இந்த நேரத்தில் முக்கியமான கடமையாகும்.

பொதுவாக அத்யாவசியப் பொருள்கள் சீராக விநியோகம் செய்யப்பட, நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். குறிப்பாக வறட்சிக் காலத்தில் இப்பணி மிகவும் சிறப்பாகக் கவனிக்கப்பட வேண்டும். மாவட்டத்தின் தேவையைச் சரியாகக் கணக்கிட்டு எல்லா விநியோக மையங்களிலும் தடையின்றி அவை பெறப்படவும், உணவுப் பொருள்களை ஒழுங்காக விநியோகம் செய்யவும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டும். இதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அடிக்கடி ஆய்வு செய்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் விவாதித்து வேண்டிய அனைத்து ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும்.

உணவு வழங்கல் துறையிலே இருக்கக் கூடிய ஊழல்கள் பற்றி விசாரணை செய்து அவைகளை எல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தவிர்த்திட எல்லா நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும். சிவில் சப்ளைக் கார்ப்பரேஷன் கிடங்கிலிருந்து உணவுப் பொருள்கள் எடை குறைபாட்டுடன் செல்லாமல் பார்த்திட வேண்டும். எடை குறைவாக பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படாமல் கவனிக்கப்பட வேண்டும்.

போலி குடும்ப அட்டைகளைக் கண்டுபிடித்து நீக்க வேண்டும். கூடுதல் கட்டணம் வசூலித்தல், போலிப்பட்டியல் தயாரித்தல், கடையை அதிகார பூர்வமின்றி மூடுதல் ஆகிய முறைகேடுகள் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும்.

ஒவ்வொரு மாவட்டத்திலேயும் உணவுப் பொருள்கள், அத்தியாவசியப் பொருள்கள் வழங்குவதிலே மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கண்ணும்கருத்துமாக இருத்தல் வேண்டும். ஏழை எளிய மக்களுக்கு இலவசமாக அரிசி வழங்கிட வேண்டும் என்பது குறித்து பிப்ரவரி மாதத்திலே அறிவித்து இருந்தும், இது சம்பந்தமாக அறிக்கைகளை அரசுக்கு அனுப்

பும்போது அதிகாரிகள் போதுமான கவனத்துடன் செயல் படாமல், சரியான புள்ளி விவரங்கள் தரப்படாமல், ஒரு சில மாவட்டங்களில் குழப்பங்கள் ஏற்பட்டு, கடைசி நேரத்தில் சரி செய்யப்பட்டுள்ளது. இந்த அடிப்படை புள்ளி விவரங் களைக் கூட மாவட்ட நிர்வாகம் சரிவரத் தரவில்லை என் பது மிகவும் வருந்தற்குரியது.


ஒவ்வொரு நியாய விலை கடைக்கும் 'ஏ' ரிஜிஸ்தர் என்று உள்ளது. அதிலே தேவையான விவரங்கள் இருக் கின்றன. அதிலும் தவறுகள் இருக்கின்றன. தவறுகளுக்கு இடம் தராமல் நிச்சயம் அடிப்படைப் புள்ளி விவரங்கள் சரி யாக பராமரிக்கப்பட வேண்டும். இனி வரும் காலத்தில் மாவட்ட நிர்வாகத்தில் முக்கிய பதிவேடுகளை ஒழுங்குற பதிவு செய்து அதில் ஏதும் முறைகேடுகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். எந்தவொரு காரணத்தா லும், எந்தவொரு பொருளும் நியாய விலைக் கடைகளில் இல்லை என்ற நிலைமையை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உருவாக்கக் கூடாது.

வறட்சிக்காலத்தில் வேலை வாய்ப்பின்மையும், வருவாயின்மையும் மிக அதிக அளவில் தென்படும். அவற்றை சமாளிக்க மாவட்ட ஆட்சித் தலைவர்கள் வறட்சி நிவாரண திட்டத்தின் கீழ் அமுல்படுத்தும் திட்டங்களைத் தேர்ந்தெடுப்பதில் மிக்க கவனமாக இருக்க வேண்டும். வறட்சி நிவாரண திட்டத்தின்கீழ் அமுல்படுத்தப்படவுள்ள திட்டங்கள் வேலைவாய்ப்பை பெருக்குவதற்குகந்த வகை யிலோ, அதன் மூலம் முடிந்த அளவு கிராமப்புற பொருளா தாரத்தை ஊக்குவிக்கின்ற வகையிலோ அமைந்திருக்கவேண் டும். ஏற்கனவே அமுலில் உள்ள தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம்,. ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதித் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் மற்றும் ஆதி திராவிடர் கிராமப்புற வீட்டு வசதித் திட்டங் களின் கீழ் போதிய வேலை வாய்ப்பினைப் பெருக்கிட முயற்சிக்க வேண்டும்.

கடுமையான வறட்சியின் காரணமாக கால் நடை தீவ னம் பற்றாக்குறை முதலிய பிரச்சினைகளை சமாளிக்க முன் கூட்டியே திட்டமிட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். அதே வேளையில், வறட்சியினால் ஏற்படக்கூடிய கடுமையான விளைவுகளைச் சமாளிக்க நீண்ட காலத் திட்டங்கள் தேவைப் படுகின்றன. அந்தத் திட்டங்களாவன:—

பாசன வளத்தை ஏற்படுத்துதல்-பெருக்குதல் - புன் செய் சாகுபடி, தரிசு நில மேம்பாடு, எரிப்பதற்கான மரங்கள், கால்நடைத் தீவனங்களைத் திட்டமிடுதல், மண் அரிப்பைத் தடுத்தல், நிலத்தடி நீர்வளத்தைப் பாதுகாத்தல் போன்ற பணிகளாகும்.

மக்கள் பிரச்சினைகளை மனிதாபிமானத்தோடு அணுகி கீழ்க்கண்டவற்றில் உடனடி கவனம் செலுத்த வேண்டும்.



அ) நிலமனைப்பட்டா மற்றும் வீட்டு மனைப் பட்டா தகுதியுள்ளோருக்கு விரைவில் வழங்குதல்;

ஆ) குறைந்தபட்சக் கூலி சட்டத்தை அமுல்படுத்தல்;

இ) பின்தங்கிய கிராமங்களில் வாழக்கூடிய ஏழைகளின் குறைந்த பட்சத் தேவைகளை பூர்த்தி செய்தல்;

தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டமும் -(என்.ஆர். ஈ.பி), ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு-உத்தரவாதத் திட்டமும் (ஆர்.எல்.ஈ.ஜி.பி.), ஒருங்கிணைக்கப்பட்டு தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் (என்.ஆர்.ஈ.பி.) என்கிற புதிய திட்டம் ஒன்று உருவாக்கப்பட இருக்கிறது. மத்திய, மாநில அரசுகளின் சார்பாக மொத்தத்தில் இதற்கு ரூபாய் 120 கோடி செலவாகும்.

அதையன்னியில் வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப் பட்டுள்ளபடி ஆதி திராவிடப் பெருங்குடி மக்களுக்கு காங் கிரீட் வீடுகள் கட்டும் திட்டம் சுமார் ஐம்பது கோடி செலவில் அறிவிக்கப்பட்டுள்ளது.

மகளிர் முன்னேற்றமின்றி சமுதாய மலர்ச்சி இல்லை. ஆகவே மகளிர் நலனைக் கருதி அவர்களுக்கு நல்ல வாய்ப்பும், உரிமையும் அளிப்பது ஒன்றே அவர்களின் விழிப்புணர்வுக்கும், தெளிவுற்ற சிந்தனைக்கும், அடிமை நிலையிலிருந்து விடு தலை பெறுவதற்கும் உரிய வழியாகும். இதனை மனதில் கொண்டு வேலைவாய்ப்புகளில் 30 சதவிகிதம் மகளிருக்கென ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்துள்ளது. பள்ளிகளிலும் முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்புகளில் எழும் அனைத்து ஆசிரியர் பணி இடங்களிலும் மகளிர்களே நியமிக்கப்படுவர்.




ஏழை நடுத்தர வர்த்தகக் குடும்பத்தைச் சேர்ந்த பெண் களுக்கு இளங்கலை பட்டப்படிப்பு வரையில் இலவசக் கல்வி வரும் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும்.

வறுமையில் வாடும் குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் எட்டாம் வகுப்பும் அல்லது அதற்கு மேலும் படித்து தேறி யிருந்தால், அவர்களின் திருமணச் செலவுக்காக ரூ. 5,000- உதவித்தொகை வழங்கப்படும்.

ஏழையெளிய பெண்கள் கர்ப்பவதியாகும் பொழுதும், குழந்தை பெற்ற பின்னரும் உழைக்க முடியாமல் இருப்ப

தால் அவர்களின் ஏழ்மை நிலையைக் கருதி எட்டாவது மாதத்திலிருந்து குழந்தை பெறும் வரையிலும், குழந்தை பிறந்த பின்னர் இரண்டு மாத காலத்திற்கும் மாதம் ரூபாய் 50 வீதம் உதவித்தொகையாக ரூபாய் 200 -வழங்க அரசு நிதிநிலை அறிக்கையிலே நான்கு கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது.

கடந்த காலத்தில், விபத்தில் இறந்தவர்களின் குடும்பத்திற்கு பத்தாயிரம் ரூபாய் நிதிஉதவி அளிக்கப்பட்டதென்றாலும் கூட, அந்த நிதி உதவி, குறிப்பிட்ட சில பிரிவினருக்கு மட்டும், அதுவும் 3,500 ரூபாய் ஆண்டு வருமானத்திற்கு கீழே உள்ளவர்களுக்குத் தான் தரப்பட்டு வந்தது. இப்போது அதனை மாற்றி -அந்த குறிப்பிட்ட சில பிரிவினர்களுக்கு மாத்திரம் என்றில்லாமல் -வருமான உச்சவரம்பு என்ற அளவுகோலையும் நீக்கிவிட்டு-அந்தக் குறிப்பிட்ட பிரிவினர்களோடு மேலும் லாரி, ஆட்டோரிக்ஷா, தனியார் கார், டாக்சி, பேருந்து ஓட்டுனர்கள், எல்லாக் கட்டிட கட்டுமானத் தொழிலாளர்களுக்கும், அவர்கள் விபத்தினால் இறக்க நேரிட்டால்-அவர்களின் குடும்பத்திற்கு ரூபாய் பத்தாயிரம் வழங்கப்படும்.

குடும்பத் தலைவரை இழக்க நேரிடும் ஏழைக் குடும்பங்களுக்கு ரூபாய் 2,000 மானியமாக வழங்கப்படும்.

இப்படிப்பட்ட திட்டங்கள் எல்லாம் பயனளிக்கத் தக்க வகையில் உடனுக்குடன் அந்தத் தொகை பாதிக்கப்பட்டவர்களுக்குப் போய்ச் சேர நடவடிக்கை எடுக்க வேண்டும். கடந்த காலத்தில் ஐந்தாறு ஆண்டுகள் கூட கால தாமதமாகியிருக்கின்றன.

சத்துணவுத் திட்டத்தை மேம்படுத்த 15 நாட்களுக்கு ஒருமுறை ஒரு முட்டை வழங்கப்படுமென்று அறிவித்துள்ளேன். இதனை நல்லமுறையில் செயல்படுத்தி ஊராட்சி ஒன்றியங்களில் கோழிப் பண்ணைகள் நிறுவி, அவைகளின் மூலமாக, முட்டைகள் நியாய விலையில் சத்துணவு மையங்களுக்கு வழங்கினால்-இத்திட்டத்தை மேலும் விரிவுபடுத்தி வாரத்திற்கு ஒருமுறை முட்டை வழங்க இயலும். அதுகுறித்த கருத்துக்களையும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் வழங்க வேண்டும்.

குடும்ப நலத் திட்டம் சிறப்பாக நடைபெற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும்.







சிறு சேமிப்புத் திட்டத்தில் -நிகரச் சேமிப்பில் நான்கில் மூன்று பாகத்தை மத்திய அரசு மாநில அரசுக்குக் கடனாக அளிப்பதால், சிறு சேமிப்பு மாநிலத் திட்டத்திற்கு முக்கிய நிதிஆதாரமாக விளங்குகிறது.

சிறு சேமிப்புக்காக கவர்ச்சிகரமான திட்டங்கள் உள்ளன. சிறு சேமிப்பை கணிசமான அளவுக்கு உயர்த்தி, சிறு சேமிப்புத் திட்ட முகாம்களை தீவிரமாக நடத்துவதன் மூலம், இலக்கை எய்துவது மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பொறுப்பாகும்.

இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில் சாதாரண மக்களுக்குப் பயனளிக்கும் வகையில் ஏராளமான திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இத்தகைய திட்டங்களின் பயன்கள் சாதாரண மக்களை விரைவில் அடையும் வகையில், மிக உன்னிப்பான கவனத்துடன் இத்திட்டங்கள் செயல்படுத்தப்படவேண்டும். இத்திட்டங்களைத் தொடர்ந்து கண்காணித்தும், காலமுறை தோறும் ஆய்வு செய்தும் இத்திட்டத்தின் முன்னேற்றத்தின் மீதான அறிக்கை அரசுக்கு மாதமிருமுறை அனுப்பப்படல்வேண்டும்.

சாதி சண்டைகளோ அதன் தொடர்பான வன்முறைகளோ, இவை மட்டுமில்லாமல் வேறு காரணங்களால் ஏற்படும் வன்முறைச் சம்பவங்களோ நிகழச் சற்றும் இடம் கொடுக்கக் கூடாது. அம்மாதிரி சமயங்களில் கண்டிப்பான, திறமையான முன்னோடி நடவடிக்கைகள் எடுத்து அத்தகைய நிகழ்ச்சிகள் நடைபெறா வண்ணம் தடுக்க வேண்டும்.

கள்ளச்சாராய ஒழிப்பில் காவல்துறையினர் அதிக கவனம் செலுத்தி கள்ளச் சாராயத்தை அறவே ஒழித்திட எல்லா நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும். கள்ளச்சாராயம் காய்ச்சுவது தமிழ்நாட்டில் இல்லை என்ற நிலையை விரைவில் கொண்டுவர காவல்துறையினர் தீவிர நடவடிக்கை எடுக்கவேண்டும்.


மாவட்ட நிர்வாகம் சீராகவும், விரைவாகவும் செயல்படத் தேவையான அனைத்து முயற்சிகளையும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் எடுக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன். இதற்கான கருத்துக்களை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இம்மாநாட்டில் தெரிவிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

**[தலைமைச் செயலகத்தில் 15-4-1989 அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில் ஆற்றிய உரை]**



# நீங்களே சொல்லுங்கள்

பாவேந்தர் பாரதிதாசன்



சித்திரச் சோலைகளே ! உமை நன்கு
திருத்த இப் பாரினிலே - முன்னர்
எத்தனை தோழர்கள் ரத்தம் சொரிந்தன
ரோ ! உங்கள் வேரினிலே!

நித்தம் திருத்திய நேர்மையி னால்மிகு
நெல்விளை நன்னிலமே! உனக்
கெத்தனை மாந்தர்கள் நெற்றி வியர்வை
இறைத்தனர் காண்கிலமே!

தாமரை பூத்த தடாகங்களே! உமைத்
தந்த அக் காலத்திலே - எங்கள்
தூய்மைச் சகோதரர் தூர்ந்து மறைந்ததைச்
சொல்லவோ ஞாலத்திலே!

மாமிகு பாதைகளே ! உமை இப்பெரு
வையமெலாம் வகுத்தார் - அவர்
ஆமை எனப்புலன் ஐந்தும் ஒடுங்கிட
அந்தியெல்லாம் உழைத்தார்!

ஆர்த்திடும் யந்திரக் கூட்டங்களே! - உங்கள்
ஆதி அந்தம் சொல்லவோ? - நீங்கள்
ஊர்த் தொழிலாளர் உழைத்த உழைப்பில்
உதித்தது மெய் அல்லவோ?

கீர்த்திகொள் போகப் பொருட்புவியே! - உன்றன்
கீழிருக்கும் கடைக்கால் - எங்கள்
சீர்த் தொழிலாளர்கள் உழைத்த உடம்பிற்
சிதைந்த நரம்புகள் தோல் !

நீர்கனல் நல்ல நிலம் வெளி காற்றென
நின்ற இயற்கைகளே! உம்மைச்
சாரும் புவிப்பொருள் தந்ததெவை? தொழி
லாளர் தடக்கைகளே!

தாரணியே! தொழிலாளர் உழைப்புக்குச்
சாட்சியும் நீயன்றோ? - பசி
தீரும் என்றால் உயிர் போகும் எனச்சொல்லும்
செல்வர்கள் நீதி நன்றோ?



## “குடல் புழுக்களை ஒழிக்க எல்லா வழிகளையும் பார்த்துட்டேன். கடைசீயிலே எங்க கால்நடை மருத்துவர் கொடுத்த பான்மின்த்* தான் பலிச்சுது...பால் நஷ்டம் தராமலே!”

கறவைப் பிராணி உலகுக்கு நல்ல சேதி!



தன்னிகரற்ற

# பான்மின்த்*

(மொரண்ட்டல் விட்ரேட்)

## குடற் புழுக்களை அழிக்கிறது, பாலைக் காப்பாற்றுகிறது.

''பாழும் குடல் புழுக்களால் — அம்மம்ம, நான் பட்ட பாடு : பலவீனம், பசியிராது, கறந்த பாலும் குறைவு. பிறகு, எங்க கால்நடை மருத்துவர் தந்த பான்மின்த் தான் பலிச்சுது —அதுவும் ஒரே ஒரு டோஸ்லே !''

**பால் இழப்பே இல்லை.**

''அருமையான சேதி — எங்க மாதிரி எல்லாக் கறவைகளுக்கும் சினைப் பிராணிகளுக்கும் கூட பத்திரமான மருந்து பான்மின்த். மற்ற மருந்துகளைப் போல் இல்லாமல், பான்மின்த் உபயோகித்த பிராணிகளின் பால் மனிதருக்குக் கெடுதலே இல்லை — நூற்றுக்கு 100 பத்திரமானது.''

**சினைக் காலத்தில் எந்த சமயத்திலும் தீங்கற்றது.**

''என் தங்கச்சி — பிள்ளைத் தாய்ச்சி — அவளுக்கு ஒத்துக்குமான்னு கவலைப்பட்டேன். ஆனால் பான்மின்த் சினைக்காலம் முழுக்க எந்த கெடுதலும் செய்யலை; ஏன் பலவீனக் காலங்களிலே கூட பாதிக்கலை. பக்க விளைவுகளே கிடையாது. குணமானதும் ஆ ! ஆறுதலான சுகம் !''

**வசதி மிக்கதும் கூட.**

சாப்பிட வெகு இலகு பான்மின்த். சுண்டி விடுங்க ஒரு போலஸ் (பெரிய மாத்திரை) — எங்கமாதிரி பெரிய பசு எருமைகளுக்கு இரண்டு. உடம்பு சுகமாயிடுது ! ஆடு, கன்று மாதிரி சின்னப் பிராணிகளுக்கு சின்ன மாத்திரையா வருது. சாப்பிடத் தயாரான கரைசலாகவும் கிடைக்குது. வேறென்ன வேணும் நம்மவர்களுக்கு !''

பால் இழப்பே இராது
பான்மின்த்*
விலையை ஈடு செய்வது

**கால்நடை மருத்துவரிடம் பெறுவீர் : சிறந்த மருந்து**

# பான்மின்த்*

குடற் புழுக்களைக் கொல்லும், ஆரோக்கியத்தை வெல்லும் !

LINTAS BMT 4 2217 TM

*யு.எஸ்.ஏ. ஃபைஸர் நிறுவன டிரேடு மார்க்

pfizer

மேலும் விவரமறிய எழுதுவீர் இம் முகவரிக்கு :
ஃபைஸர் லிட்., பி.ஓ. பாக்ஸ் நம்பர் 11602, பம்பாய் 400 021.

# பழந்தமிழ் ஏடுகளைப் பதிப்பித்துத் தந்த தாமோதரனார்

மாண்புமிகு கல்வி அமைச்சர்
பேராசிரியர் க. அன்பழகன்

இவ் விருபதாம் நூற்றாண்டில்
தமிழ் என்று சொன்னாலே, முப்
பால் வழங்கும் குறளும், முத்தமிழ்
முழங்கும் சிலம்பும், மூவாத் தமிழ்
இலக்கணமாம் தொல்காப்பியமும்,
மண நூலாம் சிந்தாமணியும், சங்க
இலக்கியச் செல்வங்களாம் எட்டுத்
தொகையும், பத்துப் பாட்டும் மற்ற
வர் தம் சிந்தலையைக் கவர்ந்து நிற்
கும். அவர்தம் நெஞ்சம் தமிழின்
தொன்மைக்கும், பெருமைக்கும்,
அருமைக்கும் சான்றாக நிலவும்.
அவற்றை எண்ணி எண்ணிப் பெரு
மிதத்தால் துள்ளும்.

சென்ற நூற்றாண்டிலோ எனில்,
இவை யாவும் ஒளி காணாத வைர
மணிகளாய்ப் புதை பொருளாய்ப்
புழுதி படிந்த ஏடுகளாய் இருட்
டறையில் மக்கிக் கொண்டிருந்தன.
அக் காலப் புலவர்களும் கவியரசர்
களுமே அவற்றின் அருமை உண
ராது அவற்றைத் தீண்டாமைக்கு
ஆட்படுத்திப் புறக்கணித்து நின்ற
னர். அக் காலத்தில் சமய வழியி
லேயே இலக்கியங்கள் போற்றப்
படும் நிலை இருந்தமையின் கம்ப
ரும், சேக்கிழாரும், வில்லியும்,
ஆண்டாளும் அனைய புலவர்களே
நினைவு கொள்ளப்பட்டனர். இவர்
தம் இலக்கியங்களோடு, பிரபந்தங்
களும் தலபுராணங்களுமே கவி
ராயர்கள் கற்றுக் கைக் கொள்வன
வாக நிலவின. கவிபாடும் திறன்
கைவரப் பெற்ற சீர்சால் புலவர்
களும் சமய வழியிலேயே ஊன்றிய
உள்ளத்தினராயினமையின் தத்தம்
தெய்வங்கள்மீதே பிள்ளைத்தமிழ்,
உலா, கலம்பகம், அந்தாதி புரா
ணம் ஆகிய சிற்றுலக்கியங்களை
இயற்றி வந்தனர்.

இந்நிலையில், பொன்னவிர் மேனி
யளாய்த் தமிழன்னை விளங்கிய
காலத்துப் பிறந்த சங்கச் செய்யுட்
கள் வழக்கற்றுப் போவதுடன்
தமிழே பல்லாற்றானும் தாழ்நிலை
யுற்றிருந்தது. வழக்கிறவாது பல
ராலும் கற்கப்பட்ட சங்க நூல் ஒன்
றிருக்குமாயின் அது திருக்குறளே
யாம். மற்றும் நாலடியார், முதல
லான சில அறநெறி ஏடுகளும்,
இலக்கண நூல்கள் சிலவுமே ஒரு
சிலரால் கற்கப்பட்டன.



சி. வை. தாமோதரனார்
*1832—1901*
கலித்தொகையையும்
சூளாமணியையும்
கவினுறப் பதிப்பித்தவர்

ஒரு நூற்றாண்டுக்கு முன்பு வரை
யில், தமிழ் எழுதுவதற்கு உரிய
கருவிகளாயிருந்தவை ஓலையுப்
எழுத்தாணியுமேயாம். எழுது
கோலும் (பென்சில்) (மைக்கட்டை)
பழக்கத்திற்கு வரவில்லை. சிறுவர்
தம் கல்விப் பயிற்சிக்குப் பயன்
படும் கரும்பலகையும் குச்சியும் அக்
காலத்தில் தான் தலைகாட்டின.
பொதுக் கல்விமுறைப் பள்ளிகள்
தோன்றாத காலம். கற்றவர் மிகச்
சிலர். கற்க விரும்பிய இளைஞர்
களோ குருவைத் தேடி, ஓடி; நாடி
நின்று அவர் கற்பிக்க விரும்பிய
சில சுவடிகளையே பாடங்கேட்க
வேண்டும். அதற்கும் மாணவராகிக்
கற்க விரும்புவோர் ஆசிரியரின் சம
யத்தைத் தழுவியவராக இருக்க
வேண்டும் என்ற கட்டாயமும் சில
ரால் வற்புறுத்தப்பட்டுள்ளது. இவ்
விடர்ப்பாடுகளிடையே தமிழ்க்
கல்வி எப்படிப் பரவும்? முடங்கிக்
கிடந்தது.

மேலும், அக்காலத்து நூல்கள்
யாவும் ஓலைச் சுவடிகளே. இரும்பு
எழுத்தாணி பிடித்துஓலையில் எழுது
வது எளிதன்று. மிகுந்த பயிற்சியும்
ஊக்கமும் இருந்தாலன்றி எவரும்
முனையார். எழுதப்பட்ட நூலைப்
படி எடுப்பது என்றால் மிகுந்த
உழைப்பு வேண்டும். சுவடிகளை
அறியாதுகாத்தற்கோ பெருமுயற்சி
யும் கவனமும் வேண்டும். காலத்
தால் ஓலை மடித்து விடும்போது
அவற்றை மறுபடியும் படி எடுத்துக்
காத்து வைப்பதற்கும் படும்பாடு
பெரிது, மிகப் பெரிது. தாள்களிலே
எழுதுவது, நூலை அச்சியற்றுவது
ஆகிய முறைகளோடு ஒப்பிட்டு
நோக்கின், ஓலைச் சுவடிக் காலத்
தில் அந்த முறைக்குத் தேவைப்
பட்ட உழைப்பும், காலமும் பொரு
ளும் பலப் பல மடங்காகும். இருந்
தும் அம் முறையால் பிழைகள்
மலிந்து, பாட வேற்றுமைகள்
நிறைந்து, சிதைவுக்கும் அழிவுக்குமே
'தமிழ்' ஆட்பட்டு வந்தது.

இந்த நிலையால் தமிழ், தமிழ்ப்
புலவர்தம் நாவிலே நடமாடிய
அளவு எழுத்திலே நடமாடாமலும்,
எழுத்திலே இடம் பெற்ற அளவும்
ஏட்டிலே நிலைபெறாமலும், ஏட்
டிலேநிலைபெற்ற அளவும் நாட்டிலே
கால்கொள்ளாமலும், தமிழரி
டையே ஒருகாலத்துப் பிறந்த அறி
வுச் செல்வமெல்லாம் பிற்காலத்து
மக்கள் பெற்றுப் பயன் கொள்ளு
மாறு எக் காலத்தும் நிலை பெறச்
செய்யும் கருவியில்லாமலும், தமி
ழன்னை காலத்தால் நலிந்தும்
மெலிந்தும் குற்றுயிராகக் கிடந்
தாள் என்றால் தவறாகாது.

மேலும் வேற்று நாட்டவர்
ஆட்சிமொழி, பிறமொழி ஆதிக்கம்,
பொதுக் கல்வியின்மை, தாய்
மொழிப் பற்றுணராமை, சாதி
சமய வேற்றுமையினில் தழைத்த
சமயக் காழ்ப்பு, இலக்கிய வளர்ச்
சிக்கு உறுதுணையாகும் அச்சுப்
பொறி காணாமை முதலான கார
ணங்கள் பலவற்றால் தமிழ் இலக்கி
யங்கள் கற்பாரும் கற்பிப்பாரு
மின்றிக் கருத்தினில் தோன்றாது
கண்ணிற் படாது, கவிராயர் வீட்டு

மச்சிலே மறைவாகக் கிடந்து மக்கிக்கொண்டிருந்தன. இராமபாணம் முதலான எலும்பற்ற புழுக்களாலும் துளைக்கப்பட்டு, அறிவுடைய மக்கட்கு விருந்தாவதற்கு வாய்ப்பின்மையின் ஓரறிவுயிர்க்கே உணவாகிப் புழுதியாகிக் குவிந்தன. அவ்வாறே கிடந்து, 'சமாதி' நிலை கண்டு, படி எடுத்து வைத்துக் கொள்ளப் படாமலே அழிந்து மறைந்து போன ஏடுகளும் பலப் பலவாம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தொடக்கத்திலிருந்தே கிறித்தவப் பாதிரிமார்கள் தமிழ் மக்களிடையே தமது சமயத்தைப் பரப்பும் ஆர்வத்தால், விவிலிய நூலைத் தமிழிலே மொழிபெயர்த்து அச்சேற்றியதோடு வேறு சில நூல்களையும் பதிப்பித்து வெளியிட்டனர். அதனைக் கண்ட சைவம் முதலான சமயத்துப் புலவர்களும் தத்தம் சமய நூல்களை அச்சியற்ற முனைந்தனர். அவ்வாறு வெளிவந்த நூல்கள் பலவும், பெரும்பாலும் சங்க காலத்திற்குப் பிற்பட்ட கால நூல்களும் சமய, புராண ஏடுகளாகவுமே அமைந்தன. எனினும் தமிழ் ஆர்வம் கொண்டு பழந்தமிழ்ச் சுவடிகளுக்கு அச்சுருவம் அளித்து அவை முற்றும் அழியாது காக்க முற்பட்டோரின் அருஞ்செயல் எந்நாளும் போற்றதற்குரியதாகும்.

அக்காலத்தில் வரலாற்று அறிவு நிலைபெறாமையின், தமிழ் இலக்கியங்களுள் தலைமையுடைய சங்கச் செய்யுட்கள் பற்றி அறிந்தோர் மிக்ச் சிலர். அவற்றின் அருமை உணர்ந்து அவற்றை அச்சியற்றிப் பாதுகாக்க எண்ணியோர் ஒரு கை விரல் அளவும் ஆகார். அவரினும், அம் முயற்சியிலே ஈடுபட்டு உழைத்த நல்லறிஞர் தம் அருமை உரைக்கக் கூடுமோ? அத்தகு அரிய பணியில் ஈடுபட்டுத் தமது உடல், பொருள், ஆவியைத் தமிழுக்கே ஒப்படைத்துச் சங்க இலக்கிய இலக்கணங்களை வெளியிட்ட தகைசால் பெரியார் இருவர். ஒருவர் யாழ்ப்பாணம் பயந்த அறிஞர் சி.வை. தாமோதரம் பிள்ளை அவர்கள், மற்றொருவர் சோழநாடு வழங்கிய சான்றோர் உ.வே.சாமிநாத அய்யர் அவர்கள்.

அவர்கட்கு முன்னரே சுவடிகள் சிலவற்றை அச்சியற்றி வெளியிடும் தொண்டிலே ஈடுபட்ட சிலருள், திருப்பெருந்திரு ஆறுமுக நாவலர், திருத்தணிகை விசாகப்பெருமாளையர், திருமயிலை சண்முகம் பிள்ளை, மழலை மகாலிங்கய்யர் முதலானோர் குறிப்பிடப்பட வேண்டியவராவர்.

தாமோதரம் பிள்ளை அவர்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள சிறுபிட்டி என்னும் ஊரிற் பிறந்து, இளமையிலேயே கல்வியிற் சிறந்து, சுன்னாகம் முத்துக்குமார கவிராயர் என்னும் பெரும்புலவரிடத்தே தமிழ் இலக்கிய இலக்கணப் பயிற்சி பெற்றார். கல்லூரியில் பயின்ற காலத்திலேயே அவரது தமிழ்ப் புலமையை அவர்தம் ஆசிரியர் ஒருவர் கண்டு பாராட்டிப் 'பண்டிதர்' என்று அழைத்துள்ளார் என்பதினின்று அவரது அறிவின் சிறப்பு விளங்கும்.



அவரது திறமையை அறிந்த பெர்சிவல் பாதிரியார் சென்னையில் தாம் நடத்திய 'தினவர்த்தமானி' என்னும் கிழமை ஏட்டில் அதன் ஆசிரியராக அமரச் செய்தார். பின்னர் மாநிலக் கல்லூரியில் தமிழாசிரியராகவும்விளங்கினார். சென்னைப் பல்கலைக் கழகம் முதன் முதலில் நடத்திய பி.ஏ. தேர்வில் முதல்வராகவும், பின்னர்ச் சட்டத்துறைத் தேர்விலும் வெற்றி பெற்றார். அரசாங்க அலுவலில் பல ஆண்டுகள் பணி ஆற்றி, பின்னர்ச் சில ஆண்டுகள் வழக்குரைஞராகவும் புதுக்கோட்டை நீதிபதியாகவும் இருந்து புகழ் பெற்றார். சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த் தேர்வாளராகவும் அவர் இருந்தார். பின்னாட்களில், பரிதிமாற் கலைஞன் எனப் புகழ்பெற்ற சூரிய நாராயண சாத்திரி அப்போது பி.ஏ. தேர்வு எழுதினார். அவரது தமிழ்ப் புலமையைக் கண்டு மகிழ்ந்து பாராட்டி 'திராவிட சாத்திரி' என்னும் பட்டத்தை அவருக்கு வழங்கினார். அறிஞர் தாமோதரம் பிள்ளை அவர்களது தமிழ்த்தொண்டு பல வகையானுஞ் சிறந்திருந்தது கண்டு 'இராவ்பகதூர்' என்னுஞ் சிறப்புத் தகுதியை அரசாங்கம் அவருக்கு அளித்தது.

அவர் இளமையிலேயே தமிழ்க் கல்வியில் சிறந்ததனால், அந்நாளில் ஏட்டுச் சுவடிகளாக இருந்த நூல்கள் பலவும் பதிப்பிக்கப்பட வேண்டுமென விழைந்தார். ஏட்டுச் சுவடிகள் பல, பூச்சிகளால் அரிக்கப்பட்டும், படிப்பாரும் பாதுகாப்பாரும் இன்றியும் மண்ணுக்கு இரையாகி வருவதைப் கண்டபோதெல்லாம் அவர் துணுக்குற்றார். பழங்காலத்து ஏடுகள் பல இவ்வாறே அழிந்து போயுள்ளன என்பதையும் அவர் வருத்தத்தோடு உணர்ந்துள்ளார்.

அவர் அச்சேற்றிய கலித்தொகைக்கு எழுதிய பதிப்புரையில் குறித்துள்ளது இது:

''என் சிறு பிராயத்தில் எந்தையார் எனக்குக் கற்பித்த சில நூல்களை இப்பொழுது தமிழ் நாடெங்கும் தேடியும் அகப்படவில்லை. ஒட்டித் தப்பியிருக்கும் சுவடிகளும் கெட்டுச் சிதைந்து கிடக்கும் நிலைமை தொட்டுப் பார்த்தவர்க்கன்றோ தெரியவரும்! ஏடு எடுக்கும்போதே ஓரம் சொரிகிறது; கட்டு அவிழ்க்கும்போது இதழ் முறிகிறது: ஏட்டைப் புரட்டும்போது துண்டு துண்டாகப் பறக்கிறது. இனி, எழுத்துக்களோவென்றால் வாலுந் தலையுமின்றி நாலு புறமும் பாணைக் கலப்பை (புழு) மறுத்து மறுத்து உழுது கிடக்கிறது.

''இந்த நிலையிலேனும் எல்லா இலக்கிய இலக்கணங்களும் ஏடுகளாகவாவது கிடைத்தனவா என்றால், அதுவும் அரிதேயாக இருந்தது எனவும், அவை அச்சில் பதிக்கப்படாவிட்டால் தமிழ் மக்கள் அவற்றின் பயனைப் பெறமுடியாது போய்விடும் என அஞ்சியே பதிப்பிக்கத் தலைப்பட்டதாகவும்'' தெரிவித்துள்ளார்.

அண்மைக் காலத்தில் தோன்றிய நூல்களின் சுவடிகளே முழுதாகக் கிடைப்பது அரிதாகுமாறு அவ்வளவு குறுகிய காலத்தில் சுவடிகள் அழிவுற்றுப் போவதையும் அவர் குறிப்பிடுகிறார்.

மேலும் அந்தச் சுவடிகளைக் கொண்டு நூலைப் பதிப்பிப்பதில் ஏற்படும் இடர்ப்பாடுகளைக் கடப்பதும் எளிதன்று. ஏடுகளைப் பிடித்து ஒப்பு நோக்கி உண்மையான பாடம் காண்பது கடினமாக இருந்தது என்பதைத் தாமோதரம் பிள்ளை அவர்களே இவ்வாறு விவரித்துள்ளார்:

''இலக்கணக் கொத்துடையார், நூலாசிரியர், உரையாசிரியர், போதகாசிரியர் என வகுத்த மூவகை ஆசிரியரோடு யான் பரிசோதகாசிரியரென, இன்னுமொன்று கூட்டி, இவர் தொழில் முன்மூவர் தொழிலிலும் பார்க்க மிகக் கடியதென்றும், அவர் அறிவு முழுவதும் இவர்க்கு வேண்டியதென்றும் வற்புறுத்திச் சொல்கின்றேன். தூக்கினாலன்றோ தெரியும் தலைச்சுமை? பரிசோதகாசிரியர் படுங் கஷ்டமும்

ஓர் அரிய பழைய நூலைச் சுத்த மனச்சாட்சியோடு பரிசோதித்து அச்சிட்டோர்க்கன்றி விளங்காது. ஒன்றற்கொன்று ஒவ்வாத இருபது இருபத்தைந்து பிரதிகளையும் அடுக்கி வைத்துக்கொண்டு என்கண் காணச் சிந்தாமணியைப் பரிசோதித்துப் பதிப்பித்த கும்பகோணம் தமிழ்ப் பண்டிதர் உ. வே. சாமிநாதய்யரைக் கேட்டால், இந்நால்வகை ஆசிரியர் பாட்டின் தாரதம்மியம் சற்றே தெரியலாம். எனக்கு அவரும் அவருக்கு நானுமே சாட்சி''.

இவ்வாறு பல்லாற்றானும் பேருழைப்பும் விடாமுயற்சியும் குன்றாத ஊக்கமும் வேண்டும். இவ்வரிய பதிப்பாசிரியர் பணியைத் தாமோதரம் பிள்ளை அவர்கள் தாமே விரும்பி மேற்கொண்டார். அதனால் நமக்குக் கிடைத்த செல்வங்கள் பல.

திருப்பெருந்திரு ஆறுமுக நாவலரோடு தொடர்புடையவராகத் தாமோதரம் பிள்ளை அவர்கள் தமிழ்த்தொண்டு செய்த நிலையில், நாவலர் அவர்கள் 1879ஆம் ஆண்டில் தொல்காப்பியம் சொல்லதிகாரத்தைச் சேனாவரையர் உரையோடு வெளியிட்டனர். நாவலருக்குப் பின்னும், இவர் அப்பணியை விடாது தொடர்ந்து தொல்காப்பியம் பொருளதிகாரத்தை நச்சினார்க்கினியர் உரையோடு 1885இல் பதிப்பித்தார். அதற்கு முன்னரே வீரசோழியம், கட்டளைக் கலித்துறை ஆகிய நூல்களைப் பதிப்பித்திருந்த பிள்ளை அவர்கள் இறையனார் அகப்பொருளையும், தணிகைப் புராணத்தையும் பதிப்பித்தனர். அதன் பின்னர்ப் பல ஏடுகளையும் ஆராய்ந்து 1887இல் கற்றோர் ஏத்துங் கலித்தொகையை அச்சேற்றி வழங்கினார். அதைத் தொடர்ந்து இலக்கண விளக்கத்தை உரையுடன் பதிப்பித்ததோடு, தோலாமொழித் தேவர் இயற்றிய சூளாமணியையும் வெளியிட்டார். அதன் பின்னர்த் தொல்காப்பியம் எழுத்ததிகாரமும் நச்சினார்க்கினியர் உரையுடன் வெளியிடப்பட்டது. மழலை மகாலிங்க அய்யர் அவர்கள் பல ஆண்டுகட்கு முன்பே இதனைப் பதிப்பித்திருந்த போதிலும், தொல்காப்பியம் முழுவதும் பிள்ளை அவர்கள் பதிப்பாக வெளிவந்தது சிறப்பேயாகும். பின்னும் அவர்கள், அகநானூற்றைப் பதிப்பிக்க விரும்பி ஆராய்ந்துகொண்டிருந்த காலத்தில் 1901இல் தம் உயிரினும் இனிதெனக் கொண்ட தமிழொடுகலந்து விட்டார்.

அவரது தூயதமிழ்ப் பணியாலேயே சங்க இலக்கியங்கள் பல தமிழ் கற்பாரிடையே பேச்சிலும் எழுத்திலும் நடமாடும் நிலை பிறந்தது என்றால் அது மிகையாகாது.

மேலும், அவர் பதிப்பித்த ஏடுகளுக்கு அவர் எழுதியுள்ள முன்னுரைகள் பலவும், அக்காலத்திய தமிழ்மொழி ஆராய்ச்சிக்கு உறுதுணையாக அமைந்தன. தமது ஆராய்ச்சியில் தவறியதைப் பிறர் விளக்கி உரைப்பின், அக்கருத்தை ஏற்றுக்கொள்ளவும் அவர் தயங்கியதில்லை. ஆனால், தமிழ் மொழியை இழித்தும் தாழ்த்தியும் கூறுவார் கருத்தை அவர் கண்டித்துரைக்கத் தவறியதில்லை.

தமிழ் ஒரு தனிமொழி: அதன் பெயர் திரவிட மரூஉ அன்று, 'தமிழே' என்பதும், அது பரதகண்டத்தில் எம்மொழிக்கும் பிந்தியதன்று என்பதும், எல்லாவற்றாலும் பிறமொழிக்குத் தாழ்ந்ததன்று என்பதும் வீரசோழிய பதிப்புரையில் அவர் குறித்த கருத்துக்களாகும்.

தமிழ் என்னும் பதம் 'திராவிடம்' என்னும் பதத்திலிருந்து மருவி வருவதற்கு இடமுண்டு என்பதைக் காட்டி, 'திராவிடமே தமிழாயிற்று' என்று சிலர் கூறி வாதித்ததைக் கண்டு அதனை மறுத்து அவர் எழுதியதில் ஒரு பகுதி:

''அகத்தியர் காலத்தில் முன் தொட்டு உள்ள பதினாறாயிரம் வயதுள்ள 'தமிழ்' பதத்தையும் உச்சியினி புரத்தில் இரண்டாயிரம் வருடத்திற்கு முன் பிறந்த 'திராவிட' பதத்தையும் ஒன்றென்றால் யார்தாம் நகையார்? மூதாதை திருமன்றலில் பௌத்திரன் சந்தன, தாம்பூலம் பரிமாறினான் என்பதற்கும், இதற்கும் யாது பேதம்? தமிழ் என்னும் பதத்தை எடுத்தாண்ட அகத்தியர், தொல்காப்பியர் காலத்துச் சமஸ்கிருத நூலுடையோராக நாரத, வியாச, வசிட்டராதியர் வாய்மொழியினின்று திராவிட சப்தம் வழங்கியதை முதற் காட்டியன்றோ பின்னர் இம்மதம் நாட்டப் புகுதல் வேண்டும்? சிவபெருமான் அகத்தியரைப் பொதிகைக்கு அனுப்பிய கதை, காந்தம் முதலிய பழைய புராணங்களில் உளதாகவும் ஆண்டுத் திராவிட சப்தத்தைக் காண்கிலமே! ஆலசிய புராணம், பாகவதம் முதலிய பிற்றை நாள் நூல்களிலன்றோ அது முளைத்தது! அகத்தியரும், 'யான் பேர்குமிடம் கலை வல்லோரும் முனிவரும் நிறைந்தபெருமாண்பினது ஆதலின், அவர்கள் மொழி உபதேசித்து என்னை அனுப்புக' என்று கேட்டதன்றித் 'திரவிட'மென்று கேட்டதில்லை''.


இவ்வாறு தமிழ் என்னும் பெயரே தமிழுக்கு உரியதாவதை நிலைநாட்டியது முதல், -சங்க இலக்கியச் செல்வங்களை வழங்கியது வரை- தமிழ் மக்கள்புத்துணர்ச்சி கொள்ளுவதற்குத் துணை நின்றார் பெருந்தகை தாமோதரம் பிள்ளை அவர்கள்.

**(சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வெளியிட்ட '' தமிழ்க் கடல் அலை ஓசை' என்ற நூலிலிருந்து)**

## கல்விக் கண் தந்த ஏந்தல்

உள்ளாட்சி மன்றங்கள் கல்விக் கூடங்களை அமைக்க வழிவகுத்த வள்ளல் சர் பி. தியாகராயர்.

சென்னை நகராட்சி மன்றம் ஏழை எளிய பிற்படுத்தப்பட்ட மக்களுக்குக் கல்வி பயிலும் வாய்ப்பு அளிக்கும் வகையில் சென்னையில் முதன்முதலில் ஐந்து நகராட்சிப் பள்ளிகளை அமைத்தவர் சர். பி. தியாகராயர். குழந்தைகளுக்கு இலவச உணவு அளிக்கும் திட்டத்தைத் தொடங்கியவரும் அவரே.



திராவிட சமுதாயச் சிற்பி
சர். பி. தியாகராயர்



# வீட்டுவசதி ஒதுக்கீடுகளில் ஒழுங்கீனங்கள்

சென்னை நகரத்தில் புதிய கட்டடங்கள் கட்டுவதற்குத் தேவையான அனுமதிகளைவழங்குவதில் 1986-87ஆம் ஆண்டுகளில் அதிக அளவுக்கு முறைகேடுகள் நடந்துள்ளன என்றும், மக்களின் பாதுகாப்பிற்கும், நல்வாழ்விற்கும் தேவையான அடிப்படை வசதிகள் பற்றிய சட்ட விதிகளை (எம்.எம்.டி.ஏ)ரூல்ஸ் தளர்த்தி பலருக்கு முறைகேடான அனுமதிகளை அன்றைய அந்தத்துறை அமைச்சர் வழங்கியுள்ளார் என்றும், கட்டட விதிகளை ஒழுங்குப்படுத்தும் பொறுப்பினை ஏற்றுள்ள சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் (எம்.எம்.டி.ஏ) மற்றும், அரசுச் செயலாளர் பரிந்துரை செய்யாமல் ஆட்சேபணை தெரிவித்த பல அடுக்குமாடிக்கட்டடங்களுக்கு அமைச்சர் தன்னிச்சையாக எந்தக் காரணமும் இன்றி விதிகளைத் தளர்த்தி அனுமதி தந்து உத்தரவிட்டுள்ளார் என்றும்கடுமையான கண்டனங்கள் பொதுமக்களிட்மிருந்து எழுந்தன.

குடியிருப்புப் பகுதியில் கடைகள், ஓட்டல்கள், லாட்ஜ்கள், மற்றும் வியாபாரக் கட்டடங்கள் கட்டவும், ஏற்கெனவே நெருக்கடியான குறுகிய சாலைகள் உள்ள இடங்களில்-அடுக்குமாடிக் கட்டடங்கள் கட்டுவதற்கும் முறைகேடாகப் பெருமளவில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதுபற்றி சென்னையில் உள்ள நுகர்வோர் நடவடிக்கைக் குழு (கன்ஸ்யூமர் ஆக்ஷன் குரூப்) உச்சநீதி மன்றத்தில் வழக்கு ஒன்றும் தொடர்ந்தது.

இதற்கிடையில் திருவாளர்கள் வலம்புரி ஜான், ஏ.சி.சண்முகம், ஜகத்ரட்சகன் ஆகிய அ.தி.மு.க.நாடாளுமன்ற உறுப்பினர்கள்-வீட்டு வசதித் துறை அமைச்சர் புதிய க்ட்டடங்கள் கட்ட அனுமதிகள் வழங்க உத்தரவிடுவதில் பெருமளவு ஊழல்கள் புரிந்துள்ளார் என்று அப்பொழுது இருந்த கவர்னர் திரு குரானா அவர்களிடம் மனு ஒன்றை அளித்தார்கள். அந்த மனுவின் மீது விஜிலன்ஸ் கமிஷனர் விசாரணை செய்ய ஆளுநராக இருந்த குரானா உத்தரவிட்டிருந்தார்.

மேலும் 180, என்.எஸ்.சி. போஸ் ரோட்டில் வசிக்கும் திரு எஸ்.கிருஷ்ணன் என்பவரும் தனது வீட்டுக்கு அருகிலுள்ள மனையில் கட்டடங்கள் கட்டுவதற்கு, திரு.வி.தாயாராம் மற்றும் திரு.வி.சிமன்தாஸ் இருவருக்கும் அனுமதி வழங்குவதில் அமைச்சர் முறைகேடாக உத்தரவு இட்டிருக்கிறார் என்று முறையிட்டு, அது குறித்து விசாரிக்கும்படி கேட்டிருந்தார். அந்த மனுவின் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

கவர்னர் குரானா விடுத்த உத்தரவையொட்டி இதுபோன்ற பொது நல விரோத நடவடிக்கைகளைக் களைந்திட ஆர்வம் கொண்டுள்ள இன்றைய அரசு இதுபற்றி விரிவாக ஆய்வு செய்ததில் கீழ்க்கண்ட உண்மைகள் புலனாகியுள்ளன.

சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் மற்றும் வீட்டு வசதித் துறையால் பரிந்துரை செய்யப்படாமலிருந்தும் அமைச்சர் தன்னிச்சையாக உத்தரவிட்ட அயிட்டங்கள் பின் வருமாறு:

| | |
|---|---|
| 21.10.1986முதல் 30.11.1987வரை | 124 அயிட்டங்கள் |
| 1.12.1987 முதல் 24.12.1987வரை | 17 அயிட்டங்கள் |
| 25.12.1987முதல் 6.1.1988 வரை | 33 அயிட்டங்கள் |
| 7.1.1988 முதல் 29.1.1988 வரை | 7 அயிட்டங்கள் |
| | 181 அயிட்டங்கள் |

இந்த 181 இனங்களில் 174 இனங்கள் ஒருவர் அந்தத் துறையின் அமைச்சராக இருந்த போது உத்தரவு போட்டவைகளாகும்.

எம்.ஜி.ஆர். மறைந்த நான்காவது நாளான

28.12.87ல் - 2அடுக்குமாடிக்கட்டடங்களுக்கும்
29.12.87ல் -1 அடுக்குமாடிக்கட்டடத்திற்கும்
30.12.87ல் -1 அடுக்குமாடிக்கட்டடத்திற்கும்
31.12.87ல் - அதாவது அந்த அமைச்சர் தனது பதவி காலத்தில் கையொப்பமிட்ட கடைசி நாளில் மட்டும் 29 அடுக்குமாடிக்கட்டடங்களுக்கும் உத்தரவிட்டுள்ளார்.

மொத்தமாக அவர் அந்தத் துறையின் அமைச்சராகப் பொறுப்பு வகித்த காலத்தில்- அதாவது 21.10.1986 முதல் 31.12.1987வரை 174 அயிட்டங்களில் எம்.எம்.டி.ஏ., மற்றும் வீட்டுவசதித் துறை ஆகியவற்றின் ஆட்சேபணைகளைப் புறக்கணித்து, தன்னிச்சையாக-உத்தரவிட்டுள்ளார்.


தமிழரசு

தமிழ் - மாதம் இருமுறை

**சந்தா விவரம்**

ஆண்டுச் சந்தா ரூ. 24
6 மாதச் சந்தா ரூ. 12

'தமிழரசு' - ஆங்கிலம்

ஆண்டுச் சந்தா ரூ. 12 6 மாதச் சந்தா ஏற்பதில்லை.

சந்தாத் தொகையை மணியார்டராகவோ, பாங்க் டிராஃப்ட் மூலமோ செலுத்தலாம்.

அனுப்ப வேண்டிய முகவரி : உதவி இயக்குநர்
'தமிழரசு' அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை-600 002.


''இன்னின்ன காரணங்களுக்காக அனுமதி மறுக்கப்படுகிறது'' என்று தெள்ளத்தெளிவாக எம்.எம்.டி.ஏ.வும், வீட்டு வசதித்துறையும் எழுத்து பூர்வமாகக் கோப்புகளில் விளக்கியிருந்தும் கூட, பெருமளவுக்கு முறைகேடான உத்தரவுகள் அந்த அமைச்சரால் வழங்கப்பட்டுள்ளன என்பது தெளிவாகிறது.

திரு எஸ். கிருஷ்ணன் என்பவர் அன்றைய கவர்னர் குரானா அவர்களிடம் கொடுத்த மனுவில் நடவடிக்கை எடுக்கப்பட்டு -கவர்னர் அலெக்சாண்டர் ஆட்சியில் இதுகுறித்து முன்னாள் அட்வகேட் ஜெனரல் திரு கிருஷ்ணமூர்த்தியிடம் 10.11.88 அன்று சட்டக் கருத்து (லீகல் ஒபினியன்) பெறப்பட்டுள்ளது.

அதன்படி

''விதிகளைத் தளர்த்தி முன்னாள் அமைச்சர் எடுத்த முடிவுகள் எந்தக் காரணத்தின் அடிப்படையிலும் அமையவில்லை. அவ்வாறு காரணம் குறிப்பிடாமல் பிறப்பிக்கப்பட்ட முன்னாள் அமைச்சரின் ஆணைகள் தன்னிச்சையானது - சட்டப்படி செல்லத்தக்கதாகாது. இதுபோன்ற அதிகாரங்களைப்பயன்படுத்துவது முறைகேடானது என்று அறிவிக்கப்படவேண்டும்'' என்று அட்வகேட் ஜெனரல் கிருஷ்ணமூர்த்தி, கருத்து கூறியுள்ளார்.

இப்படிப்பட்ட காரியங்களால் கீழ்க்கண்ட பொது நலக்கேடுகள் விளைந்துள்ளன:

1. பல குடும்பங்கள் வசிக்கிற நெரிசலான நிலையில் பல அடுக்கு மாடிக் கட்டடங்களுக்குப் பாதுகாப்பு விதிகளை மீறி அனுமதிஅளித்ததால் தீ விபத்து மற்றும் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டு சாலை விபத்துக்கள் அதிகரிக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது.

2. அடுத்தடுத்த நெருக்கமான பலமாடிக் கட்டடங்களுக்குத் தேவையான இடைவெளியும் திறந்த வெளியும் ஒதுக்கப்படாமல் அது சம்பந்தப்பட்ட அவசியமான விதிகளைத் தளர்த்தி, தனியார் பலருக்கு உதவிடும் வகையில் உத்தரவிட்டதில் போதிய காற்றோட்டம், சூரிய வெளிச்சம் போன்ற அடிப்படை வசதிகள் கிடைக்காமல் போவதுடன் அந்த வட்டாரத்தில் வாழ்வோரின் 'பிரைவசி'யும் பாதிக்கப்படுகிறது.

3. குடிதண்ணீர் விநியோகம், கழிவுநீர் அகற்றுதல் முதலிய அடிப்படை வசதிகள் பாதிக்கப்படும் அளவுக்கு ஏற்கெனவே நெருக்கமாகக் குடியிருப்புகள் உள்ள பகுதிகளில் மேலும்மேலும் அதிக அளவு அடுக்கு மாடிக்கட்டடங்களை விதிகளை மீறி அனுமதித்ததன் மூலமாக மக்களின் ஆரோக்கியமான வாழ்வு சிதைந்து விட்டது.

அ.இ.அ.தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்களான திருவாளர்கள் வலம்புரி ஜான், ஏ.சி.

சண்முகம், ஜகத்ரட்சகன்-ஆகியோர் கொடுத்திருந்த மனுவின்பேரில் முன்பு ஆளுநராகஇருந்த திரு. குரானா அவர்களே இதுபற்றி விஜிலன்ஸ் கமிஷனர் விசாரிக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்.

**அதையொட்டி, இந்த அரசு முன்னாள் அமைச்சர் செய்த அடுக்குமாடிக் கட்டட ஊழல் குறித்து உகந்த விசாரணையை மேற்கொள்ளும் என்று இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

**வீட்டுவசதி வாரியத்தின் மூலம் பூங்காக்களையும் மற்ற பொது இடங்களையும் வீட்டு மனைகளாக ஒதுக்குவதில் முந்தைய அரசு காலத்தில் நடந்த முறைகேடுகள் பற்றிய அறிவிப்பு,**

புதிய வீட்டுவசதித் திட்டங்களை உருவாக்கும்போது மொத்தப்பரப்பளவில் 10 சதவீதம் பூங்கா, சமூகக்கூடம், ஆரம்ப சுகாதார நிலையம், பள்ளிக்கூடம், கடைகள் முதலிய பொதுநோக்குக் காரியங்களுக்காக ஒதுக்குவது என்று விதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. இது போன்ற பகுதிகள் மேற்கண்ட விதிகளுக்கு மாறாக வீட்டும்மனைகளாக மாற்றப்பட்டு 1986 மற்றும் 1987ஆம் ஆண்டுகளில் அதிக அளவில் தனியாருக்குஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதென்று பொதுமக்கள் கண்டனம் தெரிவித்தனர். இது போன்ற பொதுநோக்குக்காலியிடங்களைவீட்டு மனைகளாக மாற்றம் செய்து, சம்பந்தப்பட்ட துறையின் அன்றைய அமைச்சரே அவருடைய தனி அதிகாரத்தைப் பயன்படுத்தி ஒதுக்கீடு செய்துள்ளார்.

அண்ணா நகரில் காங்கிரஸ் ஆட்சியில் துவக்கப்பட்ட தொழிற் கண்காட்சி 1967ல் பேரறிஞர் அண்ணா காலத்தில் திறந்து வைக்கப்பட்டது நினைவிருக்கலாம். அதன் நினைவுச் சின்னங்களாக ஒரு கோபுரமும் (Tower) மற்றும் சிலைகளும், பூங்காக்களும் இன்னும் இருந்து வருவது நினைவிருக்கலாம். இது போன்ற சமூகக்கூடம், அந்த வட்டாரப் பொதுமக்களுக்குப் பயன்படும் மருத்துவமனை, பள்ளிக்கூடம், பூங்காக்கள்-போன்றவைகளை உருவாக்குவதற்காக ஆங்காங்கே காலியாக விடப்பட்டிருந்த சுமார் 302 கிரவுண்டுகளை வீட்டு மனைகளாக மாற்றி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அதன் விவரம் கீழே தரப்படுகிறது.

இப்படித் தனியாருக்கு விநியோகம் செய்யப்பட்ட (240 பிளாட்) 302 கிரவுண்டுகளும் இன்று சென்னை மாநகரத்திலேயே மிக அதிகமான ரூபாய்க்குவிற்பனையாகக்கூடிய அண்ணா நகர், கலைஞர் கருணாநிதி நகர், பெசன்ட் நகர், இந்திரா நகர் போன்ற Posh Locality யில் இருப்பவை என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதிலிருந்தே இந்த வீட்டுமனைகளின் விலை மதிப்பை மாண்புமிகு உறுப்பினர்களும், தமிழக மக்களும் ஒருவாறு யூகித்துக் கொள்ளலாம்.

| விவரம் | பிளாட் |
|---|---|
| மார்க்கெட்டுக்காக-ஒதுக்கப்பட்டவை | 17 |
| கடைகள் | 50 |
| பொதுக்காரியம் | 26 |
| வியாபாரப்பகுதி(வணிக வளாகம்) | 22 |
| திறந்தவெளி | 17 |
| கிணறு | 1 |
| பள்ளிக்கூடம் | 2 |
| வாகனங்கள் நிறுத்துமிடம் | 8 |
| தொழில் பணிக்கூடங்கள் | 13 |
| நலிவடைந்தோருக்கான வீடுகள் | 17 |
| புதிதாக ஒதுக்கப்பட்டவைகள் | 35 |
| சமூகக்கூடம் | 13 |
| குடியிருப்புப் பகுதிகள் | 8 |
| பூங்கா | 4 |
| மருத்துவமனை | 7 |
| மொத்தம் | 240 |

(ஆக மொத்தம் 302 கிரவுண்டுகள்)

விதிமுறைகளைக் கடைப்பிடிக்காமல் பெரும்பாலான ஒதுக்கீடுகளில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் செயற் பொறியாளர்கள் (எக்சிகியூடிவ் என்ஜினியர்கள்), அமைச்சருடைய வெறும் வாய்மொழி உத்தரவைப் பெற்றதன் மூலமே, வீட்டுவசதி வாரியம் மூலம் அரசுக்கு காலியிடங்களை வீட்டுமனைகளாக மாற்றுவது குறித்து அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. இவ்வாறு அறிக்கைகள் அனுப்பப்படுவதற்கு முன்பு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் (எம்.எம்.டி.ஏ) அனுமதி எதையும் பெறவில்லை. அவசர அவசரமாகத் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியச் செயற்பொறியாளர்களிடமிருந்து அறிக்கைகள் பெறப்பட்டு உடனுக்குடன் **ஆணைகள் வெளியிடப்பட்டன. ஒரு ஒதுக்கீட்டில் கூட இன்னாருக்கு ஒதுக்கீடு செய்யலாம் என்று வீட்டுவசதி வாரியம் பரிந்துரை செய்யவில்லை**

இந்த 240 பிளாட்டுகளில், 43 நபர்கள் வீட்டுவசதி வாரியத்திடமிருந்து No objection certificate அதாவது ஆட்சேபணையில்லாத சான்றிதழைப் பெற்று, கட்டடம் கட்டும் வேலையைத் துவக்கிவிட்டனர். மீதமுள்ள 197 நபர்கள் இன்னும் கட்டடம் கட்டத் துவங்கவில்லை.

உதாரணத்திற்கு, இதுபோன்ற 53 இனங்களை ஆய்வு செய்ததில் ஏராளமான ஒழுங்கீனங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஒரே நபருக்கு 2 ஒதுக்கீடுகள் செய்யப்பட்டதும், ஏற்கெனவே வீடு உள்ளோருக்கு மீண்டும் வீட்டு மனை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதும் விசாரணையில் கண்டறியப்பட்டது.

அன்றைய அரசின் அல்லது அமைச்சரின் அலாதி அன்பைப் பெற்ற சில VIP களின் பெயர்களை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன்.

டாக்டர் திருமதி பானுமதி தம்பிதுரை,
க-பெ. தம்பிதுரை எம்.பி.,

(இது மருத்துவமனைக்காக உரிய பகுதியல்ல— இது மாற்றப்பட்டு அதுவும் ஏழரை கிரவுண்டு- அண்ணா நகரில் 24.7.87ல் இவருக்கு ஒதுக்கப்படுகிறது)

இன்னொருவர்:

டாக்டர் திருமதி நற்குணம்
டி-22, ஏழாவது அவென்யூ,
சென்னை-90

இவருக்கும் சுமார் ஏழரை கிரவுண்டுபெசன்ட் நகரில் வழங்கப்பட்டிருக்கிறது. இந்த நிலம் அந்த வட்டார மக்களுக்குத் தேவையான மார்க்கெட் ஒன்று கட்டுவதற்காக ஒதுக்கப்பட்டிருந்தது. அதையும் மாற்றி இவருக்குத் தரப்பட்டுள்ளது.

இதுபோல் பல பெயர்கள் உள்ளன. பொதுவாக வீட்டுவசதி வாரியத்தில் வீடு கட்டுவதற்கு இரண்டு அல்லது இரண்டரை கிரவுண்டுதான் தருவது வழக்கம். விதிகளை மீறியதுமல்லாமல் ஏழரை கிரவுண்டுகள் வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

அதுபோலவே கலைஞர் கருணாநிதி நகரில் அந்த வட்டார மக்களுக்கு உதவும் வகையில் கடைகள் கட்டுவதற்காக ஒதுக்கப்பட்டிருந்த இடம் அ.இ.அ.தி.மு.க. மாவட்டச் செயலாளர் திரு கருப்பசாமி பாண்டியனுக்கும், திரு. கோவைத்தம்பிக்கும் வீடு கட்டுவதற்கு என்று வழங்கப்பட்டிருக்கிறது.

இவ்வாறு முறைகேடாகத் தரப்பட்டுள்ள 302 கிரவுண்டில் உள்ள 240 பிளாட்களின் மார்க்கெட் விலை சுமார் 13 கோடி ரூபாய்.

இதன் பின்னணியில் இந்த 240 பிளாட்டுகள் (Plots) ஒதுக்கீடு தொடர்பாக விரிவாக விசாரணை செய்து நடைபெற்ற வீட்டு மனை ஒதுக்கீடு ஊழல் குறித்து கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்என்று தமிழ் நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநருக்கு இவ்வரசு ஆணையிடும்.

1. ஒதுக்கீடு பெற்றோர்கள் அனைவரும் வீட்டுமனை பெறத் தகுதி உள்ளவர்களா என்பதை விசாரித்து, தகுதியற்றவர்கள் ஒதுக்கீடு பெற்றிருப்பின், அவ்வொதுக்கீடுகளை உடனடியாக ரத்து செய்ய வேண்டும்.

2. இந்த மனைகளில் முறையான விசாரணையின்றி வீடுகள் கட்டுவதற்கு அனுமதி வழங்கக்கூடாது.

3. ஏற்கெனவே ஒதுக்கீடு செய்யப்பட்ட, பூங்கா, சமூகக் கூடம் போன்ற பொதுநோக்குக் காலியிடங்களை வீட்டுவசதி வாரியம் திரும்பப் பெற வேண்டும்.

இந்த ஆணையை நிறைவேற்ற வீட்டுவசதி வாரியம் உரிய நடவடிக்கை நடத்தி ஒரு மாத காலத்திற்குள் அரசுக்கு அறிக்கை தரவேண்டும். அதனையொட்டி இந்த வீட்டுமனை ஒதுக்கீட்டு ஊழல்கள் புரிந்தோர் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

—மாண்புமிகு முதல்வர் அவர்கள்
சட்டப் பேரவையில் கடந்த 4.4.89 அன்று
வெளியிட்ட அறிவிப்பு

**தெரிந்து கொள்ளுங்கள்**




சிறுவர் முதல் பெரியவர்கள் வரை தினசரி பயன்படுத்துவது சைக்கிள். நம்முடைய ஒவ்வொருவர் வீட்டிலும் சைக்கிள் இல்லாமல் இருக்காது. அது அன்றாடம் பயன்படுத்தும் இரண்டு சக்கர வாகனம்.

அன்றாடம் பயன்படுத்தும் இந்த சைக்கிளை முதன்முதலில் பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த பிளான்ஷார் - மெகாரர் எனும் இருவர் 1779-ம் ஆண்டு கண்டுபிடித்தனர்.

இவர்கள் முதலில் இரு மரச் சட்டத்தில் அமர்ந்து இரு கால்களினால் தள்ளிச்சென்று ஓட்டிக் காட்டினார்கள். ஆனால் இதனைத் திருப்ப வேண்டுமானால் கீழே இறங்கி எந்தப் பக்கம் செல்ல வேண்டுமோ அந்தப் பக்கம் திருப்பி வைத்து ஓட்ட வேண்டும். ஆகையால் இது பயனற்றதாகிவிட்டது.

இதனை நம் விருப்பம்போல் திசை திருப்பும் விதத்தில் 1851-இல் ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த கார்ல் லோன்ட் ரெய்ஸ் என்பவர் முன் சக்கரம் வைத்து டிரெய்ஸீன் என்ற சைக்கிளை அமைத்தார். இந்த சைக்கிளையும் இரு கால்களால் தள்ளிக்கொண்டு ஓட்ட வேண்டும். அதன் பிறகு சில மாற்றங்கள் செய்து பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த எர்னல்ட் மீஷோ என்பவர் 1861இல் முன் சக்கரத்தில் மிதியடிகள் பொருத்தி, அச்சக்கரத்தின் மீது ஓட்டுபவரின் இருக்கையைப் பொருத்தி பயன்படுத்தும் விதத்தில் தயாரித்தார். இச்சைக்கிளுக்குப் பென்னி பெர்திங் எனப் பெயரிட்டனர். இந்தச் சைக்கிள்தான் மக்களுக்குப் பயன்படும் விதத்தில் ஓட்டப்பட்ட சைக்கிளாகும்.

அதன்பிறகு இரு சக்கரங்களையும் இணையும் வகையில் 1874 இல் சங்கிலி Chain பொருத்தப்பட்டு உபயோகப்படுத்தப்பட்டது.

1852-ஆம் ஆண்டு சுவிட்ஸர்லாந்து நாட்டைச் சேர்ந்த பிரண்ட்ரிச் பிஷர் என்பவர் சைக்கிளுக்குப் பால்பேரிங்குகள் - மிதியடிகள் பொருத்தப்பட்டு விரைவாகச் செல்லும் வகையில் அமைத்தார். ஆனால் இன்று நாம் உபயோகப்படுத்தும் வகையில் வடிவமைத்துக் கொடுத்தவர் ஸ்காட்லாந்து நாட்டைச் சேர்ந்த ஜான் பாய்ட் டன்லப் என்பவராகும்.

இவர் 1889-இல் காற்றடைத்த ரப்பர் டயர் பொருத்தி ஓட்டுபவர்க்கு எந்தவித அதிர்ச்சியும் இல்லாமல் அதேசமயம் வேகமாகவும் ஓட்டும்படிச் செய்தார்.

அது மட்டுமின்றி இரண்டு சக்கரங்களும் ஒரே அளவாகவும், ஓட்டுபவரின் எடை சமமாகவும் இருக்கும் பொருட்டு இருக்கையுடன் கூடிய அமைப்பை உருவாக்கிய பெருமை இவரையே சாரும்.

—திரு. மயிலைத் தொண்டன் எழுதிய 'அறிவியல் சிந்தனைக் களஞ்சியம்' என்னும் நூலிலிருந்து.

# உணர்வும் உறவும்

## டாக்டர் மு.வரதராசனார்

சிறு பெண்கள் சிலர் கூடி மணலில் விளையாடிக் கொண்டிருந்தார்கள். ஒரு நாள் புன்னைக் கொட்டைகளை வைத்துக்கொண்டு விளையாடினார்கள். காசு முதலியவைகளை மணலில் அழுத்தி மறைத்துப் பிறகு மணலைத் தோண்டி எடுத்துப் பார்ப்பதுல் சிறுவர்களுக்குத் தனி இன்பம் உண்டு. அழித்தல் ஆக்கல் என்னும் ஆற்றல் தங்களிடம் இருப்பதை அப்போது அவர்கள் உணர்கிறார்கள் அல்லவா? அதுதான் இன்பத்துக்குக் காரணம். பொம்மைகளை வைத்து விளையாடுவதுல் காக்கும் ஆற்றல் இருப்பதை உணர்ந்து மகிழ்கிறார்கள். இவ்வாறு படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழிலில்தான் சிறுவர்களும் இன்பம் காண்கிறார்கள்.

இப்படி விளையாடி வந்த புன்னைக் கொட்டைகளில் ஒன்றை மறந்து விட்டு விட்டார்கள். அந்தக் கொட்டை மணலிலேயே அழுந்திச் சிலநாள் கிடந்தது. அதனுள் கிடந்த உயிர் வாளா இருக்குமா? அது வெளிப்பட்டது. புன்னைக் கொட்டை புன்னைச் செடியாகித் தோன்றியது.

விளையாடிய சிறுமியர் பலருள் ஒருத்தி அந்த விந்தையைக் கண்டு வியந்தாள். படைத்தலும் மறைத்

**இலக்கிய விருந்து**

தலும் ஆகிய விளையாட்டுக்கு உரிய புன்னைக் கொட்டை இப்போது காத்தல் தொழிலுக்கு உரிய இளஞ் செடியாக விளங்கியது. சிறுமியோ இளந் தாயாகிவிட்டாள்; அந்தச் செடியின்மேல் கொண்ட அன்புதான் அவள் மனத்தைத் தாய்மனம் ஆக்கிவிட்டது.

சிறு செடி வளர்ந்து ஓங்கும் என்று கனவு கண்டாள்; வளர்க்க முனைந்தாள்; அன்பு சொரிந்தாள்.

அந்தப் புன்னைச் செடிக்குத் தண்ணீர் மட்டும் ஊற்றினால் போதும். ஆனால் அது யார் செய்யும் செயல்? அதைச் செடி என்று அறிந்த மூளை உடையவர் செயல். சிறுமியோ தன் அன்பை முன்னே செலுத்தி உணர்ந்து வளர்த்தாள். தன் தாய் தன்னை வளர்த்த முறை-தேனும் பாலும் ஊட்டித் தன்னை வளர்த்த முறைதான் சிறுமியின் உணர்வில் நின்றது. தானும் அந்த இளஞ் செடியை அவ்வாறு வளர்க்க முனைந்தாள்.

இளம் புன்னைச் செடிக்கு நாள்தோறும் தேனும் பாலும் கிடைத்துவந்தன; தண்ணீரும் ஒவ்வொரு வேளை கிடைத்திருக்கும்.

பல ஆண்டுகள் கழிந்தன. செடி மரமாக ஓங்கியது. சிறுமி மங்கையாக வளர்ந்தாள். திருமணம் நடந்தது. இல்வாழ்க்கை அமைந்தது. குழந்தைச் செல்வமும் வாய்த்தது. இந்தக் குழந்தை ஒரு பெண் குழந்தைதான்.

இந்தக் குழந்தை வளர்ந்து சிறுபெண் ஆனது. பெற்ற தாய்க்கு இந்தச் சிறுபெண் முதல் குழந்தையா? இரண்டாம் குழந்தையா? உணர்வு உலகம் கண்டவர்கள் உண்மையைச் சொல்வார்கள். இந்தச் சிறுபெண் அவளுக்கு இரண்டாம் குழந்தைதான். அவள் மனம்-அன்பு நெஞ்சம்-வளர்த்த முதல் குழந்தை புன்னைமரம் தானே!


இதை அந்தத் தாயே ஒருநாள் சொல்லிவிட்டாள்.

ஒருநாள் அவளுடைய சிறுபெண் அழுதாள்; தேனும் பாலும் பருகாமல் தொல்லை கொடுத்தாள். அப்போதுதான் சொன்னாள்; ''அம்மா! நீ இப்படிப் பாலும் தேனும் பருகாமல் அழுகின்றாயே! உன்னால் எனக்கு எவ்வளவு தொல்லை! உன் அக்கா ஒருநாளும் அப்படிச் செய்தது இல்லையே!'' என்றாள்.

''யாரம்மா அக்கா?'' என்று மகள் கேட்டாள். ''இதோ இருக்கின்றதே இந்தப் புன்னை மரம்தான். இதுதான் நான் முதலில் வளர்த்த குழந்தை. நாள்தோறும் என் கையால் தேனும் பாலும் ஊட்டினேன். ஒரு நாளும் மறுக்க வில்லை; அழவில்லை; கோபம் வரவில்லை. ஒரு நாளும் தொல்லை கொடுக்காமல் உண்டுவந்தது. நீ மட்டும் இப்படிச் செய்கின்றாயே!'' என்றாள் தாய்.

மகளின் மனத்தில் அரைகுறையாக இந்தச் செய்தி பதிந்தது. இன்னும் சில ஆண்டுகள் கழிந்தன. அவளு




சொன்னதைச்
செய்வோம்

# சொன்னதைச் செய்வோம்

முதல்வர்

**கலைஞர்**

# பதிப்புரை

தமிழக சட்ட மன்றப் பேரவையில் 1989-90ஆம் ஆண்டுக்குரிய நிதி நிலை அறிக்கையை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 25.3.1989 அன்று அளித்தார்.

எல்லார்க்கும் ஏற்றமளிக்கும் வகையில் அளிக்கப் பட்ட அந்த ஈடில்லா நிதி நிலை அறிக்கையின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் நடத்திய விவாதங்களுக்குப் பதிலளிக்கும் வகையில், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் 3-4-1989 அன்று ஆற்றிய உரையைத் தொகுத்து "சொன்னதைச் செய்வோம்" என்னும் தலைப்பில் நூலாக்கி தமிழரசு 1-5-'89 இதழின் இலவச இணைப்பாக வழங்குகிறோம்.

இயக்குநர்,
செய்தி மக்கள் தொடர்புத்துறை
தமிழ்நாடு அரசு.

*27-4-'89*
*சென்னை-600 009*

**மாண்புமிகு முதல்வர் கலைஞர்**

மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் பாடலோடு தொடங்கப்பட்ட நிதி நிலை அறிக்கை குறித்து விவாதங்களுக்குப் பதிலளிக்கும் போதும், அவருடைய பாடலையே நினைவுகூர்ந்திட விரும்புகிறேன்.

'காரிருளால் சூரியன்தான் மறைவ துண்டோ?
கறைச்சேற்றால் தாமரையின் வாசம் போமோ?'
பேரெதிர்ப்பால் உண்மைதான் இன்மையாமோ''

என்ற அந்தப் புரட்சிக் கவிஞன், பல ஆண்டுகளுக்கு முன்பு பாடி வைத்த அந்த உண்மை வரிகளை உள்ளத்திலே பதிய வைத்துக் கொண்டு என்னுடைய பதிலைத் தொடங்குகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

பேரவையின் அனுமதியோடு பேரவையின் நேரம் நீட்டிக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு முதல்வர் கலைஞர்:**

இந்த நிதிநிலை அறிக்கை பொது விவாதத்தில் ஆளும் கட்சியின் சார்பிலும், எதிர்க்கட்சியான அ.இ.அ.தி.மு.க.

சார்பிலும், மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்தியக் கம்யூனிஸ்ட், ஜனதா தளம், தமிழ்நாடு பார்வேடு பிளாக், தமிழ்நாடு ஜனதாக் கட்சி ஆகிய கட்சிகளின் சார்பிலும், எதிர்க் கட்சிக்கு அடுத்த கட்சியாக அமர்ந்துள்ள காங்கிரஸ் கட்சி சார்பிலும் சற்றொப்ப 50-க்கு மேற்பட்ட உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்து வைத்திருக்கின்றார்கள்.

அரசின் சார்பிலே நான் தயாரித்து, இந்த அவை முன்னால் வைத்துள்ள நிதிநிலை அறிக்கை அப்படியே அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய வேத புத்தகமென்று நான் சொல்ல முன்வரவில்லை. குறைபாடுகள் இருக்கலாம்; குற்றங்கள் கூட இருக்கலாம்; அவைகளையெல்லாம் சரி செய்து கொள்ளக்கூடிய அரிய யோசனைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் அவரவர்களுடைய கட்சியின் சார்பில் தெரிவிக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய விருப்பம். இன்றைக்குக் காலையிலே என்னுடைய அருமை நண்பரும், இந்திய யூனியன் முஸ்லீம் லீக்கினுடைய தலைவருமான அப்துல் லத்தீப் அவர்கள் ஜனநாயகத்தினுடைய மாண்பு குறித்து விளக்க உரை ஆற்றியிருக்கிறார்கள். ஜனநாயகம், ஆளும் கட்சி, எதிர்க்கட்சிகள் என்கின்ற இரண்டு பக்கங்களைக் கொண்ட ஒரு நாணயம். நாணயம் தவறுகின்றவர்கள் சில பேர் எதிர்க்கட்சியிலே வந்துவிடுகிற காரணத்தால், ஜனநாயக நாணயம் சில நேரங்களிலே செல்லாததாக ஆகிவிடக் கூடும் என்கின்ற அச்சத்தின்பாற் பட்டுத்தான் அப்துல் லத்தீப் அவர்கள் காலையிலே அந்தக் கருத்துக்களை இங்கே எடுத்து வைத்திருக்கின்றார்கள்.

பொதுவாக இந்த அவையின் முன்னாலே வைக்கப்பட்டுள்ள வரவு செலவுத் திட்டம் குறித்து, நாட்டிலே உள்ள சில ஏடுகள் எல்லாம் எவ்வாறு கருத்து அறிவித்திருக்கின்றன என்பதைச் சுருக்கமாக இங்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். 29.3.89 நாளிட்ட ''எக்னாமிக் டைம்ஸ்'' என்ற ஏடு (Economic Times) '' Tamilnadus Rosy Dreams '' என்ற தலைப்பில்

The Tamil Nadu Chief Minister, Thiru M. Karunanidhi, has struck a balance between discretion and valour in producing additional resource mobilisation to the tune of Rs. 50 crores in the coming year. Moreover, the Budget has something to offer to almost everybody. For the industrialist, there is promise of stepped up outlay on power as well as three new growth centres. For the agriculturist, there is a whole new package of drought relief and debt relief. For the Scheduled Castes, Scheduled Tribes and the Most Backward Communities as well as women and the unemployed, the Budget spells out special schemes to implement the DMK's poll assurances.

"தமிழ்நாட்டில் மலரும் எதிர்பார்ப்புகள்" என்ற தலைப்பில் வருமாண்டில் 50 கோடி ரூபாய் வரை நிதி ஆதாரங்களைப் பெருக்குவதற்காக ஒரு நடுநிலையான கொள்கையைத் தமிழக முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் வேகத்துக்கும், விவேகத்துக்குமிடையே நின்று வகுத்திருக்கிறார். அநேகமாக எல்லாத் தரப்பு மக்களையும் நிறைவு செய்யும் வகையில் நிதிநிலை அறிக்கை அமைந்துள்ளது. தொழிலதிபர்களுக்குக் கூடுதல் மின்சாரமும், மூன்று புதிய தொழில் வளர்ச்சிமையங்கள் அமைக்கவும் உறுதி அளிக்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்குக் கடன் நிவாரணம், மற்றும் வறட்சி நிவாரணம் அளிக்கும் வகையில் புதிய சலுகைகள் முழுமையாகத் தரப்பட்டுள்ளன. தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் வேலையில்லாதவர்களுக்கும் மகளிருக்கும் சில சிறப்புத் திட்டங்களை நிதிநிலை அறிக்கையிலே அறிவித்தது. எல்லா வகையிலும் தி.மு.கழகம் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற முனைந்துள்ளது" என்பது அந்தத் தலையங்கத்தின் சாராம்சம்.

"Financial Express" - 29.3.1989-இல்

"The Chief Minister Karunanidhi was able to make a self-landing with his Budget for 1989-90. The flight has been made smooth by the readiness, though belatedly, to off-load cargo in the shape of certain financial Plan targets. All said and done, the Chief Minister, who also holds the Finance portfolio



has done well in managing the pressure-cooker of State finances to provide for a wide range of reliefs and funds for enlarged scale of welfare measures."

"News times" 28.3.1989-இல், "A Welfare Budget" என்ற தலைப்பில்

"When does a populist Budget become a welfare Budget ?"

"When it is presented by an Opposition Government."

எப்போது மக்கள் நிதிநிலை அறிக்கை, மக்கள் நல ஆதரவு நிதிநிலை அறிக்கையாக ஆகிறது என்று கேட்டு அதற்குப் பதில் அளிக்கிறது. மாநிலத்தில் ஒரு எதிர்க்கட்சி அரசு அமைத்து நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யும்போதுதான் என்பதாக.

"Hindu" பத்திரிகையில் 27.3.1989-இல்—

" Poll promises fulfilled " என்ற தலைப்பில் "The Chief Minister Karunanidhi, on Saturday, announced a number of welfare measures in the Budget for 1989-90 in fulfilment of the promises made in the DMK Election manifesto."

"News Today' என்ற ஏட்டில் 27.3.1989-இல்—

" Welfare oriented Budget " என்ற தலைப்பில் "The Tamilnadu Government was faced with three problems - a precarious financial position, an urgency for encouraging an improvement in the development exercise and a need to redeem the Election promises. It should be said to the credit of the DMK Government that its Budget for 1989-90 is charted specifically to tackle these three issues to a creditable extent."

(தமிழக அரசு மூன்று பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டியிருந்தது. ஒருபுறம் கடுமையான நிதிப் பற்றாக்குறை; மறுபுறம் வளர்ச்சிப் பணிகளில் தீவிரம் காட்ட வேண்டிய அவசியம். இவை எல்லாவற்றிற்கும் மேலாகத் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டிய கட்டாயம். இந்த இக்கட்டான பிரச்சினைகளைத் தி.மு.கழக அரசின் முதல் நிதிநிலை அறிக்கை சாமர்த்தியமாகச் சமாளித்ததோடு மட்டுமல்லாமல், மக்களின் நம்பிக்கைக்கும், எதிர்பார்ப்புக்கும்

ஈடு கொடுத்து அமைந்துள்ளது என்று ஏடுகள் குறிப்பிட்டி ருக்கின்றன.)

அதனையொட்டித்தான் இங்கே பல்வேறு கட்சிகளின் சார்பில், எதிர்க்கட்சியின் சார்பிலே பேசிய உறுப்பினர்களே கூட இந்த நிதிநிலை அறிக்கையிலே பலவற்றை வரவேற்றுப் பாராட்டிப் பேசியிருக்கின்றார்கள்.

இந்த நிதிநிலை அறிக்கையைப்பற்றி நான் வெகுவான விவரங்களை நீங்கள் சுட்டிக்காட்டிய அடிப்படையிலே ஆராய்வதற்கு முன்பு, தொடர்ந்து நாம் வலியுறுத்தி வரு கின்ற மாநில உரிமைகள், மாநில அதிகாரங்கள் இவைகளைச் சுட்டிக்காட்ட வேண்டியது என்னுடைய கடமையாகும்.

நம்முடைய லத்திப் அவர்கள் பேசும்பொழுதும், மார்க் சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய சார்பிலே வீரையன் அவர்கள் நேற்று உரையாற்றிய பொழுதும், அதைப் போலவே பி.எச்.பாண்டியன் அவர்கள் உரையாற்றியபொழு தும், நம் பூவராகன் அவர்கள் உரையாற்றிய பொழுதும், தமிழ்நாடு ஜனதாக் கட்சியினுடைய தலைவர் விஜயராகவன் அவர்கள் இங்கே உரையாற்றியபொழுதும் மாநில உரிமைகள் எந்த அளவிற்கு மத்திய அரசால் பறிக்கப்படுகின்றன, அவை களெல்லாம் நாம் பெறுவதற்குத் தொடர்ந்து குரல் கொடுத் திருக்க வேண்டுமென்பதைச் சுட்டிக்காட்டினார்கள். இன்று நேற்றல்ல, மாநில உரிமைகள் வேண்டும்; இன்னும் சொல் லப்போனால் மாநில சுயாட்சி எல்லா மாநிலங்களுக்கும் அமையப் பெற வேண்டுமென்ற கருத்தை, நாம் அல்ல, பண் டித ஜவஹர்லால் நேரு அவர்களே கூட இந்தியா சுதந்திரம் பெறுகிற அந்தக் காலகட்டத்தில் அழுத்தந்திருத்தமாக எடுத் துரைத்து இருக்கிறார்கள். அகில இந்தியக் காங்கிரஸ் கட்சி 1945-ஆம் ஆண்டு இந்திய மக்களின் முன்னால் வைத்த தேர் தல் பிரகடனத்தில் இந்தியக் கூட்டாட்சி என்பது அதன் பல் வேறு பகுதிகளிலும் விரிந்து இணையும் ஒன்றியமாக இருக்க வேண்டும். அந்தப் பகுதிகளுக்கு அதாவது மாநிலங்களுக்கு அதிகபட்சம் சுதந்திரம் அளிப்பதற்காக எல்லோருக்கும் பொதுவான முக்கிய அதிகாரங்கள் கொண்டு, குறைந்தபட்ச அதிகாரத்தைக் கூட்டாட்சி அரசிற்கும், தேவைப்படும் பகுதி கள் அதாவது மாநிலங்கள் விரும்பினால் ஏற்கும் பொதுவான அதிகாரங்கள் கொண்ட பொதுப்பட்டியலும் இருக்கலாம். அதைத் தொடர்ந்து 1947-ஆம் ஆண்டு அரசியல் நிர்ணய சபையில்பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தில் இப்போது பிரிட்டிஷ் இந்தியாவில் உள்ள நிலப் பகுதிகளும், இந்திய சமஸ்தானங்களில் உள்ள நிலப்பகுதி களும், வேறு வெளியே உள்ள பகுதிகளும் இணைந்து சுதந் திர இந்தியாவாக விளங்கும். அரசியல் நிர்ணய சபை தீர்மா னிக்கிறபடியான எல்லைகளைக் கொண்டோ அல்லது இப் போதுள்ள எல்லைகளுடனோ அவை அரசியல் அமைப்புச்

சட்டத்தின் கீழ் தனித்த சுயாட்சி உள்ள பகுதிகளாகச் செயல்படும். எஞ்சிய அதிகாரங்களும் அப்பகுதிகளுக்கே அளிக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டது. ஆனால் இவை அனைத்தும் மறந்து போனவைகளாக, தொடர்ந்து மறுக்கப்படக்கூடிய கொள்கைகளாக காங்கிரஸ்காரர்களால் ஆகிவிட்டன என்பதை இந்த அவையிலே உள்ள உறுப்பினர்களும் நாட்டிலே உள்ள அரசியல்வாதிகளும் மிக நன்றாக அறிவார்கள்.

ஆனால், நாம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே இந்த அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதைப் போல அமைத்த குழு இராஜமன்னார் குழு-அந்தக் குழுவினுடைய பரிந்துரைகளை ஏற்று இந்த அவையில் 1974-ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட மாநில சுயாட்சித் தீர்மானம் தொடர்ந்து இன்று நாடு முழுவதும் பல்வேறு மாநிலங்களில், மாநிலங்கள் சுயாட்சித் தன்மையோடு, முழுமையான சுயாட்சித் தன்மையோடு விளங்க வேண்டுமென்கிற குரல் பரவத் தொடங்கியிருக்கிறது. கர்நாடகத்தில், கேரளாவில், ஆந்திராவில், மேற்கு வங்கத்தில், அஸ்ஸாமில், அரியானாவில் என்று இப்படிப் பல்வேறு மாநிலங்களில் உருவாகியிருக்கிற-உரக்க ஒலிக்கத் தொடங்கியிருக்கிற இந்தக் குரல் எதிர்க்கட்சிகளுடைய ஆட்சிகள் இல்லாத, காங்கிரஸ் ஆட்சிகள் இருக்கிற மாநிலங்களில் கூடப் பரவத் தொடங்கியிருக்கிறது.

இதைத்தான் அண்ணா அவர்கள் அன்றைக்கே சொன்னார்கள். இந்தக் கருத்தை வைத்து உடனடியாக நான் ஒரு பெரும் போராட்டம் நடத்த விரும்பாவிட்டாலும் கூட மாநிலங்கள் அதிக உரிமை பெற வேண்டும், மாநில சுயாட்சி பெற வேண்டுமென்ற இந்தக் கருத்தைப் பரப்புகிற பணியையே ஒரு போராட்டமாக இந்தியா முழுவதும் நடத்த வேண்டுமென்று அண்ணா அவர்கள் அன்று தன்னுடைய மரணத் தறுவாயில் எழுதிய இறுதிக் கடிதத்தில் 'ஹோம்லேண்ட்' பத்திரிகையில் குறிப்பிட்டார்கள். அதையொட்டி இன்றைக்கு இந்தியா முழுவதிலும் இந்தக் கொள்கை பரவியிருக்கிறது. அதே நேரத்தில் மாநில அரசுகள் இன்றுள்ள சூழ்நிலையில் மத்திய அரசு நிர்வாகத்தின் கீழ் இயங்க வேண்டிய இந்த நிலையில், நிர்வாக மோதல்களை, தேவையற்ற அளவிற்கு உருவாக்கிக் கொள்ளாமல், மாநில சுயாட்சிக்காக நாம் குரல் கொடுத்துக் கொண்டிருந்தாலும்கூட, நிர்வாகத்தில் மோதுதல் ஏற்படக்கூடாது. உறவிற்குக் கை கொடுப்போம் - நிர்வாகத்தில்; அதே நேரத்தில் நமமுடைய உரிமைகளுக்குக் குரல் கொடுப்போம் என்ற அந்த மொழிக்கு ஏற்ப நடந்து கொள்ள வேண்டுமென்ற அடிப்படையில் தான் தமி




ழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி, அன்றும் சரி, இன்றும் சரி, தன்னுடைய கொள்கைகளை வகுத்துக்கொண்டு நடைபோட்டுக் கொண்டிருக்கிறது. இங்கே படிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையானாலும், இன்றைக்கு விவாதிக்கப்பட்டு நிறைவுற்ற நிலையில் பதிலளிக்கப் படுகிற இந்தச் சூழ்நிலையானாலும் அரசியல் சட்டத்தின் பாற்பட்டு நடைபெறுகிற செயல்களே தவிர விரோதமான செயல்கள் அல்ல. கவர்னர் அவர்கள் கடந்த 25-ஆம் தேதியன்று நிதிநிலை அறிக்கை சட்டமன்றத்திலே வைக்கப்பட வேண்டும் என்று அறிவிக்கிறார்கள். ஆணையிடுகிறார்கள். அதற்கேற்ப அரசியல் சட்டத்தினுடைய அடிப்படையிலே தான், கவர்னர் குறிப்பிட்ட அந்த நாளில் நிதிநிலை அறிக்கை இங்கே படிப்பதற்கு நாங்கள் முன்வருகிறோம்.

நிதிநிலை அறிக்கை படிக்கப்படுகிற நேரத்திலே ஒரு குழப்பம் ஏற்படுத்தி, அந்த நிதிநிலை அறிக்கை வழங்கப் படும்போது அவைகள் கிழித்தெறியப்பட்டும், சுக்கு நூறாக ஆக்கப்பட்டும் ஒரு அமளியை உருவாக்கிவிட்டு, பிறகு நிதி நிலை அறிக்கையை நான் படிக்கத் தொடங்கியபோது, ஏற்கெனவே நிதிநிலை அறிக்கை வெளியாகிவிட்டது என்று எடுத்துச்சொல்லி, எனவே, நிதியமைச்சர் ராஜினாமா செய்ய வேண்டும் என்று கூறக்கூடிய வாய்ப்புக்கூட உண்டு. அதனால் தான் நிதிநிலை அறிக்கை படிக்கிற நாளில், அந்த அலுவலைத் தவிர, வேறு அலுவல் இருக்கக்கூடாது என்று ஏற்கெனவே இருந்த சபாநாயகர்கள் முடிவு எடுத்து, அரசியல்

சட்டத்தின் அடிப்படையில் வரவு செலவுத் திட்டத்தை இந்த அவையின் முன்னால் நான் வைத்தேன்.

அன்றைக்கு நடைபெற்ற அமளி துமளிகளைப் பற்றியெல்லாம் நான் இங்கே மீண்டும் நினைவூட்டவோ, அவைகளை விரிவாகப் பேசவோ விரும்பவில்லை. ஏன் என்றால், நாங்களும் நீங்களும் சேர்ந்து மக்களுக்கு ஆற்ற வேண்டிய பணி ஏராளமாக இருக்கிறது. அதற்காகத்தான் இந்த நிதி நிலை அறிக்கையே தயாரிக்கப்பட்டது. இந்த அறிக்கை தயாரிக்கப்படும்போது, நம்முடைய நிதி நிலவரங்கள், திட்டங்கள் இவைகளைப் பற்றியும் கொஞ்சம் நெஞ்சிலே பதிய வைத்துக் கொள்ள வேண்டியது அவசியம். இந்த அறிக்கையில் கூட அதைக் குறிப்பிட்டிருக்கிறேன். இருந்தாலும் கூட, இங்கே பேசிய எதிர்க் கட்சியினுடைய துணைத்தலைவர் அவர்கள் ஏதோ இந்த அரசு வந்த பிறகு தான், திட்டங்களையெல்லாம் நிறைவேற்றவில்லை என்பதைப் போல ஒரு குற்றத்தைச் சுமத்தினார். அல்ல, நடப்பு ஆண்டு என்பது பிப்ரவரி-மார்ச் ஆகிய இந்த 2 மாதங்கள் மாத்திரமல்ல. நடப்பாண்டிலே இவைகள் மிச்ச சொச்ச மாதங்களே தவிர, வேறு அல்ல.

1988-89 என்கின்ற இந்த ஆண்டு முழுவதும் குடியரசுத் தலைவருடைய ஆட்சி நடைபெற்ற ஆண்டாகும். இந்த ஆண்டிலேதான் தமிழ்நாடு ஆண்டுத் திட்டத்திற்கு 1,457 கோடி ரூபாய் அங்கீகாரம் கிடைத்துவிட்டது என்று அன்றைக்குச் சொன்னார்கள். ஏன், தேர்தல் வரப்போகிறது என்ற காரணத்தினால், தேர்தல் பிரச்சாரத்திற்காக அதைப் பயன்படுத்திக்கொள்ள, திட்டத்திற்கு 1,457 கோடி ரூபாய்க்கு அனுமதி கிடைத்துவிட்டது என்ற ஒரு போலிப் பிரச்சாரம், ஒரு மாய்மாலப் பிரச்சாரம் அன்றைக்கு நடைபெற்றது. அதுகுறித்து, அன்றைக்கு 13.2.88 'தினமணி' பத்திரிகையில் நம்முடைய மதிப்பிற்குரிய மூப்பனார் அவர்கள் ஒரு செய்தி விடுத்தார்கள்.

''தமிழகத்தின் வளர்ச்சிக்கும், நல்வாழ்விற்குமான திட்டப் பணிகளுக்கு 1,457 கோடி ரூபாய் வழங்கச் சம்மதித்ததற்காகப் பிரதமர் ராஜீவ்காந்தி மற்றும் திட்டக் குழுவிற்கு அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிப் பொதுச் செயலாளர் ஜி. கே. மூப்பனார் நன்றி தெரிவித்து உள்ளார்'' என்று ஒரு செய்தி தினமணியிலேயும், அதைத்தொடர்ந்து அதே பத்திரிகையில் ''தமிழ்நாட்டில் ஆண்டுத் திட்டத்திற்குக் கூடுதலாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது குறித்து, மத்திய உள்துறை இணை மந்திரி ப.சிதம்பரம் அவர்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்'' என்று ஒரு செய்தியும் அதிலே வந்தது. ஆனால் உண்மை என்னவென்றால், தமிழ்நாடு அரசு கேட்டது 1,430 கோடி தான். திட்டத்திற்காகக் கேட்டதே 1430 கோடி. ஆனால் திட்டக்குழு ஒதுக்கியது 1,457 கோடி. ஏன் என்பது உங்

களுக்குப் புரியும். தேர்தல் ஆண்டு என்பதால், நீங்கள் கேட்டது 1,430 கோடியாக இருந்தாலும், நாங்கள் 1,457 கோடி ஒதுக்குகிறோம் என்று அறிவித்தார்கள். 27 கோடி ரூபாய் அதிகம் பெற்றுவிட்டோம் என்றெல்லாம் அங்கலாய்த்துக் கொண்டார்கள். இதிலே திட்டத்திற்கான முழுத்தொகையையும், மத்திய அரசே கொடுப்பது அல்ல. திட்டத்திற்கான ஒப்புதல் அதற்குப் பெயர்தான் திட்டத்தை ஒத்துக்கொண்டோம், திட்டத்தை ஒத்துக்கொண்டோம் என்பது. அவர்கள் ஓரளவு பணம் தருவார்கள். ஒரு திட்டத்திலே மூன்றிலே ஒரு பங்கு கூட மத்திய அரசினுடைய உதவி கிடைக்காது. நாம் இந்த மாநிலத்திலே உருவாக்கிக் கொள்கின்ற ரிசோர்சஸ் - நிதி ஆதாரங்கள், அவைகளைக் கொண்டுதான் திட்டங்கள் அமைக்கப்படுகின்றன. ஆனால் இதில் உண்மை என்னவென்றால், 1987-88 ஆம் ஆண்டைவிட 207 கோடி ரூபாய் அதிகமாகக் கிடைத்துவிட்டது என்று மகிழ்ச்சி தெரிவிக்கப்பட்டாலும்கூட, வாக்களித்தபடி எந்த ரிசோர்சும் கவர்னர் ஆட்சியிலே திரட்டப்படவில்லை. அதனால் கவர்னர் ஆட்சியில் 1,457 கோடி என்பது, 1202 கோடி ரூபாய் என்று திட்டம் குறைந்தது. அதற்கு, 60 நாளில் பொறுப்பேற்றிருக்கிற நாம் நிச்சயமாகக் கடமைப்பட்டவர்கள் அல்ல. அதற்கு முழுப் பொறுப்பும் ஏற்க வேண்டியது குடியரசுத் தலைவருடைய ஆட்சிதான்.

அந்தக் காலத்திலேதான் 409 திட்டங்கள் கைவிடப்பட்டன. 409 திட்டங்கள் கைவிடப்பட்டும், 1987-88 ஆம் ஆண்டைவிட 135 கோடி ரூபாய் குறைந்துவிட்ட ஒரு நிலையும் அன்றைக்கு உருவானது. திட்டத்தைக் குறைத்து 1988-89 ஆம் ஆண்டு இறுதிப் பற்றாக்குறை ஏறத்தாழ 175 கோடி. இந்தச் சூழலிலே சென்ற ஆண்டு திட்டம் 1202 கோடிரூபாய் என்று இருந்ததை நாம் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற பிறகு டெல்லி சென்று திட்டக் குழுவோடு விவாதித்து 1,202 கோடி ரூபாய் என்று வகுக்கப்பட்டிருப்பதை, அதற்கான ஒப்புதலை 1,360 கோடி ரூபாய் என்கிற அளவிற்கு இந்தத் திட்டத்தை அதிகப்படுத்திய பெருமை திராவிடமுன்னேற்றக் கழக ஆட்சிக்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி)

எனவே, நாம் இங்கே திட்டச்செலவு உட்பட 5,100 கோடி ரூபாய்க்கான பட்ஜெட்டைப் பற்றித்தான் விவாதித்துக் கொண்டிருக்கிறோம் என்பதை மறந்துவிடக்கூடாது. 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொகையைக் கொண்ட ஒரு பட்ஜெட்டைப் பற்றி விவாதிக்கும்போது, எவ்வளவு அக்கறையோடு, ஆர்வத்தோடு, உண்மையோடு, மக்களுடைய பிரச்சினைகளை மையமாக வைத்து நடந்து கொள்ள வேண்டும் என்கிற பொறுப்புள்ள உறுப்பினர்கள் எல்லாம் அமர்ந்திருக்கிறார்கள் என்பதற்காக நான் பூரிப்பு அடைகிறேன். உங்களையெல்லாம் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனவே, ஏற்கெனவே தொடங்கிய திட்டங்கள், தொடர வேண்டிய திட்டங்கள், புதுத்திட்டங்கள் ஆகியவற்றிற்காக நாம் செலவிட வேண்டியிருப்பதால் இப்போது துண்டு விழுகிற தொகை ரூபாய் 154 கோடியும் சேர்த்து 219 கோடி ரூபாய் மொத்தமாகத் துண்டு விழுகிற பட்ஜெட்டாக நாம் தரவேண்டியிருந்தது என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

மத்திய அரசை நம்பி இந்தத் திட்டங்களையெல்லாம் நிறைவேற்றமுடியாது என்று பி.எச்.பாண்டியன் அவர்கள் நேற்றைக்குச் சொன்னார்கள். நம்புவது என்பது வேறு. தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டேயிருப்போம். நம்பிக்கையோடு வலியுறுத்திக்கொண்டே இருப்போம். குடியரசுத் தலைவருடைய ஆட்சியில் ஏற்பட்ட பற்றாக்குறையைச் சரிக்கட்ட வேண்டிய பொறுப்பும் உதவ வேண்டிய கடமையும் மத்திய அரசுக்கு இருக்கிற காரணத்தால் நம்பிக்கையோடு நாம் வலியுறுத்துவோம் என்பதை மீண்டும் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தச் சூழலில் வழக்கமாக மாநில அரசு மேற்கொள்ளுகிற வேளாண்மை வளர்ச்சித்திட்டம், கல்வித்திட்டம், மீன் வளர்ப்புத்திட்டம், வனவளத்திட்டம், நீர்ப்பாசனத் திட்டம், மின் இணைப்புத் திட்டம், தொழில், மக்கள் நல்வாழ்வுத் திட்டம், சத்துணவுத் திட்டம் போன்ற வழக்கமான திட்டங்களைச் செயல்படுத்துவதில், ஒழுங்காகச் செயல்படுத்துவதில், முனைப்பாகச் செயல்படவேண்டிய இந்த அரசு, தேர்தல் காலத்தில் அளித்த வாக்குறுதிகளையும் நிறைவேற்றக் கடமைப்பட்டிருக்கிறது. அப்படி நிறைவேற்றுகிற வகையிலே தான், ஆளுநர் உரையிலே பேசும்போது பல உறுப்பினர்கள் எதிர்க் கட்சியின் சார்பிலே பேசிய பல உறுப்பினர்கள் கூட, தேர்தல் வாக்குறுதிகள் எல்லாம் எங்கே எங்கே என்றெல்லாம் கேட்டார்கள். நாம் அந்தத் தேர்தல் வாக்குறுதிகளை எந்த அளவிற்கு நிறைவேற்றி இருக்கிறோம் என்பதை ஓரளவு சுருக்கமாக எடுத்துக்கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எம்.ஜி.ஆருடைய ஆட்சியில் கடன்களை ரத்து செய்திருக்கிறார்கள். உண்மை. ஆனால் அப்படி ரத்து செய்த கடன்களுக்காகக் கூட்டுறவு சொசைட்டிகளுக்குக் கட்ட வேண்டிய பாக்கித்தொகை 67 கோடி ரூபாய் இன்னமும் கட்டப்படவில்லை. அதைக்கட்ட வேண்டிய பொறுப்பு நம்முடைய தலையிலே விழுந்து இருக்கிறது என்பதை அறிக்கையிலே தான் சுட்டிக்காட்டியிருக்கிறேன். அது மாத்திரம் அல்ல.

இப்போது விவசாயிகளுக்கு இந்த அரசு அறிவித்துள்ள கடன் ரத்தின் மூலம், மேலும் ஒரு 39 கோடி ரூபாய் நாம் அந்தச் சொசைட்டிகளுக்குக் கட்ட வேண்டியிருக்கிறது என்பதை, அதுவும் அரசுக்கு ஏற்பட்டுள்ள மற்றொரு சுமை. கைத்தறியாளர்களுடைய சொசைட்டிக்குக் கடந்த ஆட்சியில் ரிபேட் கொடுக்க வேண்டிய பாக்கி, 3 ஆண்டுகளுக்கு 26.15 கோடி ரூபாய்; அதையும் நாம் தான் பொறுப்பு ஏற்க வேண்டியிருக்கிறது. தற்போது ரிபேட்டாகச் சேர்க்கப்பட்டுள்ளது 15 கோடி; அதையும் நாம் தான் தரவேண்டும். இந்த ஆட்சியில், அரிசி விலையை மத்திய சர்க்கார் திடீர் என்று உயர்த்தியதால் சப்சிடி கொடுக்கிற வகையில் 23 கோடி ரூபாய் கூடுதலாக நாம் செலுத்த வேண்டியிருக்கிறது. ஆக மொத்தம் 170 கோடி ரூபாய் புதிய சுமை கடந்த கால ஆட்சி தொட்டு இன்றைக்கு மத்திய சர்க்கார் அரிசிவிலையை ஏற்றிய இந்த நிலை வரையில் 170.15 கோடி ரூபாய் சுமையைத் தாங்கிக் கொள்ள வேண்டிய கஷ்டம் நமக்கு ஏற்பட்டிருக்கிறது.

நிதிநிலை அறிக்கை இங்கே நிறைவேற்றப்படுவதற்கு முன்பாகவே இந்த 60 நாளிலேதான் நம்முடைய தேர்தல் வாக்குறுதிகள் பலவற்றை நிறைவேற்றியிருக்கிறோம். நான் அவைகளையெல்லாம் ஒவ்வொரு வரியிலே சொன்னால் போதும் என்று நினைக்கிறேன்.

''சட்டமன்ற மேலவை அமைக்கின்ற தீர்மானம், மாநகராட்சி மன்றங்களுக்குத் தேர்தல் நடத்துதல்,



ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், நகராட்சி ஒன்றியத் தலைவர்கள் உறுப்பினர் பதவிக் காலத்தை 5 ஆண்டுகளாக நீட்டித்தல், ஊராட்சி ஒன்றியங்களுக்கு அதிகாரங்களை ஓரளவு திரும்ப அளித்தல், மகளிருக்கு 30% அரசுப் பணியில் ஒதுக்கீடு செய்தல், அரசுப் பணியில் சேர்வோருக்கு வயது வரம்பை 30 என உயர்த்துதல்; விவசாயிகள் மின் வாரியத்திற்குச் செலுத்த வேண்டிய தாமத நிலுவைத்தொகைக்கான அபராத வட்டியை அறவே ரத்து செய்தல், சத்துணவுக்கூட ஊழியர்களைப் பகுதி நேர நிரந்தர அலுவலர்களாக ஆக்குதல் ஆகியவை''.

நிதிநிலை அறிக்கையில் பல்வேறு துறைகள் பற்றிய குறிப்பில் நிறைவேற்றப்பட்டுள்ள தேர்தல் வாக்குறுதிகளையும் நான் உங்களுக்கு நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விவசாயிகளுடைய பழைய கூட்டுறவுக் கடன் பாக்கி ரத்துக்காக ஏற்கெனவே கட்ட வேண்டிய தொகையும் சேர்த்து 106 கோடி ரூபாய்; ஆரம்பச் சுகாதார நிலையங்கள் உருவாக்க ரூ. 8.31 கோடி ரூபாய், ஏழை நோயாளிகளுக்கு இலவசமாக மருந்துகளை அளிக்க 3.40 கோடி ரூபாய்; ஊரகக் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்க 20 கோடி ரூபாய். ஆதிதிராவிடர்களுக்கும், மீனவர்களுக்கும் இலவச கான்கிரீட் வீடுகளைக் கட்ட 49 கோடி ரூபாய்; ஆதிதிராவிடர் பழங்குடி மாணவர்களுக்குப் பட்டப் படிப்பு வரை இலவசக் கல்வியளிக்க 2.25 கோடி ரூபாய்; ஊரகப் பகுதிகளில் படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புத்தர 6 கோடி ரூபாய்; வீட்டுமனைகளை ஆதிதிராவிடர்களுக்கு இலவசமாக வழங்க 2.35 கோடி ரூபாய். ஏழை நடுத்தரக் குடும்பங்களைச் சார்ந்த பெண்களுக்குப் பட்டப் படிப்பு வரையில் இலவசக் கல்வியளிக்க 50 இலட்சம் ரூபாய்; வறுமையில் உழலும் குடும்பங்களைச் சார்ந்த பெண்கள் 8 ஆம் வகுப்பும் அதற்கு மேலும் படித்துத் தேறினால் அவர்களுக்குத் திருமணச் செலவு வழங்க 6 கோடி ரூபாய்; வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் கருவுற்ற மகளிருக்கு நிதியுதவிக்காக 4 கோடி ரூபாய்; விவசாயிகள் பயன்படுத்தும் பம்ப் செட்டுகள் உள்ளிட்ட விவசாயச் சாத

னங்களுக்குத் தற்போது விதிக்கப்பட்டு வரும் விற்பனை வரியை ரத்து செய்கின்ற வகையிலே வருவாய் இழப்பு 4 கோடி ரூபாய்; பலமுனை வரியை ஒருமுனை வரியாக மாற்றுதலும், வணிக நல அமைப்பினை ஏற்படுத்துவதும், இதற்காக வருவாய் இழப்பு 50 இலட்சம். வணிக நல வாரியத்தை ஏற்படுத்த 2 கோடி ரூபாய் என்ற வகையிலே இந்தச் செலவினங்கள்.

*ஏனைய தேர்தல் வாக்குறுதிகள் - அவைகளையும் வரிசைப்படுத்திக் கூற விரும்புகிறேன்.*

வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் பொங்கல், தமிழ்ப் புத்தாண்டு. தீபாவளி ஆகிய நாட்களில் 5 கிலோ அரிசி இலவசமாக வழங்க 14 கோடி ரூபாய். வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள எல்லாத் தாய்மார்களுக்கும், ஆடவருக்கும் ஆண்டு தோறும் இலவசக் கைத்தறி, வேட்டி, சேலை ஆகியவை வழங்க 27.20 கோடி ரூபாய். முதியோர் உதவித் தொகையை உச்சவரம்பு இல்லாமல் எல்லோருக்கும் 60 வயதடைந்த அனைத்து விவசாயத் தொழிலாளிகள், அநாதைகள், ஆதரவற்ற விதவைகள் அனைவருக்கும் இத்தனைப் பேருக்குத்தான் என்ற எண்ணிக்கையின்றி 35 ரூபாயை 50 ஆக உயர்த்திக் கொடுக்க சுமார் 4 இலட்சம் பேர்களுக்கு 21 கோடி ரூபாய். விவசாயத் தொழிலாளர், சிறுவிவசாயிகள், நெசவாளர், மீனவர், கல்லுடைப்போர், பாரம் தூக்குவோர், பளு வண்டி இழுப்போர், கைவினைஞர், கட்டிடத் தொழிலாளர் போன்ற தினக்கூலி வேலை பார்ப்போர் மற்றும் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பத் தலைவர் இறந்துவிட்டால் குடும்பத்திற்கு 2,000 ரூபாய் வழங்குகின்ற இந்தத் திட்டத்திற்காக 5 கோடி ரூபாய்; விபத்துகளில் கட்டடத் தொழிலாளர்கள், லாரி ஆட்டோ ரிக்ஷா, தனியார் கார், டாக்ஸி, பேருந்து ஓட்டுநர் இறந்தால் அவர்கள் குடும்பத்திற்கு 10,000 ரூபாய் வழங்குகின்ற திட்டம் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து வழங்கும் என்று அறிவித்துக் கொள்கிறேன்.

அனைத்து சைக்கிள் ரிக்ஷாக்களுக்கும் மோட்டார் பொருத்திக் கொடுக்க 1 கோடி ரூபாய். மோட்

டார் பொருத்திய சைக்கிள் ரிக்ஷா, டாக்சி ஓட்டுநர் புதிய வாகனங்கள் வாங்க, குறைந்த வட்டியிலே கடன் வழங்கத் திட்டம் மேற்கொள்ள 25 இலட்சம் ரூபாய். சென்னை மாநகராட்சியில் சாலைகள், துப்புரவு வசதி போன்ற வசதிகளை விரிவாக்கும் திட்டத்திற்கு 100 கோடி ரூபாய் அறிவிக்கப்பட்டு, இந்த ஆண்டு அதற்காக 20 கோடி ரூபாய் செலவழிக்கப்படவிருக்கிறது.

நம்முடைய இந்தத் திட்டங்களைப் பற்றியெல்லாம் நம்முடைய நண்பர் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச்சேர்ந்த அழகர்சாமி அவர்கள் பேசும்போது தர்ம சிந்தனையோடு இந்தப் பணிகளை நாம் ஆற்றுகிறோம் என்றாலும், ஏழைகளுக்காக ஏழை எளியவர்களுக்காக ஆற்றுகிறோம் என்றாலும், மக்களின் ஏழ்மையைப் போக்கக்கூடிய திட்டங்கள் தீட்டப்படவேண்டும் என்று எடுத்துச் சொன்னார்கள். நாங்களும் பலமுறை அந்தக் கருத்தை எடுத்துக் கூறியிருக்கிறோம். அந்த வார்த்தைகளை மனதிலே கொண்டுதான், மக்களின் ஏழ்மையைப் போக்குவதற்கு வேலைவாய்ப்புகளைப் பெருக்கவும், புதிய புதிய தொழில்களை உருவாக்கவும், உற்பத்தியைப் பெருக்கவுமான திட்டங்களைத் தீட்ட வேண்டும் என்பதை மனதிலே கொண்டு, அதுபற்றியும் நிதிநிலை அறிக்கையிலே தெளிவாகக் கூறியிருக்கின்றோம்.


வளர்ந்துவிட்ட விஞ்ஞான உலகத்தில் மின்சாரம்தான் எல்லாவற்றிற்கும் உயிர்நாடியாக இருக்கின்றது. அந்த மின்சார உற்பத்தியிலும், அதன் தொடர்பாகத் தொழில்துறை வளர்ச்சியிலும் அதனைக் கொண்டு வேலைவாய்ப்பினைப் பெருக்குவதிலும் குறிப்பாக, பின் தங்கிய மாவட்டங்களைத் தொழில்வளம் உள்ள இடங்களாக மாற்றுவதிலும், வேலைவாய்ப்புக்களைப் பெருக்கி அதன் மூலம் ஏழ்மையை அகற்றலாம் என்பதிலும் இந்த அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருவதோடு, தொழில் முயற்சிகள் பற்றித் தொழில்துறை மானியத்தில் விரிவாக விவாதிக்கலாம் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

திட்டங்களை அறிவித்தால் மட்டும் போதாது. அவைகள் எல்லாம் மக்களிடம் போய்ச் சேரவேண்டும் என்று திரு.பூவராகவன் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். அதை நான் நிதிநிலை அறிக்கையிலேயே 85-வது பாராவிலேயே எடுத்துச் சொல்லிபிருக்கிறேன். இவைகள், மக்களிடத்திலே போய்ச் சேருவதற்கு வழி என்ன என்று சொல்லியிருக்கிறேன்.

இவைகள் சரியாகப் போய்ச் சேர்வதில்லை என்பதற்கு உதாரணம் சொல்ல வேண்டுமேயானால், இப்போது புதி

தாக ஒரு திட்டத்தைச் சேர்த்திருக்கிறோம். ஏற்கெனவே அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே கூட, விபத்திலே இறந்துவிடும் சில பேருக்கு நிதியுதவி செய்வதாக அறிவிக்கப்பட்டது.

மரம் ஏறும் தொழிலாளி, பூச்சி மருந்து அடிக்கும் தொழிலாளி, கிணறு வெட்டும் தொழிலாளி, பனை மரம் ஏறும், பதநீர் இறக்குவோர் என்று இப்படி, அதோடு சேர்த்து, இப்போது விவசாயத் தொழிலாளி, சிறுவிவசாயி, சலவைத் தொழிலாளர்கள், செருப்புத் தைப்போர், தீப்பெட்டித் தொழி



லாளர்கள், மரவேலைப் பணியிலே ஈடுபடுவோர், கூடை முடைவோர், கல் உடைப்போர், கட்டிடத் தொழிலாளர்கள் ஆகியவர்களோடு, லாரி, ஆட்டோ, ரிக்ஷா, தனியார் கார், டாக்சி, பேருந்து ஓட்டுநர், எல்லாக் கட்டிடக் கட்டுமானத் தொழிலாளர்கள் விபத்திலே சிக்கி இறக்க நேரிட்டால் அவர்கள் குடும்பத்திற்கு 10,000 ரூபாய் தரப்படும் என்று நான் இங்கே அறிவித்துக்கொள்கிறேன்.

ஆனால், கடந்த காலத்திலே இதிலே எல்லோருக்கும் இல்லாவிட்டாலும், சில பகுதியினருக்கு இதுபோன்ற விபத்து உதவி தரப்பட்டதாகச் சொல்லப்பட்டது. தரப்படுவதாக அறிவிக்கப்பட்டது. நான் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, நான்

பார்த்த சில செய்திகளை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

பெரியண்ண நாடார், சேலம் மாவட்டத்தைச் சேர்ந்தவர் விபத்திலே இறந்த தேதி 5.8.86. 86-ஆம் ஆண்டு 8 ஆம் மாதம் 5 ஆம் தேதி இறந்து விடுகிறார். அவருக்கு உதவிக்கு ஆணை பிறப்பித்த தேதி 31.3.89. இறந்தது '86இல். குடும்பத்திற்கு உதவிக்காக நான் வந்து ஆணை பிறப்பிக்கிறேன்.

வி.செல்லையா, குமரி மாவட்டத்தைச் சேர்ந்தவர். அவர் விபத்திலே இறந்தது 27.3.79. இப்போது நான் ஆணை பிறப்பிக்கிறேன். 31.3.89இல், 10 ஆண்டுகளுக்குப் பிறகு. அந்தப் பணத்தை வாங்க யார் இருக்கிறார்களோ எனக்குத் தெரியவில்லை. அப்படிப்பட்ட அளவிற்குத்தான் பூவராகன் சொல்வதைப்போல, உரிய அளவில் போய்ச் சேரவில்லை.

அதுமாத்திரமல்ல. பெரியார் மாவட்டத்தில் ராமசாமி நாடார், அவர் விபத்திலே இறந்தது 4.6.84-இல். அவருக்கு உதவி அளிக்கப்பட்டது இப்போது 29.3.89-இல்தான். நான் கையெழுத்திட்டு உதவிப்பணத்தை அனுப்பியிருக்கிறேன். அதைப்போல் ஏ.சுடலைமணிநாடார், அவர் விபத்திலே இறந்தது 8.5.85இல். அவருக்கு 16.2.89-இலேதான் நாம் உதவி அளித்திருக்கிறோம். கே.அப்புக்குட்டி 21.2.87இல் விபத்தில் இறந்தார். அவருக்கு 16.2.89 இல் தான் உதவி அளிக்கப்பட்டிருக்கிறது.

பேச்சிமுத்து 2.6.87ல் விபத்தில் இறந்தார். இப்போது 16.2.89லே தான் உதவி அளிககப்பட்டிருக்கிறது. சென்னியப்பன் 16.4.87இல் விபத்தில் இறந்தார். அவருக்கு 16.2.89 இல் தான் உதவி அளிக்கப்பட்டிருக்கிறது. ஒரு கோப்பில் நான் இதையே எழுதினேன். நாராயணசாமி தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர். அவர் விபத்திலே இறந்தது 6.12.81 இல். அவருக்கு ஆணை பிறப்பித்து மீண்டும் பணம் அனுப்பியது 3.3.89இல் நாம் ஆட்சிக்கு வந்த பிறகு. அந்தக் கோப்பில் இதையே எழுதினேன். நான் அந்தக் கோப்பில் எழுதும் போது ''1981இல் விபத்தில் மாண்டவர் குடும்பத்திற்கு 89 இல் உதவி அளிப்பது வேதனையான விசித்திரம். இது போன்றவற்றில் விரைவான நடவடிக்கைக்கு வழி வகுத்திட வேண்டும்'' என்று எழுதினேன். எனவே தான் இது போன்ற நிலைமை இனிமேல் வராமல் நிச்சயமாக இந்த அரசு பணியாற்றும். ''சொன்னதைச் செய்வோம் (கைதட்டல்) செய்வதையும் செவ்வனே செய்வோம்'' என்று திரு. பூவராகன் போன்றவர்களுக்கும் மற்றுமுள்ள எதிர்க்கட்சி, தோழமைக் கட்சி நண்பர்களுக்கும் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கிராமப்புறங்களில் பணிகள் சீராக நடைபெற வேண்டும் என்ற ஒரு எண்ணத்தில், பல கட்சித் தோழர்களும்

அதிலே உள்ள குறைபாடுகள், முறைகேடுகள் இவைகளை யெல்லாம் அறிவித்த காரணத்தால், திடீர் என்று ஒரு மாற்றம், அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது கொண்டுவரப்பட்டது. ஆனால் அந்த மாற்றம் நல்ல மாற்றமாக இருக்கவேண்டும் என்று எதிர் பார்த்ததிலே தவறு இல்லை. ஆனால் ஒவ்வொரு கிராமத்திலும் அந்தக் கிராம அதிகாரிகள் மாற்றப்பட்டு புதிய ஏற்பாடுகள் செய்யப்பட்ட காரணத்தினாலே பல சிக்கல்கள் எழுந்து இருப்பதை இன்றைக்கு எங்களால் உணர முடிகிறது. அந்த அதிகாரிகள் அந்தக் கிராமத்தில் இருப்பது இல்லை. அடங்கல் போன்றவை, மற்றக் கணக்கு வழக்குகள் இவைகளையெல்லாம் தெரிந்துகொள்ள அந்தக் கிராமத்திலுள்ள அனுபவசாலிகள் இருந்திட வேண்டும். அவர்கள் மீது குறைகள், சிறு சிறு குறைபாடுகள், அவர்கள் பணம் கேட்கிறார்கள், லஞ்சம் வாங்குகிறார்கள், ஊழல் நடக்கிறது என்கின்ற அந்தக் குறைபாடுகளில் எல்லாம் சில பலவற்றில் உண்மை என்றாலும் கூட, அது அறவே நீக்கப்பட்டு விட்ட காரணத்தால் கிராமப்புறத்தில் உள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் பொதுப் பாதிப்புக்கு ஆளாகியிருக்கிறார்கள். கிராமக் கணக்குக்கூட சரியாக எழுதுவதற்குக் கிராமங்களில் ஆள் இல்லை, இன்னும் சொல்லப் போனால் ஜனன, மரணக் கணக்குக் கூடச் சரியாக எழுதப்படாத ஒரு சூழ்நிலை கிராமங்களில் இருக்கிறது. இதையெல்லாம் மாற்றி அமைத்து, அதே நேரத்தில், புதிதாக இந்தப் பணியில் சேர்க்கப்பட்ட அலுவலர்களுக்கு எந்தவிதமான பாதகமும் வராமல், எப்படி இதை மாற்றி அமைக்கலாம் என்பதை அறிவதற்காக முன்னாள் ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி லட்சுமிகாந்தன் பாரதி அவர்களைத் தலைவராகக் கொண்டு, வருவாய்த் துறைச் செயலாளர், வருவாய் நிர்வாகத் துறை இணை ஆணையர் ஆகியோரை உறுப்பினராகக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டு அது தன்னுடைய பணியைத் தொடங்கி விரைவிலே அறிக்கையைத் தர இருக்கிறது. அந்த அறிக்கையைப் பெற்று அரசு உடனடியாக அதை ஆராய்ந்து செயல்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் மக்களின் நல்வாழ்வுக்காக அரசு செலவிடுகின்ற தொகை, உரிய முறையில் அவர்களுக்குப் போய்ச் சேரவும், மனித நேயத்தோடு மருத்துவப் பணியாளர்கள் தங்களுடைய கடமைகளை ஆற்றவும், மருத்துவ நிர்வாகங்கள் ஒழுங்குபடவும் ஆராய்ந்து அறிக்கை தர, டாக்டர் ராமமூர்த்தி அவர்கள் தலைமையில் டாக்டர் ஏ.வேணுகோபால், டாக்டர் சாம்.மோசஸ் ஆகியோரைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டு, அவர்கள் பல பகுதிகளுக்குச் சென்று தங்கள் பணிகளை ஆற்றி வருகிறார்கள். விரைவில் அவர்களு

டைய அறிக்கை கிடைக்கப்பெற்றதும் அதனைப் பரிசீலித்து அதற்கு ஏற்ப மக்கள் நல்வாழ்வுத் துறையில் ஏற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

அண்மையிலே தொழில் அதிபர்களையெல்லாம் அழைத்து, தமிழகத் தொழில் வளர்ச்சி மேன்மை பெறவேண்டும் என்பது குறித்து நான் விவாதித்ததன் அடிப்படையில் தொழில்வளர்ச்சி குறித்து அடிக்கடி கருத்துப் பரிமாற்றங்கள் செய்துகொள்ள மாநில அளவில் தொழில் அதிபர்கள் அடங்கிய ஒரு ஆலோசனைக்குழு அமைத்திடவும் ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதிலே யார், யார் இருக்க வேண்டும் என்று தேர்வு செய்து, அவர்களை அனுப்ப வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

உங்களுக்குத் தெரியும், இந்தியாவிலேயே முதன் முதலாகக்கழக ஆட்சியிலே தான் தமிழ்நாட்டில் மாநிலத் திட்டக் குழு அமைக்கப்பட்டது. அப்போது மத்திய அமைச்சராக இருந்த திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் இந்தியாவிலே நடைபெற்ற முதல் முயற்சியைப் பாராட்டி அரசுக்குக் கடிதம் கூட எழுதி இருந்தார். பாராட்டிப் பேசியதும் உண்டு. ஆனால் கடந்த காலத்தில் அந்தக் குழுவினுடைய பணிகள் சீராக அமையவில்லை. யார், யாரோ தலைவராக வந்தார்கள். எப்படி வாரியங்களுக்குத் தலைவர்களை நியமித்தார்களோ அதேபோல் அந்த மாநிலத் திட்டக் குழுவுக்கும் யார் யாரோ தலைவராக வந்தார்கள். அதனால் சீராக அதனுடைய பணிகள் நடைபெறவில்லை. எனவே அதை மீண்டும் புதுப்பித்து முதலமைச்சரே அந்த மாநிலத் திட்டக் குழுவுக்குத் தலைவராக இருப்பது என்றும், அந்தத் திட்டக் குழுவில் அண்ணா பல்கலைக் கழகத்தின் துணை வேந்தரும், பொறியியல் வல்லுநருமான டாக்டர் வி. சி. குழந்தைசாமி அவர்களும், விவசாயத் துறையில் உலகப் பிரசித்தி பெற்ற விஞ்ஞானியும், முன்னாள் மத்திய திட்டக் குழுவினுடைய துணைத் தலைவருமான, டாக்டர் எம். எஸ். சாமிநாதனும், தமிழ்நாட்டில் தலைசிறந்த பொருளாதார நிபுணர், சென்னைப் பல்கலைக் கழக முன்னாள் துணை வேந்தர் டாக்டர் எம். எஸ். ஆதிசேஷையா அவர்களும், குஜராத் மாநில முன்னாள் தலைமைச் செயலாளர், ஓய்வு பெற்ற ஐ. ஏ. எஸ் அதிகாரி திரு. எம். சிவஞானம் அவர்களும், மருத்துவக் கல்லூரி இயக்குநராக இருந்து அண்மையில் ஓய்வுபெற்ற டாக்டர் திருமதி ரமணி சிவராமன் ஆகியோரையும் கொண்ட திட்டக் குழுவையும், அதில் முழு நேர உறுப்பினராக (Evaluation and applied Research) வல்லுநர் திரு. ஜி. சிதம்பரம் அவர்களையும் கொண்ட மாநிலத் திட்டக்குழு அமைக்கப்படுகிறது என்பதை மிகுந்த மகிழ்ச்சியோடு இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டக் குழு 1990-95இல் மாநிலத்திற்கான எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை வகுக்கும் பணியினை உடனடியாகத் தொடங்கும்.

பல உறுப்பினர்கள் இங்கே பேசும்போது, பேசிய 50-க்கும் மேற்பட்ட உறுப்பினர்களில் சுமார் 25 உறுப்பினர்கள், பாசனங்களைப் பற்றி, ஆறு, குளம், ஏரிகளைப்பற்றி, தங்களுடைய தொகுதிகளைப் பற்றியெல்லாம் இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதிலே முதன்மை வகிப்பவர் நம்முடைய பி.எச்.பாண்டியன அவர்கள். ஏனென்றால், தன்னுடைய தொகுதிக்கு ஏராளமானவற்றைச் செய்துவிட்டு, இன்னும் போதாது, போதாது என்று தெருவுக்கு, வீதிக்கு, வீட்டுக்கெல்லாம் வசதிகள் வேண்டும். தன்னுடைய வீட்டுக்கு அல்ல, ஊரிலே உள்ள வீடுகளுக்கு வசதிகள் வேண்டும் என்று சொன்னார். அதைப்போலப் பலரும் எடுத்துக்கூறி இருக்கிறார்கள்.

தமிழ்நாடு முழுவதும் இன்றுள்ள சூழ்நிலையில், ஆறுகள், குளங்கள், ஏரிகள் இவைகளைப் பெரும்பாலும் பயன்படுத்திவிட்டோம். இருந்தபோதிலும் இன்னும் பயன்படுத்த வேண்டிய நீர் நிலைகள் இருக்கின்றன. அநத நீர்நிலைகளின் கொள்ளளவை அதிகமாக்கி, மழைக்காலத்திலே நீரைத் தேக்குகின்ற அந்த ஆற்றல்மிகு பணிகளையெல்லாம் நாம் செய்ய வேண்டியிருக்கிறது. எனவே, ஆறுகள், வாய்க்கால்கள், ஏரிகள், கிணறுகள், குளங்கள் போன்ற இந்தப் பாசன வசதிகளைப் பற்றித் தோதல் அறிக்கையிலேயும் நாங்கள் குறிப்பிட்டிருக்கிறோம். பாசன மேம்பாடு நிலையக் குழு அமைக்கப்படும் என்று சொன்னோம். எனவே, அதன்படி மத்திய பொருளாதார நிர்வாகச் சீர்திருத்தக் குழுவின் முன்னாள் உறுப்பினராகவும், தமிழக அரசின் முன்னாள்



பொதுப் பணித் துறைச் செயலாளராகவும் இருந்த ஆர். திருமலை அவர்களுடைய தலைமையில், முன்னாள் தலைமைப் பொறியாளர்களான எஸ்.பி.நமச்சிவாயம், எஸ்.பஞ்சநதம், ஏ.மோகனகிருஷ்ணன், எஸ்.நாகேஸ்வர ராவ், தமிழ் நாடு விவசாயப் பல்கலைக் கழக முன்னாள் துணை வேந்தர் டாக்டர் வி.ராஜகோபாலன் ஆகியோர் உறுப்பினர்களாக இருந்து செயலாற்றக்கூடிய ஒரு குழு அமைக்கப்படுகிறது. இந்தக் குழுவின் கன்வீனராக தலைமைப் பொறியாளர் (பாசனம்) பணிபுரிவார் என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் ; தட்டும் ஒலி).

இந்து அறநிலையத் துறையின் நிர்வாகத்தினைச் செம்மைப்படுத்தி, சீரமைக்கவேண்டுமென்ற நோக்கத்தோடு இந்து அறநிலையத்துறை ஆக்கப்பணி ஆலோசனைக் குழு அமையும் என்று தேர்தல் அறிக்கையிலே குறிப்பிட்டோம். அதற்கேற்ப தவத்திரு குன்றக்குடி அடிகளார், முன்னாள் நீதிபதி கிருஷ்ணசாமி ரெட்டியார், திருவரங்கம் திருமலை ஐயங்கார், காஞ்சி மடத்தைச் சேர்ந்த செந்தில்நாதன், திருமதி ராதா தியாகராஜன் ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்ட அந்தக் குழு 3 மாத காலத்தில் அறிக்கை தர வேண்டுமென்றவேண்டுகோளோடு அமைக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

தேசியமயக் கொள்கையைப் பற்றி இங்கே எதிர்க் கட்சியினுடைய உறுப்பினர் சாத்தூர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் பேசினார். அவர் இப்போது இல்லாவிட்டாலும் பதில் சொல்லவேண்டியது என்னுடைய கடமையல்லவா? எனவே நான் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் நிதிநிலை அறிக்கைக்குப் பதில் அளிக்கும்போது அதைப் பற்றி விளக்குகிறேன் என்று அன்றைக்கே குறிப்பிட்டேன். தேசியமயக் கொள்கை, பஸ்களைப் பொறுத்து உங்களுடைய கொள்கை என்ன என்று கேட்டபோது, ''அப்படி இப்படி'' என்றார். அதற்கு எனக்கு அர்த்தம் புரியவில்லை. எங்களுடைய தேசியமயக் கொள்கை, கழக ஆட்சியினுடைய தேசியமயக் கொள்கை தெளிவானது என்பது உங்களுக்குத் தெரியும். கழக ஆட்சிக் காலத்திலே மகாலிங்கம் அவர்களுக்குச் சொந்தமான ஏ.பி.டி., டி.வி.எஸ்., எஸ்.ஆர்.வி.எஸ்., ராமன் அண்டு ராமன் ஆகிய இந்தப் பெரிய பஸ் நிறுவனங்களெல்லாம் தேசியமயமாக்கப்பட்டு, போக்குவரத்துக் கழகங்களாக மாற்றப்பட்டன. ஏ.பி.டி., சேரன் போக்குவரத்துக் கழகமாகவும், டி.வி.எஸ். பாண்டியன் போக்குவரத்துக் கழகமாகவும், எஸ்.ஆர்.வி.எஸ்., ராமன் அண்டு ராமன் ஆகிய இரு நிறுவனங்களும் சோழன் போக்குவரத்துக் கழகமாகவும் மாற்றப்பட்டதை நீங்கள் அனைவரும் நன்றாக அறிவீர்கள்.

1973-இல் மாவட்ட வாரியாகப் பேருந்துகளைத் தேசியமயமாக்குகின்ற சட்டத்தை, திராவிட முன்னேற்றக் கழக

அரசு கொண்டு வந்தது. அதன்படி முதலாவதாக நீலகிரி மாவட்டம் எடுத்துக் கொள்ளப்பட்டது. உடனடியாகப் பேருந்து அதிபர்கள் அதை எதிர்த்து நீதிமன்றம் சென்றார்கள். உயர்நீதி மன்றத்தில் நம்முடைய அரசுக்குச் சாதகமாகத் தீர்ப்பு அளிக்கப்பட்டது. அதை எதிர்த்து உச்ச நீதி மன்றத்தில் பேருந்து அதிபர்கள் அப்பீல் செய்துகொண்டார்கள். அதற்கிடையிலே ஆட்சி கலைக்கப்பட்டுவிட்டது உங்களுக்குத் தெரியும். ஆக, நாங்கள் கொண்டுவந்த தேசியமயமாக்கும் கொள்கையை எதிர்த்து 'ஹைகோர்ட்டிலே' வழக்குப் போட்டபோது உயர்நீதிமன்றம் அரசுக்குச் சாதகமாகத் தீர்ப்பளித்தது. அதை எதிர்த்துப் பேருந்து முதலாளிகள் உச்சநீதிமன்றத்திற்குச் சென்றார்கள். அந்த நேரத்திலே கழக ஆட்சி கலைக்கப்பட்டுவிட்டது. ஆக, கலைக்கப் பட்டதற்குப் பிறகு அ.தி.முக. ஆட்சி பொறுப்பேற்றது. அந்தக் காலகட்டத்தில் நடைபெற்ற ஒரு வேடிக்கையை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

ஏகப்பன் என்கிற ஒருவர் ஒரு வழித்தடத்திற்காக ஒரு அப்பீல் செய்கிறார். மதுரை - குமுளி என்ற ஒரு பெரிய வழித்தடத்திற்கு தனக்கு உரிமை வேண்டுமென்று கேட்டு அப்பீல் செய்கிறார். அரசு அதை எதிர்க்கிறது. அன்றைக்கு இருந்த அ.தி.மு.க. அரசு ஏகப்பன் என்ற தனி பஸ் முதலாளியினுடைய அந்தக் கோரிக்கையை எதிர்க்கிறது. அவர் 'என்.டி.ஏ.டி.க்குச் செல்கிறார். அங்கே அவருக்குச் சாதகமாகத் தீர்ப்புக் கிடைக்கிறது. உடனே அரசு அதை எதிர்த்து ஹைகோர்ட்டுக்குச் செல்கிறது. ஹைகோர்ட்டிலே ஏகப்பனுக்குச் சாதகமாகத் தீர்ப்புக் கிடைக்கிறது. உடனே அரசு அதை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டுக்குச் செல்கிறது. சுப்ரீம் கோர்ட்டில் ஏகப்பனுக்கு விரோதமான தீர்ப்பு; அரசுக்குச் சாதகமான தீர்ப்பு. அரசு என்ன செய்திருக்க வேண்டும்? 'ஏகப்பா! நீ போப்பா' என்று சொல்லியிருக்க வேண்டும். அப்படிச் சொல்லவில்லை. ஏகப்பனுக்குப் பாதகமாகத் தீர்ப்புக் கிடைத்ததற்குப் பிறகும், சுப்ரீம் கோர்ட்டில் அரசுக்குச் சாதகமாகத் தீர்ப்பு கிடைத்த பிறகும், ஏகப்பனுக்குச் சாதகமாக அந்த வழித்தடத்தைத் தருகிறது. அதற்கு எதற்காக அந்த வழக்கு? ஏன் சுப்ரீம் கோர்ட் வரையிலே போக வேண்டும்? இது ஒரு தேசியமயக் கொள்கை. இது அவர்களைப் பொறுத்தவரையிலே ஒரு தேசியமயக் கொள்கை, அவர்கள் அன்றைக்கு நிறைவேற்றினார்கள்.

இதற்கிடையிலேதான் 3 பேருந்துகளை 5 பேருந்துகள் என்று மாற்றினார்கள். அதிலும் கூட சில வழித்தடங்கள் விடப்பட்டன. அதிலே பல கட்சிக்காரர்கள் கூட 5 பஸ்கள் இருந்துவிட்டுப் போகட்டும் என்ற அந்தக் கருத்தைக் கூட

இந்த மன்றத்திலே சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு அதோடு நில்லாமல் தேசியமயக் கொள்கையினுடைய கழுத்தையே நெரித்து, அதனுடைய உயிரையே அறவே போக்குகின்ற அளவுக்கு 1987 ஆம் ஆண்டு இதே மன்றத்தில் ஒரு திருத்த மசோதா கொண்டுவரப்பட்டது. அப்போது திரு. ரமணி அவர்கள் இங்கே இருந்திருப்பார்கள் என்று கருதுகிறேன். எல்லோரும் இருந்தார்கள். அதை எதிர்த்திருக்கிறார்கள். எல்லாக் கட்சிக்காரர்களும் எதிர்த்திருக்கிறார்கள். இடதுசாரி மனப்பான்மை கொண்ட அத்தனை பேரும் எதிர்த்திருக்கிறார்கள். வெளிநடப்பு எல்லாம் அன்றைக்குச் செய்திருக்கிறார்கள்.

1987 ஆம் ஆண்டு தேசியமயமாக்கப்பட்ட அந்தக் கொள்கைக்கு விரோதமாக ஒரு மசோதா, ஒரு 'அமென்ட்மெண்ட்', திருத்த மசோதா இந்த அவையிலே கொண்டுவரப்பட்டது. என்ன அந்த மசோதாவின் கருத்து என்றால் தேசியமயமாக ஆக்கப்பட்ட அல்லது ஆக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள 'பஸ் ரூட்' வழித் தடங்கள் உட்பட எல்லா வழித்தடங்களையும் தனியார் வழித்தட உரிமை கோரினால் தடையின்றிக் கொடுக்க வேண்டும். இது திருத்தம். என்ன ஆனது தேசியமயமாக்கப்பட்ட கொள்கை? கேட்டால் தடையின்றிக் கொடுக்க வேண்டுமென்று ஒரு திருத்தம் கொண்டுவரப்பட்டது. இந்தத் திருத்தத்தைக் கொண்டுவருவதற்கு முன்பே சுப்ரீம் கோர்ட் ஏற்கெனவே தி.மு.க. ஆட்சி நிறைவேற்றியிருந்த தேசியமயக் கொள்கையை ஆதரித்து, தீர்ப்பு வழங்கி விட்டது. இது ஒரு சமதர்மத் திட்டம். தி.மு.க. ஆட்சி கொண்டுவந்த இந்தத் திட்டத்தை 'சுப்ரீம் கோர்ட் ஏற்றுக் கொள்கிறது' என்று ஆணையிட்டு அது தீர்ப்பு அளித்து விட்டது.

அதற்கிடையே இவர்கள் இந்த மசோதாவை, திருத்த மசோதாவைக் கொண்டுவருவதற்கு முன்பே, இந்த மசோதாவிலே காணப்படுகின்ற கருத்துக்களைச் செயலாக்குகின்ற வகையில் எல்லாக் காரியங்களையும் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். பிறகு மசோதா நிறைவேற்றப்பட்டது. வழித்தடங்கள் அனைவருக்கும் கொடுக்கப்பட்டன. தேசியமயமாக்கப்பட்ட கொள்கை சாகாமல் செத்துவிட்டது. இருந்தாலும் திருத்த மசோதாவை அழுத்தந்திருத்தமாக நிறைவேற்றினார்கள். நிறைவேற்றப்பட்ட பிறகு குடியரசுத் தலைவர் ஒப்புதல் வேண்டும். ராஷ்டிரபதியினுடைய ஒப்புதல் அதற்குத் தேவை. அந்த ஒப்புதல் இதுவரை வராமலே இருந்தது.

அந்த ஒப்புதல் சில நாட்களுக்கு முன்பு வந்துவிட்டது. அந்த ஒப்புதலை இப்போது வெளியிட்டால் என்ன ஆகும்? பஸ் நேஷனலைசேஷன் என்ற கொள்கை அறவே கொல்லப்பட்டுவிடும். அதற்காக இந்தியக் குடியரசுத் தலைவர் ஒப்பு




தல் அளித்துக் கையெழுத்து இட்டுவிட்டார். அந்த ஒப்புதல் சமீபத்தில் இந்த அரசுக்குக் கிடைத்திருக்கிறது. அந்த ஒப்பு தலோடு வந்த மசோதாவைச் சட்டமாக நாங்கள் வெளியிட்டு விட்டால் தேசியமயக் கொள்கை அறவே ஒழிந்துவிடும் என் பதற்காக அமைச்சரவைக் கூட்டத்தை உடனே நாங்கள் கூட்டி, அதில் என்ன முடிவு எடுத்திருக்கிறோம் என்றால், இந்த மசோதாவை, சட்டமாக வெளியிட வந்துள்ள ஒப்பு தலை வெளியிடுவதில்லை என்று அமைச்சரவைக் கூட்டத் தில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சி யோடு இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசை யைத் தட்டும் ஒலி).

எப்படியோ நிலைமை கெடுக்கப்பட்டுவிட்டது; தேசிய மயக் கொள்கையின் நிலைமை கெடுக்கப்பட்டுவிட்டது; இதை வெளியிடாததன் மூலம் இப்போது இந்த வழித்தடங் கள் பற்றிய உரிமை தருவதும் தராததும் நம்முடைய கையி லேயே இருக்கிறது. இதனால் நமக்கு வசதிப்படும்போதெல் லாம் - இன்றைக்கு ஒரு நான்காயிரம் பேர் தனியாக பஸ் களை வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்றால் நமக்குப் பண வசதி ஏற்பட்டு இன்னின்ன வழித்தடங்களிலே பஸ்களை விட லாம் என்று எண்ணுகிற நேரத்தில் எல்லாம் அதை எடுத்துக் கொள்கிற, அந்த வழித்தடங்களில் பஸ்களை விடுகின்ற உரிமை இதை வெளியிடாததன் மூலம் இந்த அரசு -- அந்த உரிமையைப் - பெறுகிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட் டும் ஒலி).

மற்றும் தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள வறட்சி குறித்து இதுவரை வந்துள்ள விவரங்களின் மீது 23 கோடி ரூபாய் வறட்சி நிவாரணப் பணிகளுக்காக இந்த அரசு ஆணை யிட்டு இருக்கிறது. உடனடியாக 25 கோடி ரூபாய் வேண்டு மென்று மத்திய அரசைக் கேட்டிருக்கிறோம். மாவட்ட ஆட் சித் தலைவர்கள் கூட்டத்தை ஏன் இதுவரையில் கூட்ட வில்லை என்று எல்லாம் கேட்டார்கள். நாங்கள் வந்து 60 நாட்கள்தான் ஆகின்றன. அதற்குள்ளே 15,16 தேதிகளில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டியிருக் கிறோம். முதலிலேயே கூட்ட இருந்தோம். அப்போது பட் ஜெட் தயாரிக்கிற பணி மும்முரமாக இருந்த காரணத்தா லும், பல இலாக்கா அமைச்சர்களோடு வைத்து கலந்துபேசி வரவு-செலவுத் திட்டம் தயாரிப்பதற்கான விவரங்களைச் சேகரிக்க வேண்டியிருந்த காரணத்தாலும், அந்த நேரத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் கலந்து பேச இயலாது என்பதாலும், சட்டசபையில் நடைபெற்ற பட்ஜெட் விவாதத் தில் இங்கிருப்பவர்கள் சொல்கிற குறைபாடுகளை எல்லாம் தொகுத்து, குறித்து வைத்துக்கொண்டு, அதன்பின் கலெக்டர் களிடத்திலே இதுபற்றி எல்லாம் விவாதித்து நல்ல முடிவு எடுக்கலாம் என்பதாலும் தான் வருகிற 15,16 தேதிகளில் மாவட்டக் கலெக்டர்களுடைய கூட்டத்தைக் கூட்டியிருக் கிறோம். அதிலே வறட்சி நிவாரணப் பணிகளுக்கு எவ்வளவு தேவைப்படும் என்பதைத் தெரிந்து மத்திய அரசுக்கு நம்மு டைய தேவையைத் தெரிவிப்போம்.

வறட்சி நிவாரணப் பணிகள் போர்க்கால வேகத்தில் நடைபெறும் என்பதை உறுதியாக உங்களுக்கு இங்கே தெரி வித்துக் கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசை யைத் தட்டும் ஒலி).

வேறு சில அறிவிப்புகளையும், வரிச்சலுகைகளையும் அறி விப்பதற்கு முன், மகிழ்ச்சியோடு நான் ஒரு செய்தியைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய திரு.பொன்.விஜயராக வன் அவர்கள் ஒரு கிளப் பற்றிய செய்தியை இங்கே கேட் டார்கள். நம்முடைய திரு.வி.ஆர்.கிருஷ்ணய்யர் அவர்கள் வேட்டி கட்டிக்கொண்டு போவதைப் பற்றிச் சொன்னார் கள். நான் இந்த அவையிலேயே பதில் சொன்னேன்.

எனக்கு இன்று 'மெட்ராஸ் கிரிக்கெட் கிளப்'லேயி ருந்து ஒரு கடிதம் வந்திருக்கிறது.

Madras Cricket Club

The Hon'ble Chief Minister of Tamilnadu,
Fort St.George, Madras.

Sir,

Sub: Dress regulations of our Club.

We are indeed sorry for the unfortunate incident involving Mr.Justice V.R.Krishna Iyer in the matter of dress regulations of our Club. In deference to your wishes and these of the hon. Members of the Legislative Assembly, we have henceforth decided to amend the existing dress regulations of the Club to enable us to extend service to persons who wear Indian dress including dhoties.

Thanking You.

(மேசையைத் தட்டும் ஒலி)

**திரு பொன் விஜயராகவன்:**

தலைவர் அவர்களே, அவர்களுடைய அறிவிப்புக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இதே போன்று ஜிம்கானா போன்ற கிளப்களிலும் இருப்பதாகச் செய்திகள் வந்துள்ளன. அங்கேயும்இதுபோன்ற நிலைமை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு நான் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு முதல்வர் கலைஞர்:**

தலைவர் அவர்களே, இந்த மடல் அதற்கெல்லாம் ஒரு முன் மாதிரியாக அமையும் என்று நான் கருதுகிறேன். மற்றவர்கள் அதைப் பின்பற்ற வேண்டுமென்று இந்த அவையின் மூலமாக நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து,சில அறிவிப்புக்களைத் தர விரும்புகிறேன். திருமயம் சட்டமன்ற உறுப்பினர் ஆலவயல் திரு சுப்பையன் அவர்கள் நிதிநிலை அறிக்கையிலே பேசுகின்றபோது, இயற்கைச் சீற்றங்களால் குடிசை வாழ் மக்களுக்குப் பாதிப்பு ஏற்படும்போது அரசு தரப்பிலே இருந்து அளிக்கப்படும் உதவி, 400 ரூபாய் மாத வருமானம் வரம்புக்கு உட்பட்டு வழங்கப்படுகிறது என்றும், இந்த வரம்பை அறவே நீக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்கள். தற்போதுள்ள முறைப்படி தீ விபத்துப்போன்ற இயற்கைச்சீற்றங்களால் ஏற்படுகிற

விபத்துக்களால் அல்லலுறுகின்ற மக்களுக்கு உதவி அளிப்பது வருமான வரம்பு 400 ரூபாய் என்று கணக்கிடப்பட்டு வழங்கப்படுகின்றது.

இம்முறை பின்பற்றப்படுவதால், தாமதங்களும், தடங்கல்களும் ஏற்படுகின்றன. குடிசை வாழ் மக்கள் பாதிக்கப்பட்ட நேரத்தில் இனிமேல் உடனடியாக நிவாரணம் அளிப்பதற்கு வருமான வரம்பு இன்றி நிவாரணம் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.


நிதிநிலை அறிக்கையில், பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் கல்விச் சலுகையைப் பெறுவதற்குப் பெற்றோர்கள் ஆண்டு வருமான வரம்பு ரூ 5000 என்பதை ரூ. 12000 ஆக உயர்த்தி நிர்ணயம் செய்ய ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதைப் போலவே ஆதிதிராவிடர்கள், மற்றும் பழங்குடியினர்கள் நலனுக்காகக் குடியரசுத் தலைவர் ஆட்சியிலே கல்விச் சலுகை வழங்க, பெற்றோர்கள் ஆண்டு வருமான வரம்பு ரூ. 12 ஆயிரமாக நிர்ணயிக்கப்பட்டது. அதை மேலும் உயர்த்தி ரூ 15 ஆயிரம் என்று இந்த ஆண்டிலே நடைமுறைப்படுத்த ஆணைகள் பிறப்பிக்கப்படும்.

வாகன வரி, வரவு செலவுத் திட்டத்தில், பயணிகளை ஏற்றிச் செல்லும் வேன்களில் அனுமதிக்கப்படும் இருக்கை அளவினை விரிவுபடுத்தவேண்டுமென்ற கோரிக்கை ஏற்கப்பட்டு, இருக்கை அளவு 12 ஆக உயர்த்தப்பட்டது. அதே நேரத்தில் இருக்கை ஒன்றுக்கு வரி விகிதம் ஒரு கால் ஆண்டுக்கு ரூ 150 என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட ஊர்திகள் பல இன்னல்களுக்கு உட்படாமல், செயல்பட வேண்டுமென்ற நல்லெண்ணத்தோடு செய்யப்பட்டது. அதே நேரத்தில் இந்த வேன்கள் வாடகைக்கு விடப்படுவதால், வரி விகிதமும் ஒழுங்குபடுத்தப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. வரவு செலவு அறிக்கை வெளியிட்டபின் வேன் உரிமையாளர்கள் வரி விகிதம் சற்று அதிகமாக இருக்கிறது என்று சொல்லி, இதனால் தொழில் பாதிப்புக்குள்ளாகி இருக்கிறதென்றும், குறிப்பாக நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய அருமை நண்பர் திரு. பீட்டர் அல்போன்ஸ் எம.எல்.ஏ. அவர்கள் தலைமையிலே சிலரும், திராவிட முன்னேற்றக் கழகச் சட்டமன்ற உறுப்பினர்கள் சிலரும் வந்து என்னைச் சந்தித்தார்கள். எனவே அந்த மொத்த வரி விகிதம் 250 என்று இருந்ததை மாற்றி, இருக்கை ஒன்றுக்கு மொத்தமாக ரூ.250 என்று இருந்ததை மாற்றி, இருக்கை ஒன்றுக்கு ரூ. 150 என்று மாற்றுவதால் மொத்தமாக வரி ரூ. 1800க்கு உயரும் எனறு சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

வேன்கள் ஓட்டக்கூடிய உரிமையாளர்கள் பலர் ஒரே ஒரு வேனை வைத்துத் தொழில் செய்து கொண்டிருப்பதாலும், மற்றும் உள்ளூர் போக்குவரத்து பாதிக்காத அளவுக்கு இருக்க

வேண்டும் என்ற எண்ணத்தோடும், 12 இருக்கை என்ற உச்ச வரம்பின் அடிப்படையிலே ரூ.1000 என்று ஒட்டு மொத்த மாக முடிவு செய்யப்படுகிறது. அதற்கு அந்த வேன் உரிமை யாளர்களும் தங்களுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துவிட்டுச் சென்றிருக்கிறார்கள்.

ஓட்டல் வரியைப் பற்றி இங்கு பேசப் பட்டது. ஆண்டு ஒன்றுக்கு ரூ. 10 இலட்சத்திற்கு மேல் வியாபாரம் நடக்கின்ற ஓட்டல்களுக்கும் உணவு விடுதிகளுக்கும் 3 சதவிகிதம் வரி விதிக்கப்படும் என்று அறிவித்திருப்பதைச் சில உறுப்பினர் கள் சுட்டிக்காட்டி, அதை மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். அறவே அந்த வரியை ரத்து செய்யமுடியாது. ஏனென்று சொன்னால், ஆடம்பர ஓட்டல் களில் ரூம் வாடகையிலிருந்து சாப்பாடு வரையில் அதிகக் கட் டணம் விதித்து வசூலிப்பது எல்லோருக்கும்தெரிந்த உண்மை. எனவே ரூ. 10 லட்சத்திற்கு மேல் வியாபாரம் நடக்கும் ஓட்டல்கள், உணவு விடுதிகள் வரி விகிதம் 5 சதவிகிதம் என் பதை மாற்றியமைத்து ஒட்டுமொத்தமாக வரியாக, காம் பௌண்டிங் முறையில் விதிக்கலாம் என்பதைப்பற்றி அரசு பரிசீலித்து வருகிறது. இதிலே விருப்பம் இல்லை என்றால் 'ஆப்ஷன்' முறையில், 5 சதவிகிதம் கட்டுபவர்கள் கட்டலாம், அல்லது 'காம்பௌண்டிங்' முறையிலே இணங்குகின்றவர்கள் அதற்கு இணங்கலாம். எனவே அது குறித்து விரைவிலே பரிசீலித்து அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.



நிதிநிலை அறிக்கையில் விவசாயிகள் மின்வாரியத்திற்கு 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் தேதி செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையைத் தாமதமாகக் கட்டியதற்கு விதிக்கப் பட்ட அபராத வட்டி அறவே ரத்து செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இந்தச் சலுகை 31.3.1989க்குள் கட்டி யிருந்தால் பொருந்தும். தற்போது உறுப்பினர்கள் பலருடைய வேண்டுகோளை ஏற்று இந்தக் காலத்தை30.9.1989 வரைக் கும், நிலுவையில் உள்ள தொகையை முழுமையாகக் கட் டினாலே அபராத வட்டி அறவே ரத்து செய்யப்படும் என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சத்துணவுக் கூடங்கள் மூலம் கோழி முட்டை தருவதாக வும், 15 நாட்களுக்கு ஒரு முறை கோழி முட்டை தருவதாக வும், பிறகு கோழிகளை வளர்ப்பதன் மூலமாக வாரத்திற்கு ஒரு முறை கோழி முட்டை தருவதாகவும் சொல்லியிருந் தேன். இப்போது அந்தத் திட்டம் ''எம்.ஜி.ஆர். திட்டம், எம்.ஜி.ஆர்.திட்டம்'' என்று சொல்லுகிறார்கள். இன்னும் சொல்லப் போனால் காமராசர் கொண்டு வந்த திட்டம்தான், எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்திலே விரிவாக்கப்பட்ட திட்டம். இன்னும் சொல்லப்போனால், ஜஸ்டிஸ் ஆட்சிக் காலத்திலே சர். பிட்டி. தியாகராய செட்டியார் அவர்கள் கொண்டு வந்த திட்டம் மதிய உணவுத் திட்டம். பிறகு காமராசர் அவர் களாலே விரிவாக்கப்பட்டு பிறகு எம்.ஜி.ஆர். காலத்திலே விரிவாக்கப்பட்டிருக்கிறது. எனவே, அந்தக் கோழி முட்டை களைத் தருகின்ற வகையில் அதற்கு ஒரு அடையாள பூர்வ மான சலுகையாகக் கோழித் தீவனம் மீது விதிக்கப்பட்டிருக் கின்ற 2 சதவிகிதம் விற்பனை வரி ரத்து செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதனால் அரசுக்கு ஒரு கோடி ரூபாய்க்கு மேல் இழப்பு ஏற்படும் என்பதையும் நான தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே பேசிய நம்முடைய அன்பில் பொய்யாமொழி என்று கருதுகிறேன், அவரும் மற்றும் வேறு சில உறுப்பினர்களும், —மாணவர்களுக்குப் பேனாவுக்கு, பென்சிலுக்கு எல்லாம் வரி விலக்கு அளித்திருக்கிறீர்கள்—ஆனால் 'மை' யுக்கு அளிக்கக்கூடாதா என்று கேட்டார்கள். அதை ஏற்று, பேனாவுக்கு உபயோகப்படுத்துகிற இங்குக்கு மாத்திரம் வரி விலக்கு அளிக்கப்படுகிறது. அதற்காக பிரிண்டிங் இங்க், டூப்ளிகேட் இங்க், லித்தோ இங்க் இவற்றுக்கெல்லாம் நிச்சய மாக வரி விலக்கு கிடையாது, எழுதப் பயன்படுத்துகிற இங் குக்கு மாத்திரம் வரி விலக்கு அளிக்கப்படுகிறது.

மற்றொரு முக்கியமான பிரச்சினை, இங்கே கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்களால் எழுப்பப்பட்டிருக்கிறது. அது விவசாயத்

தொழிலாளர்களுடைய குறைந்த பட்ச ஊதியம் பற்றியது. இதற்காக ஏற்கனவே ஒரு குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழு அரசுக்கு விவசாயத் தொழிலாளர்களின், குறைந்தபட்ச ஊதியம் பற்றி தன்னுடைய பரிந்துரையை வழங்கியிருக்கிறது. அந்தப் பரிந்துரையை அரசு அப்படியே ஏற்றுக்கொள்கிறது. பரிந்துரைகளின்படி ஏற்கெனவே இருந்த நிலைமை என்னவென்றால் ஏர் மாடுகளோடு உழவுக்குப் போகும் விவசாயத் தொழிலாளிக்கு முன்பு 18 ரூபாயாக இருந்தது தற்போது 32 ரூபாயாக ஆக்கப்படுகிறது. நில உடைமையாளர்களுடைய ஏர் மாடு கொண்டு உழுவதற்கு ஏற்கெனவே ரூபாய் 11 என்று இருந்தது. அது இப்பொழுது 16 ரூபாயாக ஆக்கப்படுகிறது.

அறுவடை செய்தல், களத்திற்கு எடுத்துச் செல்லுதல், கதிர் அடித்தல், தூற்றுதல், அளவிடுதல், கட்டுதல் போன்ற தொழில் செய்யும் தொழிலாளிக்கு ரூபாய் 11 ஆக இருந்தது. அது இப்போது 16 ரூபாயாக அல்லது கண்டு முதலில் 8 இல் ஒரு பங்கு இதில் எது அதிகமோ அது என்று நிர்ணயிக்கப்படுகிறது. நெல்லைத் தவிர மற்ற தானியங்கள் பயிர் செய்யும் தொழிலாளிக்கு ஏற்கெனவே 11 ரூபாயாக இருந்தது இப்பொழுது 16 ரூபாயாக உயர்த்தப்படுகிறது. விதைத்தல், நாற்றுப்பறித்தல், நாற்று நடுதல் போன்ற விவசாயத் தொழிலாளிக்கு 8 ரூபாய், இருந்தது. இப்பொழுது 16 ரூபாய். விதைத்தலுக்கு 15 ரூபாய், நாற்றுநட, களை எடுக்க 14 ரூபாய் என்று ஆக்கப்படுகிறது. மற்றத்தொழில்களான அண்டை போடுதல், கொத்துதல், தேனி வளர்த்தல், கோழி வளர்த்தல், பண்ணைத் தொழில், மரம் ஏறுதல் இதற்கெல்லாம் 10 ரூபாய் என்று இருந்ததை 16 ரூபாயாக உயர்த்தியிருக்கிறோம். பண்ணை ஆளுக்கு மாதம் 210 ரூபாயாக இருந்தது இனிமேல் 375 ரூபாயாக உயர்த்தப்படுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, 1985-86 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில், அப்போதைய ஆட்சியில் என்னுடைய அருமை நண்பர் கவிஞர் கண்ணதாசன் மறைந்தபோது, காரைக்குடியில் ஒரு மணி மண்டபம் அவருக்காகக் கட்டப்படும் என்று அறிவித்தார்கள்- ஆனால் அறிவிப்பு அறிவிப்பாகவே இருக்கிறது. அண்மையில் நான் தேர்தல் நேரத்திலே, நம்முடைய இராமநாராயணன் அவர்களுக்காகக் காரைக்குடிக்குச் சென்றபோது என்னிடத்தில் தரப்பட்ட கோரிக்கையை ஏற்று, விரைவிலே கண்ணதாசன் நினைவு மண்டபம் காரைக்குடியில் எழுப்பப்படும். இந்த ஆண்டிலேயே அது ஆரம்பிக்கப்பட்டு, தொடர்ந்து பணி நடைபெற்று விரைவில் அந்த மண்டபம்— என்னுடைய நண்பருக்கு-என்னிடம் ஆயிரம் கருத்துமாறுபாடுகள் இருந்தாலும்கூட முதன் முதலாக என்னுடன் பழகிய அந்த நண்பருக்காக, நல்ல கவிஞருக்காக, தமிழ்க் கவிஞருக்காக — அந்த மணி மண்டபம் கட்டப்படும் என்பதையும் இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இட ஒதுக்கீடு பற்றி இங்கே பேசப்பட்டது. இன்னும் இரண்டு முக்கியமான விஷயங்கள் இருக்கின்றன. இந்த ஒதுக்கீடு பற்றிப்பேசும் போது வன்னியர்கள் எல்லாம் எங்களுக்கு விரோதிகள் என்று சொன்னார்கள். நேற்றைக்குத் தான் நான் எண்ணிப் பார்த்தேன். திராவிட முன்னேற்றக் கழகத்திலே எத்தனை வன்னியர்கள் வெற்றி பெற்று வந்திருக்கிறார்கள் என்று எண்ணிப் பார்த்தேன். 24 வன்னியர்கள், தி.மு.க.வில் மட்டும் வெற்றி பெற்று வந்திருக்கிறார்கள். அதுபோல தோழமைக் கட்சியிலிருந்து 4 வன்னியர்கள் வெற்றி பெற்று வந்திருக்கிறார்கள் என்று இங்கே சொல்லுகிறார்கள். ஆக, அவ்வளவு வன்னியர்கள் இங்கே வெற்றி பெற்று வந்திருக்கிறார்கள். ஆனால் வன்னியருக்காகப் பாடுபட்டதாகச் சொல்லும்காங்கிரஸ் கட்சியிலிருந்து எத்தனைபேர் இங்கே வெற்றி பெற்று வந்திருக்கிறார்கள் என்று நாம் பார்க்கிறோம். ஆக அவர்கள்தான் கணக்கைச் சொல்ல வேண்டும். ஆக, வன்னியருடைய எதிரி கருணாநிதிதான் என்று சொல்லியும்கூட - கழகம்தான் என்று சொல்லியும்கூட 24 வன்னியர்கள் இங்கே தி.மு.க. சார்பில் வெற்றி பெற்று சட்டமன்ற உறுப்பினர்களாக வந்திருக்கிறார்கள். எனவே வன்னியர் சமுதாயத்தினரையும் எங்களையும் மோத விட்டு வேடிக்கை பார்க்க யார் எண்ணினாலும் அது நடவாது. வன்னியர் சமுதாயம் மாத்திரமல்ல, தமிழ்நாட்டிலே உள்ள எந்த ஒரு சமுதாயத்துடனும் தி.மு.க.வை மோத விட முடியாது. காரணம் இது ஒரு சமுதாய இயக்கமாக இருக்கிறது. இதனுடைய அடிவேரே, ஆணி வேரே தந்தை பெரியார் அவர்களால் ஊன்றப்பட்டது. அவர்களால் அடி வேரும், ஆணி வேரும் வளர்க்கப்பட்டது. பிறகு அது செழித்து வளர்வதற்குரிய முயற்சி பேரறிஞர் அண்ணா அவர்களால் மேற்கொள்ளப்பட்டது. ஆகவே, இந்த ஆணி வேரும், இந்தப் பெரும் தருவும் யாராலும் வீழ்த்தப்படாத சமுதாயத் தருவாக இருக்கிறது.

முதலிலே எங்களுக்குச் சமுதாயம், அடுத்து, பொருளாதாரம், அடுத்ததுதான் அரசியல், எனவேதான் ஆட்சியைக் கலைக்கிறோம் என்று யார் யாரெல்லாமோ முற்படும் போதெல்லாம்கூட போனால் பரவாயில்லை, என்று நாங்கள் சொல்வதற்குக் காரணம், நாங்கள் எல்லாம் ஆரம்பத்தில், தொடக்கத்தில் அரசியலுக்காக எங்களையெல்லாம் ஒப்படைத்தவர்கள் அல்ல. எங்களுடைய வீட்டிலே எங்கள் தாயிடத்தில் வாய்க்கரிசி போட்டுக் கொண்டு வெளியே கிளம்பி சமுதாயப் பணியாற்றுவதற்காகக் கிளம்பியவர்களே தவிர, வேறு எதற்காகவும் அல்ல. அதுதான் பெரியார் அவர்களுடைய, பேரறிஞர் அண்ணா அவர்களுடைய கொள்கை.

அந்தக் கொள்கைகளுக்காகத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கிறது. எனவே, எந்தச் சமுதாயத்தையும் எங்கள்மீது விரோதமாகத் தூண்டிவிட யார் எண்ணினாலும்,

அது நடவாது. நாங்கள் கொண்டுவந்த இந்த இட ஒதுக்கீடு பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு பூவராகன் அவர்களுக்குக் கூடக் கருத்து வேறுபாடு இருக்கலாம். அது ஆசையின்பாற் பட்டது. அதை அவர்கள் சொல்லித்தான் தீர வேண்டும். எனக்குத் தெரியும், சொல்லித்தான் தீர வேண்டும். இருந்தாலும் கூட திரு சட்ட நாதன் அவர்கள் அந்தச் சமுதாயத்தில் ஒரு மேதை, அவர்கள் இந்தக் குழுவிற்குத் தலைவராக இருந்து தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அந்தக் குழுவிலே பல கருத்துக்களைச் சொன்னார்கள். அவர் இந்த ஒதுக்கீட்டைப் பற்றி என்ன சொல்கிறார் என்றால், ''இந்தப் புதிய திட்டம் மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும், சீர் மரபினருக்கும், அதிலும் குறிப்பாக வன்னிய சமூகத்தினருக்கும் நிச்சயமாகப் பலனளிக்கும்; முதலாவது பிற்பட்டோர் கமிஷனில் நானும் இதே நோக்கங்களுக்காகத்தான் பாடுபட்டேன், அந்தக் கமிஷனில் இருந்த இரண்டு உறுப்பினர்கள் மாற்றுக் குறிப்பு அளித்திருந்தார்கள். அதனால் தான் இந்தப்பரிந்துரைகளை அப்போது அரசு ஏற்காமல் விட்டுவிட்டது'' என்று திரு சட்டநாதன் அவர்கள் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள்.

திரு. அம்பாசங்கர் அவர்கள், அவர்களும் ஒரு குழுவின் தலைவராக இருந்து பணியாற்றியவர்கள். அவர் சொல்கிறார், ''சமுதாயத்தில் நீண்டகாலமாக ஒடுக்கப்பட்டு வந்த சமூக மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, அவர்களுக்குச் சமூக நீதி வழங்க வேண்டுமென்ற உயர்ந்த குறிக்கோளுடன், பிற்பட்ட வகுப்புகளுக்கு இருந்த 50 சதவிகித இட ஒதுக்கீட்டிலிருந்து 20 சதவிகித இட ஒதுக்கீட்டைப் பிரித்து, சமுதாயத்திலே மிகுந்த நலிந்த பிரிவினருக்கு முதலமைச்சர் அவர்கள்வழங்கியிருக்கிறார்கள்; முதலமைச்சரின் குறிக்கோள் மிகத் தெளிவானது என்பதை, இதற்காக ஒரு தனித் துறை



யையே உருவாக்கி, அதற்குத் தலைவராக அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவரையே நியமித்திருப்பதும், இந்தத் துறையைத் தனது பொறுப்பிலேயே வைத்திருப்பதும் தெளிவாக்குகிறது. பிற்பட்டோரில்மிகப்பெரும்பான்மையாகவுள்ள வன்னியர்கள் இந்தச் செய்கையால் பெரிதும் பயன் பெறுவார்கள்'' என்று அவர் சொல்கிறார்.

அதைப் போலவே பெரியவர் திரு. மாணிக்கவேலர், அவருடைய பாராட்டில், ''காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்குக் கல்விக்கு மாத்திரம் இட ஒதுக்கீடு கொடுத்தார்கள், வேலை வாய்ப்புக்கான இட ஒதுக்கீடு இல்லை; ஆனால் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில் பிற்படுத்தப்பட்டோருக்குக் கல்விக்கு மட்டுமல்லாமல், வேலை வாய்ப்புக்கு இட ஒதுக்கீடு கொடுத்தது மிகவும் பாராட்டத் தக்கது'' என்று கூறியிருக்கிறார். மேலும், ''வன்னியர் உள்பட மிகவும் பிற்பட்டோருக்கும், சீர் மரபினருக்கும் 20 சதவிகிதம் இந்த அரசின் மூலமாக பள்ளி, கல்லூரிகளில் படிப்பதற்கும், அரசாங்க வேலை வாய்ப்புகள் கிடைப்பதற்கும் இட ஒதுக்கீடு கொடுத்தது மிகவும் பாராட்டத்தக்கது'' என்று கூறியிருக்கிறார்.

இந்த இடஒதுக்கீடுகளைப் பயன்படுத்துகின்ற அளவுக்கு அவர்கள் முன்னேற வேண்டுமென்ற அளவுக்கு ஒரு தனி இலாகா அமைக்கப்பட்டுவிட்டது. அதனுடைய பணிகள் விரைவிலே தொடங்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதற்கிடையிலே நாம், கடந்த கவர்னர் உரையிலே 100 கோடி ரூபாய் வருமானத்திற்கான வழிவகைகளைக் கண்டோம். அதையெலலாம் விளக்க வேண்டிய அவசியம் கிடையாது. அது எப்படி வந்தது, ஏன் வந்தது என்று நான் சொல்லவில்லை. அவர்களே சொல்லிக் கொண்டார்கள். கடந்த ஆட்சியில் இன்னின்ன வரிகள் தள்ளுபடி செய்யப்பட்ட காரணத்தால், எக்சைஸ் வரி அறவே ரத்து செய்யப்பட்ட காரணத்தால் ஆண்டு ஒன்றுக்கு 20 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டு, 7 ஆண்டுகளில 140 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டது என்று சொன்னபோது, அவர்களாகச் சொல்லிக் கொண்டார்கள், 'எம்.ஜி.ஆர்.-ஐ ஊழல் என்று சொல்கிறாய்' என்றெல்லாம் சொலலிக் கொண்டார்கள். அது அவர்கள் சொல்லிக் கொண்டதே தவிர, நாங்கள் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் நிலவரங்களைச் சொல்லும்போது, அதனால் பாதிக்கப்படுகிறவர்கள், நம்மைத் தாக்குவது தவறு, நான் நிலவரங்களைத்தான் சொல்கிறேன்.

அடுத்து, என்.ஆர்.ஐ.திட்டங்கள் என்பது ஒன்று. என். ஆர்.ஐ.துட்டம் என்றால், அயல் நாட்டில் வாழும் இந்தியர்களை இந்தியாவின் தொழிற் திட்டங்களில் முதலீடு செய்ய

ஊக்குவிக்கும் திட்டம். இதை மத்திய அரசுகூட ஆதரித்திருக்கிறது. அயல் நாட்டில வாழும் இந்தியர்கள், அவர்களை இங்கே தொழிலில் முதலீடு செய்ய ஊக்குவிக்கும் திட்டம் அது. ஆனால் தொழில் வளம் பெருக்க வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்ட, அங்கீகரிக்கப்பட்ட அந்தத் திட்டம் ஒருசில தனி நபர்களுடைய சொந்த ஆதாயத்திற்காக, அன்னியச் செலாவணி மோசடி போன்றவைகளுக்காக, இங்கே இருந்து அங்கே போய், அங்கேயிருந்து இங்கேவந்து வெள்ளைப்பணமாக்குவதற்காகப்பயன்படுத்தப்படுகிறபோது, அந்த 'என்.ஆர்.ஐ.திட்டத்தைக் கவனிக்க வேண்டிய அவசியம் அரசுக்கு ஏற்பட்டது. அதனால்தான் இந்த அரசு மிகக் கண்காணிப்போடு நம்முடைய அதிகாரிகளைக் கொண்டு பார்த்து, நானும் இரவு பகல் விழித்து எல்லாக் கோப்புகளையும் பார்த்து, நிலைமை என்ன என்று ஆராய்ந்தபோதுதான் கிட்டத்தட்ட 40 கோடி ரூபாய் பெறுமானமுள்ள, 40 கோடி ரூபாய் சொத்து, 1 கோடியே 75 இலட்சம் ரூபாய்க்கு , பழனி பெரியசாமி என்பவருக்கு பல்லவா ஓட்டல் கார்ப்பரேஷன் கட்டுவதற்குத் தரப்பட்டிருக்கிறது... அதிலே எல்லோரும் - தொடர்புடைய அமைச்சர்கள் எல்லோரும் கையெழுத்துப் போட்டார்கள். கடைசியாக யார் கையெழுத்துப் போடவேண்டுமோ அவர் உட்பட அத்தனைபேரும் கையெழுத்துப் போட்டார்கள்.

''யார் யார் இந்தத் திட்டத்திற்கு வருகிறீர்கள் என்று டெண்டர் விடப்படவில்லை. அதற்கு பப்ளிசிடி கிடையாது''. இப்படிப்பட்ட ஜாயிண்ட் செக்டாருக்கு யாராவது அயல் நாடுகளிலே வாழ்கிற இந்தியர்கள் - என்.ஆர்.ஐ.பர்சன்ஸ்- வருகிறீர்களா என்று ஒய்டு பப்ளிசிடி எதுவும் கொடுக்கப்படாமலேயே, பழனி பெரியசாமி என்பவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. சுமார் 40 கோடி ரூபாய் மதிப்புள்ள நிலம் அது. அதை ஒண்ணே முக்கால் கோடி ரூபாய் என்று குறைத்து மதிப்பீடு செய்து, அந்தத் தொகையைக்கூட அவரிடமிருந்து பெற்றுக்கொள்ளாமலேயே, அதையும் அரசாங்கத்துனுடைய ஷேர் ஆக-அந்தக் கூட்டுத்துறை முயற்சிக்குப் போட்டு 40 கோடி ரூபாய் சொத்தைக் கொடுத்தது. இந்த 40 கோடி ரூபாய் தனி நபருக்குப் போவதை, இந்த அரசு பொறுப்பேற்றதும் தடுத்து நிறுத்தி, 40 கோடி ரூபாய் சொத்தை மீட்டுக் கொடுத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (பலத்த கரவொலி).

அதுமாத்திரமல்ல. நான் அப்போதே சொன்னேன். பைல்கள் அணிவகுக்கும் என்று. இன்னும் தொடர்ந்து அணிவகுக்கும்; இன்றைக்குச் சில அணி வகுக்கின்றன. மாமல்லபுரத்திலே ஒரு முறைகேடு. மாமல்லபுரத்திலே அரசு நிறுவனமான தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஒரு ஓட்டலை லாபத்திலே நடத்தி வந்தது. ஆண்டொன்றுக்கு ரூ. ஒரு

இலட்சம் அல்லது ஒன்னரை இலட்சம் லாபம் பெற்று வந்த அரசாங்கத்திற்கு சொந்தமான-சுற்றுலா வளர்ச்சிக்கழகத்துக்குச் சொந்தமான அந்த ஓட்டலை ஒரு ஜாயிண்ட் செக்டார் - கூட்டு நிறுவனம் - என்ற பெயரிலே மாற்றினார்கள். அதற்கு ஒரு ஆளைப் பிடித்தார்கள். அதற்கு பப்ளிசிடி கொடுத்தல்ல. அவர் பெயர் என்ன தெரியுமா? ''மோகன்ராவ் தண்டமுடி''. மோகன்ராவ் தண்டமுடி என்பது அவர் பெயர். அவர் அந்நிய நாட்டில் - வெளிநாட்டிலே வாழ்கிற இந்தியராம். கோடம்பாக்கத்தில்தான் இருக்கிறார் அவர்! (பலதத சிரிப்பு). அந்த மோகன்ராவ் தண்டமுடிக்கு - என்.ஆர்.ஐ.திட்டத்தின் அடிப்படையில் அந்த ஓட்டலை ஒப்படைக்க கடந்த அரசு முடிவு செய்தது. அந்த ஓட்டலுடைய மதிப்பு என்ன தெரியுமா? அதிகாரிகளுடைய குழு மதிப்பீட்டின்படி 1 கோடியே 60 லட்சம் ரூபாய். மாமல்லபுரத்திலே இருக்கிற நம் டூரிஸ்ட் கார்ப்பரேஷனுக்குச் சொந்தமான ஓட்டலின் மதிப்பு அதிகாரிகள் போட்ட மதிப்புப்படி 1 கோடியே 60 லட்சம் ரூபாய். அதற்குப் பொதுப் பணித்துறை பரிந்துரை செய்தது ரூ.93 லட்சம். ஆனால் அரசாங்கம் இந்த 93 லட்சத்தையும் ஏற்றுக் கொள்ளவில்லை. 1 கோடியே 60 லட்சத்தையும் ஏற்றுக் கொள்ளவில்லை. அந்தக் கூட்டுத்துறை நிறுவனத்திற்கு இவர்கள் போட்ட சொத்து மதிப்பு ரூ.56.44 லட்சம். கடந்த ஆட்சியில் இந்த அளவுக்கு மதிப்பிடப்பட்டு அவருக்குக் கொடுக்கப்பட்டுவிட்டது. அதாவது இந்த ரூ.56 லட்சத்திலும் ரூ.52 லட்சம் அரசாங்கத்தின் முதலீட்டுக்காகச் சரி செய்து கொண்டு மீதியுள்ள 4 லட்சம் ரூபாயை அரசாங்கம் அந்தக் கூட்டுத்துறை நிறுவனத்திற்குக் கடனாக வழங்கி ஆணை பிறப்பித்தது. இந்தச் சுற்றுலாத் திட்டம் இலாபகரமாக நடக்க வாய்ப்பு உள்ளதா என்று ஆய்வு செய்து முடிவெடுப்பதற்கு முன்பாகவே என்.ஆர்.ஐ.காரர்கள் தங்கள் பங்கு முதலீட்டைச் செலுத்துவதற்கு முன்பாகவே தமிழ்நாடு சுற்றுலாத் துறைக்குச் சொந்தமான சொத்துக்களை, குத்தகை அடிப்படையிலே அந்த மோகன்ராவ் தண்டமுடிக்கு மாற்றிவிட்டார்கள். எதுவும் நடக்கவில்லை? அந்த நிறுவனம் சரியாக நடத்துமா? என்று ஆராய்ச்சி பண்ணி முடிவு எடுக்கவில்லை. அவர்கள் தன்னுடைய பங்குத் தொகையை முழுவதுமாகச் செலுத்தவுமில்லை. அதற்குள் மோகன்ராவ் தண்டமுடிக்கு எல்லாப் பொறுப்புகளையும் மாற்றிவிட்டார்கள். இது குறித்து அக்கவுண்டண்ட் ஜெனரல் பலமான ஆட்சேபணைகள் பலவற்றை எழுப்பினார். அதைப்பற்றிக் கவலைப்படுவதேயில்லை. யார் ஆட்சேபணை எழுப்பினாலும் கவலைப்படாத அரசு, எனவே இதைப் பற்றியும் கவலைப்படவில்லை. அப்போது பல புகார்கள் வந்தன.

அப்போது கவர்னர் ஆட்சி நடந்தது. கவர்னர் என்ன பண்ணினார் தெரியுமா? அதிகாரிகள் அடங்கிய ஒரு சிறப்புக் குழுவை நியமித்தார். உடனே மூப்பனார் அவர்கள் சொல்லக்கூடும். நாங்கள்தானே முதல் கல்லை எடுத்தோம். அதற்

குப் பிறகுதானே கருணாநிதி ஊழலைக் கண்டுபிடித்தார் என்று சொல்லலாம். கல் எடுத்தவர்கள் ஒன்றுமே சொல்லவில்லை-செய்யவில்லை. கல்லை எடுத்ததோடு சரி. அந்த அதிகாரிகள் குழு என்ன செய்தது என்றால் சுற்றுலாத் துறையின் சொத்து மதிப்பு 1 கோடியே 60 லட்சம் என்று மதிப்பிட்டது. கவர்னர் ஆட்சியிலே 1 கோடியே 60 இலட்சம் என்று மதிப்பிட்டது. கவர்னர் ஆட்சியிலே 1 கோடியே 60 லட்சம் ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கு, என்.ஆர்.ஐ.மோகன் ராவ் தண்டமுடி முதலீடு செய்ய வேண்டிய தொகையைக் குறைத்துக் கொடுக்க இப்படி ஒரு ஏற்பாடு என்பதும் தெரிய வந்தது. அதைக் குறைத்து மதிப்பிடுவதற்குக் காரணம் அவர் முதலீடு செய்ய வேண்டிய தொகையைக் குறைத்துக் கொடுக்க இந்த ஏற்பாடு. எனவே நம் அரசு அந்த அறிக்கையைப் பார்த்துச் சில உண்மைகளைப் புரிந்து கொண்டது.

விலை உயர்ந்த பொதுச் சொத்துக்களை மிகக் குறைவாக மதிப்பீடு செய்து அவசரம் அவசரமாக, தனியாரின் பொறுப்புக்கு மாற்றி முடிவு எடுக்கப்பட்டுவிட்டது. ஒரு கோடியே 60 லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள சொத்துக்களை மாதம் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் குத்தகை எனற அடிப்படையிலே தனியாருக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. உத்தேசிக்கப்பட்ட திட்டம், அரசின் பொதுச் சொத்தைய மூலதனமாகக் கொண்டு தனியாருக்குச் சாதகமாக அமைக்கப்பட்டதிலிருந்து, பொது நலனைவிட தனி நலனே மேலோங்கி நிற்கிறது. இவ்வாறு சரியான நெறிமுறைகளைப்



பின்பற்றாமல் எடுக்கப்பட்ட ஒரு முடிவின் பயனாக, மாமல்லபுரம் சுற்றுலா மையத்தில் பணியாற்றி வந்த 100 பணியாளர்களை, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் குழுமமே திரும்பப் பெறவேண்டிய நிலைமையும், அதனால் சுற்றுலாத் துறைக்குக் கூடுதல்செலவும் ஏற்பட்டுவிட்டது. எனவே; உண்மையான சுற்றுலா வளர்ச்சி நோக்கத்தோடு இந்தத் திட்டமும் உருவாக்கப்படவில்லை என்பது கண்டறியப்பட்டு, அரசுக்குச் சொந்தமான விலை உயர்ந்த சொத்துக்களை மீண்டும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் குழுமமே திரும்பப் பெற்று நடத்த வேண்டுமென்று அரசு இப்போது ஆணையிட்டிருக்கிறது. இது ஒன்று.

அடுத்ததாக, சென்னை திருவான்மியூர் மகாபலிபுரக் கடற்கரைச் சாலையில் உள்ள திருவிடந்தைக் கிராமத்துல் இதே மோகன்ராவ் தண்டமுடி என்பவரோடு ஒரு கூட்டு: அவர் ஒரு என்.ஆர்.ஐ; அவருக்கு 1984ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் ஆணை பிறப்பிக்கப்படுகிறது. அப்போது எம்.ஜி.ஆர் அமெரிக்காவில் நோய்வாய்ப்பட்டு இருக்கிறார்; 1985 ஜூல் திரும்ப வந்து அவர் கையெழுத்துப் போடுகிறார். 1985 மல அதே டேட்டிலே-நான் அந்தப்பிரச்சினைக்குப் போக விரும்பவில்லை-கையெழுத்தை மட்டும் சொல்கிறேன். இந்தத் திட்டத்திற்கு நிலம் எங்கே பிடித்தார்கள் தெரியுமா? திருவிடந்தைக் கிராமத்திலுள்ள அருள்மிகு நித்திய கல்யாணப் பெருமாள் சுவாமி ஆலயத்திறகுச் சொந்தமான 299 ஏக்கர் நிலத்தை மாற்ற முடிவு செய்யப்பட்டது. கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைப்பது மாதிரி அருள்மிகு நித்திய கல்யாணப் பெருமாள் ஆலயத்துக்குச் சொந்தமான கிட்டத்தட்ட 300 ஏக்கர் நிலத்தை மாற்ற முடிவு செய்யப்பட்டது. இதற்குச் செங்கை அண்ணா மாவட்ட ஆட்சித்தலைவர் ஒருவர் இருந்தார். உங்களுக்குத் தெரியும், அவர் யார் என்று. அவர் இந்த நிலத்துக்கு மதிப்பீடு என்ன செய்தார் தெரியுமா? வேண்டுமென்றல்ல, ஏக்கர் ஒன்றுக்கு 10 ஆயிரம் ரூபாய் என்று குறிப்பிட்டார். அவர் சொன்னதைச் செய்தார். அந்த ஆலயத்த்க்கார், ஏக்கர் ஒன்றுக்கு 75 ஆயிரம் ரூபாய் வேண்டுமென்று கேட்டார். அந்த நிலங்களில அரசாங்க மதிப்பீடு ஏக்கர் ஒன்றுக்கு ஒரு லட்ச ரூபாய். எனவே மொத்த மதிப்பீடு 3 கோடி ரூபாய் ஆகிறது. ஆனால் இந்த 3 கோடி ரூபாய் நிலத்தை, அதுவும் கோயிலுக்குச் சொந்தமான நிலத்தை எடுத்து மோகன் ராவ் தண்டமுடிக்குக் கொடுக்க ஆணை வெளியிடப்பட்டது. அதில் அடிமுதல் நுனிவரையிலுள்ள அனைவரும் கையெழுத்திட்டார்கள். இந்த அரசு இப்போது அந்த ஆணையை ரத்துச் செய்து, ஆலயத்துக்குச் சொந்தமான அந்த நிலத்தை அருள்மிகு நித்திய கல்யாணப் பெருமாள் சுவாமி ஆலயப் பொறுப்பிலிருந்து போய்விடாமல் 31.3.1989இல் உத்தரவு போடப்பட்டுள்ளது என்பதை உங்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்று, திருவான்மியூர்-மகாபலிபுரம் சாலையி லுள்ள மற்றொரு இடம். அதற்குப் பெயர் முத்துக்காடு. அங்கே, கழக ஆட்சியில் ஊனமுற்றவர்களுக்கு ஒரு தொழிற் சாலை அமைக்கப்பட்டது, அனைவருக்கும் தெரியும். அங்கேயும் இதே தண்டமுடி வந்துவிடுகிறார். இதே 1984 ஆம் வருடம் டிசம்பர் 3 ஆம் தேதி, ஆணை எண்.585, அர சாங்க நிலம் சுமார் 50 ஏக்கர். இந்த 50 ஏக்கர் நிலத்திற்கு செங்கை அண்ணா மாவட்ட வருவாய் அதிகாரி பரிந்துரை செய்தது மொத்த மதிப்பு 6 லட்சத்து 13 ஆயிரம் ரூபாய். பரிந்துரை செய்தது 50 ஏக்கருக்கு. அப்போதே அதனுடைய மதிப்பு ரூ.70 லட்ச ரூபாய்க்கு மேல் இருக்கும். இது சம்பந்த மாகவும் அரசாணை இப்போது பிறப்பிக்கப்பட்டு, ரத்துச் செய்திருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இதையெல்லாம் விட இன்னொரு அநியாயம் - வள்ளுவர் கோட்டத்திற்கு அருகே இதே மோகன்ராவ் தண்டமுடி யோடு இணைந்து தமிழ்நாடு சுற்றுலாத்துறை, கூட்டுத் துறைத் திட்டம் வகுத்து, 83 கிரவுண்ட் நிலம் தந்து, நட்சத் திர ஓட்டலும் வணிக வளாகமும் அமைக்க 1984 ஆம் ஆண்டு டிசம்பரில் ஆணை பிறப்பிக்கப்பட்டது. அந்த ஆணை எண். 625. அதிலும் கையெழுத்துப் போடவேண்டியவர்கள் எல் லாம் போட்டுவிட்டார்கள். மேற்படி நிலங்கள் கிரவுண்ட் 1.5 லட்சம் ரூபாய் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் மதிப் பிட்டார். ஆனால் நில நிர்வாக ஆணையர், கிரவுண்ட் ஒன் றுக்கு 2.33 லட்சம் ரூபாய் என்று மதிப்பிட்டார். ஆனால் அரசு மதிப்பீடு கிரவுண்ட் ஒன்றுக்கு 3.5 இலட்சம் ரூபாய். இதன்படி நிலத்தின் மொத்த மதிப்பு சுமார் ரூ.3 கோடி ஆகும். இந்தத் திட்டம் குறித்து இந்த அரசு இப்பொழுது ஆராய்ந்தது. இது தொடர்பான திட்ட அறிக்கையே இது வரையில் அரசுக்குத் தரப்படவில்லை, வள்ளுவர் கோட்டத் திற்கு அருகே உள்ள இடம் பூங்கா போன்ற பொது நோக்கத் திற்காக ஒதுக்கப்பட்டது. அதை வணிகப் பகுதியாக மாற்ற எம்.எம்.டி.ஏ. அனுமதித்து. ஆணை எதுவும் பிறப்பிக்கவும் இல்லை.

நான் குறிப்பிட்ட திருவிடந்தை, முத்துக்காடு, வள்ளு வர்கோட்டம் ஆகிய இந்த மூன்று திட்டங்களுக்கு அனுமதி அளித்து அரசு ஆணையை 84 ஆம் ஆண்டு டிசம்பரிலே பிறப்பிக்கப்பட்டு, 85ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதலமைச் சருடைய ஒப்புதலும் பெறப்பட்டிருக்கிறது. பிசினஸ் ரூல் - அலுவலக நடைமுறை 2-வது அட்டவணைச் சட்டம் 8 மற் றும் 16-இன்படி இதுபோன்ற கொள்கை முடிவுகள் அமைச் சரவையில் விவாதித்து முடிவெடுக்கப்பட்டு இருக்க வேண் டும். ஆனால் இந்த இனங்களில் அவ்வாறு செய்யப்படவே இல்லை. இதையெல்லாம் கருத்திற் கொண்டு இந்த முடிவு களையெல்லாம் மறுபரிசீலனை செய்து இந்தத் திட்டங்களின்

தொடர்பான மூன்று அரசு ஆணைகளையும் ரத்து செய்து இதன்மூலம் ஏழரைக் கோடி ரூபாயை மீட்டு இருக்கிறது என்பதை உங்களுக்கு நான் மகிழ்ச்சியோடு இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

நேரம் அதிகமாகிவிட்டது. இன்னும் நிதித்துறை தொடர்பான பல்வேறு மானியங்கள் இருக்கின்றன. ஆகவே, இதையெல்லாம் பல அமைச்சர்கள் கொள்கை விளக்கங் களைத் தர இருக்கின்றார்கள். நீங்கள் பேசஇருக்கின்றீர்கள். இருந்தாலும் ஒன்றே ஒன்றை மாத்திரம் சொல்ல விரும்பு கிறேன்.

இங்கே நம்முடைய காங்கிரஸ் கட்சி நண்பர்கள் ஏன் இங்கிருந்து வெளியேறினார்கள் என்று தெரியவில்லை. வெளி யேற வேண்டுமென்றே வந்தார்கள் அ.தி.மு.க.வினர். காங் கிரஸ் கட்சி நண்பர்கள் வெளியேறியதற்கு நான் மிகவும் வருத்தப்படுகிறேன்.

காலையிலே நண்பர் குமரி அனந்தன் அவர்கள் கடலூ ரில் நடைபெற்ற ஒரு சம்பவம் பற்றிச் சொன்னார்கள். நான் அதுபற்றி உடனடியாக விசாரித்தேன். அது தனிப்பட்ட தக ராறு என்றும் சொல்லப்பட்டது; கட்சித் தகராறு என்றும் சொல்லப்பட்டது. சரியான விளக்கம் வரவில்லை.

நம்முடைய ரமணி அவர்கள் மற்றும் நம்முடைய நூர் முகமது இவர்களெல்லாம் கூட கன்னியாகுமரிச் சம்பவம் பற்றி ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொடுத்தார்கள். அங்கும் கொலைதான் நடைபெற்றது. பத்து நாள் காத் திருந்து, எனக்கு விவரம் கிடைத்த பிறகுதான் அதை இங்கே எடுத்துக் கொண்டு ஒத்தி வைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொண்டு பேசப்பட்டது.

இன்று காலை ஒரு செய்தியைச் சொல்லிவிட்டு உடனே ஒத்திவைத்து - அவையை ஒத்தி வைத்துப் பேச வேண்டுமென்று சொல்லும்போது அது இயலாத காரியம். நாளைக்கு நான் அதைப்பற்றி விவரமறிந்து பேசுகிறேன்., நாளைக்கு இதை அட்ஜர்ன்மெண்ட் மோஷனாகக் கொடுங் கள் என்று சொன்னேன். அதையும் கேட்காமல் அவர்கள் வெளியேறி விட்டார்கள். அதற்காக நான் மிகுந்த வருத்தப் படுகிறேன்.

வெளியேறுவதற்கென்றே வருகின்றவர்கள் சில பேர். திடீர் என்று வெளியேறிவிடுவார்கள் சில பேர். இந்த முறை யிலே வெளியேறிவிட்ட காங்கிரஸ் நண்பர்களுககாக நான்

உள்ளபடியே வருத்தப்படுகிறேன். காங்கிரஸ்காரர்கள் ஒரு புதிய உறவை இன்றைக்கு வளர்த்துக்கொண்டு அதன்மூலம் திராவிட முன்னேற்றக் கழகத்தை வீழ்த்தி விடலாம் என்று கருதிக் கொண்டிருக்கிறார்கள்.

நேற்றைக்கு நான் ஒரு செய்தியைப் படித்தேன். ஒரு பெண்-துணி துவைத்த ஒரு பெண், துவைத்த துணிகளை யெல்லாம் பிழிவதற்காகத் துணிகளையெல்லாம் கையிலே எடுத்து முறுக்கியபொழுது அவருக்குத் தெரியாமல் அந்தத் துணிகளுக்குள்ளே ஒரு பாம்பு இருந்து,கையைத் தீண்டி அந்தப் பெண் இறந்துவிட்டாள் என்று ஒரு செய்தி வந்தது. காங் கிரஸ்காரர்களே, துணியைப் பிழியும்போது உள்ளே பாமபு இருப்பதைப் பார்க்காமல் பிழியாதீர்கள் என்று மாத்திரம் அவர்களுக்குத் தெரிவித்துக்கொண்டு - இந்த நிதிநிலை மீது தரப்பட்டுள்ள எல்லாக கருத்துக்களுக்கும் நன்றி கூறி - இந்த அளவில் அமைகின்றேன்.

**திரு கு. ரமணி:** (பேரவைத் தலைவருடைய அனுமதியோடு)


பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது பசி கொஞ் சம் குறைந்திருக்கிறது. தலைவரவர்களே! சென்ற பிப்ரவரி மாதம் 18 ஆம் தேதி இந்த மன்றத்தில் நமது முதலமைச் சரவர்கள் மாநகராட்சித் தேர்தலைப் பற்றிச் சொன்ன



பொழுது 18 வயது ஆனவர்களுக்கு ஓட்டு வேண்டும். உரிமை வேண்டும். அதைக் கொடுக்கக்கூடிய முறையில் இந்தத் தேர்தலைக் கொஞ்சம் தள்ளி வைத்துக்கூட அந்தக் காரியத்தைச் செய்யலாம் என்று நாங்களும், எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களும், மற்ற பல எதிர்க்கட்சி உறுப்பினர்களும் மற்ற நண்பர்களும் இங்கே பேசினார்கள். அப்பொழுது அவர்கள் ஒரு விஷயததை இங்கே குறிப்பிட்டார்கள். அன்று ஓட்டர் பட்டியல் தயாராகிக் கொண்டிருக்கிறது. இப்பொழுது 21 வயதுள்ளவர்கள், உடனடியாக மாநகராட்சித் தேர்தல் நடதத வேண்டுமென்பதற்காக, நீண்ட காலம் ஒத்தி வைக்கப்பட்டது - இனி இருக்கக்கூடாது என்பதற்காக நாம் இதைக் கொண்டுவருகிறோம். தேர்தலுக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு முடிவடைவதற்குள் அந்த 18 வயதுக்கான ஓட்டர் பட்டியல்-ஏனென்றால், நாடு முழுவதற்கும் மத்திய சர்க்கார் உத்தரவிட்டு தயாராகிக் கொணடிருக்கிறது. அது தயாராகி வருமேயானால் இந்த நிதி நிலை அறிக்கை - இப்பொழுது நாம் விவாதித்து இப்பொழுது அவர் நமக்குப் பதில் கொடுத்திருக்கும்படியான இந்த அறிக்கை விவாதத்திற்கு வரக்கூடிய இந்தக் கூட்டத்தில் அந்தச் சட்டம் வருமேயானால், அந்த ஓட்டர் பட்டியல் தயாராகி முடிக்கப்படுகிற ஒரு சூழ்நிலை ஏற்படுமேயானால், ஒரு சட்டத் திருத்தத்தையாவது கொண்டுவந்து, அந்த 18 வயது அடிப்படையிலேயே தேர்தல் நடத்தலாம் என்று கூறப்பட்டது. இப்போது முஸ்லீம்கள் மத்தியில் அவர்களுடைய நோன்புக் காலம் எல்லாம் இருப்பதையொட்டி இதை ஒத்தி வைக்க வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. ஆகவே, மறுபடியும் இந்தத் தேர்தலை ஜுன் மாதத்தில் நடத்துகிற அளவிற்கு ஒத்திவைத்து - அதற்குள்ளாக நிச்சயமாக ஓட்டர் பட்டியல் முடிந்து விடுமெனறு எதிர்பார்க்கிறோம். ஏனென்றால் அந்த வேலை துரிதமாகக் கீழே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 18 வயது ஓட்டர் பட்டியல் அடிப்படையில் தேர்தல் நடத்துவதற்கு, கொஞ்சம் ஜுன் மாதம் வரையில் ஒத்தி வைத்து நடத்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு எம். அப்துல் லத்தீப்:**

தலைவர் அவர்களே, மாண்புமிகு ரமணி அவர்கள் எழுப்பிய இந்தப் பிரச்சினையை நானும் எழுப்பி அவர்களுக்கு ஆதரவாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். நான் ஏற்கெனவே கேட்டுக் கொண்டதைப் போல இப்போது அரசின் நிலையென்ன என்று அறிவிப்பதுதான் முறையாக இருக்கும். ஏனென்றால் தேர்தலைக் குறித்து ஆயத்தங்களைச் செய்யக் கூடியவர்கள் செய்ய முடியும். எனவே அதனை அரசு அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.




இன்னும் ஒரு வேண்டுகோள். தமிழ்ப் புத்தாண்டு, தீபாவளி போன்ற நாட்களில் வழங்கப்படுகிற சலுகைகளை ரம்ஜானிற்கும் வழங்கவேண்டும் என்று எங்கள் சார்பாக வேண்டுகோள் வைக்கப்பட்டது. எனவே, தீபாவளிக்கும், தமிழ்ப் புத்தாண்டிற்கும் வழங்கப்படுகிற சலுகைகள் ரம்ஜானிற்கும், கிறிஸ்துமஸுக்கும் சேர்த்து வழங்கினால் அது முறையாக இருக்கும்.

**மாண்புமிகு முதல்வர் கலைஞர்:**

தலைவர் அவர்களே, ரம்ஜான் என்பது பட்டினி கிடக்க வேண்டிய நாள். எனக்குத் தெரிந்ததுகூட இஸ்லாமிய சகோதரர் அவர்களுக்குத் தெரியவில்லையே (சிரிப்பு).

**திரு எம். அப்துல் லத்தீப்:**

தலைவர் அவர்களே, அந்த மாதம் நோன்பு வைத்து ரம்ஜான் திருநாள் வருகிறது. எனவே, அந்த ரம்ஜான் திருநாள் என்பது அதிகமாகச் சாப்பிடக்கூடிய நாள். ஆகவே அந்த வாய்ப்பைக் கிறிஸ்துமஸுக்கும், ரம்ஜானிற்கும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

**மாண்புமிகு முதல்வர் கலைஞர்:**

தலைவர் அவர்களே, அதிகமாகச் சாப்பிடுகிற காரணத்தால்தான் ஏற்படுத்த முடியுமா என்று யோசிக்கிறோம்.

தலைவர் அவர்களே, நம்முடைய மார்க்சிஸ்ட் கட்சியின் தலைவர் திரு ரமணி அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். இந்த 18 வயது வாக்காளர்கள் வாக்களிக்க வேண்டுமென்ற கருத்திலே இங்கே கருத்துப்பரிமாற்றம் நடைபெற்ற-வாக்கெடுப்பு நடைபெற்ற போதுகூட அவர்கள் இதில் கலந்து கொள்ளாமல் வெளிநடப்புச் செய்து அவர்களுடைய எதிர்ப்பைக் காட்டியிருக்கிறார்கள். எனவே இந்த 18 வயது உள்ளவர்கள் வாக்களிக்க வேண்டும் என்பதில் அவர்கள் உறுதியாக இருக்கிறார்கள். நான் அப்போதே சொல்லியிருக்கிறேன். விரைவில் இன்றைக்கு 18 வயது வாக்காளர்களுடைய பட்டியல் பூர்த்தி அடைந்துவிடுமானால் இன்றைக்குக் கொண்டு வருகிற சட்டத்தை ஒரு திருத்தம் செய்து உடனடியாக இரண்டு மாதத்திற்குள் தேர்தல் நடத்த முடியுமென்றால், நடத்துவதாக நான் சொல்லியிருக்கிறேன். இந்த 18 வயது வாக்காளர்களுடைய பட்டியல் 23.5.1989-க்குள், அதாவது மே மாதத்திற்குள் முடிந்துவிடுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. எனவே, மே மாதத்திற்குள் முடிந்து விடுமென்கிற கருத்து இருக்கிறது. அதே நேரத்தில், மே மாதம் 12 ஆம் தேதியன்று தேர்தலை நடத்துவது என்பது இயலாது. ரம்ஜான் பண்டிகை இருக்கிற காரணத்தால் வாக்குச் சேகரிக்க, பிரச்சாரம் செய்ய இயலாது என்று இந்தியன் யூனியன முஸ்லீம் லீக் சார்பிலும், வெளியே உள்ள மற்ற முஸ்லீம் இயக்கங்களின் சார்பிலும் கோரிக்கைகள் விடப்பட்டிருக்கின்றன. எனவே, இவைகளையெல்லாம் கருத்திற்கொண்டு விரைவில் இந்த 18 வயது வாக்காளர்களுடைய பட்டியல் முடிந்து விடுமென்ற தகவல் கிடைத்திருக்கிற காரணத்தால், மே மாதத்தில் முடிந்துவிடுமென்று தகவல் கிடைத்திருக்கிற காரணத்தால், 18 வயது வாக்காளர்களைக் கொண்டே தேர்தல் நடத்தப்படும். விரைவில் ஜூன், ஜூலையில் நடத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

பேரவையில் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மீண்டும் நாளை காலை...

**திரு சி. கோவிந்தராஜன் :**

தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கை மீது எங்களுடைய கட்சியின் சார்பாகப் பேசும்போது பல்வேறு துறைகள் குறித்துச் சொல்லப்பட்டிருந்தும், தொழிலாளர் நலன் சம்பந்தமாக ஒன்றும் இல்லையென்று குறைபட்டுக் கொண்டோம். அது சம்பந்தமாகக் கடந்த காலத்தில் வேறு விதமாக நடந்திருக்கிறது. எனவே, அது சம்பந்தமாக ஏதாவது விளக்கம் உண்டா என்று அறிய விரும்புகிறேன.




**மாண்புமிகு முதல்வர் கலைஞர்:**

தலைவர் அவர்களே, தொழிலாளர் நலன் மானியக் கோரிக்கை வரும்போது அதுபற்றி விளக்கமாகப் பேசலாம்.

**திரு கோ. பூவராகன் :**

தலைவர் அவர்களே, நீண்டநேரம் நம்முடைய முதல்வர் அவர்கள் அளித்த உரைக்கு நாங்கள் மிகவும் நன்றிக் கடன் பட்டிருக்கிறோம். அவர்கள் முதலாவதாக இந்த மானியக் கோரிக்கையை ஆரம்பித்தபோதும் சரி, அதற்குப் பதில் உரை அளிக்கின்றபோதும் சரி, தொல்லை கொடுக்க வேண்டும் என்று முன்கூட்டியே முடிவு செய்து தொல்லை கொடுத்திருக் கிறார்கள். இது கண்டிக்கத்தக்க ஒன்று. இந்தச் சமயத்தை நான் அதிகமாக எடுதததுக்கொள்ள விரும்பவில்லை. வன்னி யர்களுக்கு 20 சதவீதம், 30 சதவீதம் வேண்டும் என்று சொன்னதற்கு, அவர்கள் அப்படித்தான் பேசுவார்கள் என்று என்னைப் பற்றிச் சொன்னார்கள். நான் அப்போதே சொன் னேன். வாதத்திற்குச் சொல்லவில்லை. முதலமைச்சர் அவர் களுக்கு, நியாயத்தைத்தான் நான் எடுத்து வைக்கிறேன். இருபெரும் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஒருவருக்கு 20 சதவீதம் என்றும், இன்னொரு பகுதியைச் சேர்ந்தவர் களுக்கு 30 சதவீதம் என்றும் இருப்பது குறித்து - இந்த நேரத்திலே பசி வேளையாக இருக்கிறது, கடைசி வகுப்பு

நடத்துகின்ற ஆசிரியருடைய நிலையைப் போன்று இருக்கிறது தற்போது முதல்வர் அவர்களுக்கு. எனவே நான் நேரத்தை அதிகமாக எடுத்துக் கொள்ள விரும்பவில்லை. அவர்கள் ஆற அமர யோசித்து, ஒரு நல்ல முடிவை, இந்தச் சட்டமன்றம் இருக்கின்ற சமயத்திலே சொல்வார்கள் என்று நான் நம்புகிறேன். இப்போதே சொல்ல வேண்டும் என்று நான் வற்புறுத்தவில்லை என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

**மாண்புமிகு முதல்வர் கலைஞர் :**

தலைவர் அவர்களே, விரைவில் அட்மிசன், வேலை வாய்ப்புகள் போன்ற விஷயங்கள் எல்லாம் வருகின்றன ஜூலை மாதத்தில். அதற்குப் பிறகு அதைப் பற்றி யோசிக்கலாம்.

**திரு. பி. என். வல்லரசு:**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கன்னிப் பேச்சிலும் சரி, பட்ஜெட் விவாத உரையிலும் சரி, நமது இன்றைய தமிழக முதல்வர் அவர்கள், அன்றைய தினம் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்றபோது, சிவகங்கையை மையமாகக் கொண்டு இயங்குகிற பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் என்பதை, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம் என்று அறிவிப்பேன் என்று அவர்கள் சொன்னதை மீண்டும் மீண்டும் இருமுறை வலியுறுத்தி இந்தச் சபையில் பேசியிருக்கிறேன். நேரடியாகவும் சொல்லியிருக்கிறேன், இதை அவர்கள் அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு முதல்வர் கலைஞர் :**

தலைவர் அவர்களே, ஜாதிப் பெயர்கள் இருக்கக்கூடாது பட்டப் பெயர்களாக என்பது ஒரு கொள்கை. இருந்தாலும் சில நேரங்களில் ஜாதிப் பெயர்களே சிலருடைய பெயர்களாக இருக்கின்றன. நாத்திக இயக்கம் என்று தங்களைச் சொல்லிக் கொண்டிருக்கிற கம்யூனிஸ்டு இயக்கத்திலே கூட ஏ.எஸ்.கே. ஐயங்கார் என்று சொன்னால்தான் புரியும். அந்த ஜாதிப் பெயரைச் சொல்ல வேண்டியிருந்தது. அதேபோல் ஜி.டி. நாயுடு என்று சொன்னால்தான் புரியும். ஜி.டி.என். வருகிறார் என்று சொன்னால் புரியாது. ஜாதிப் பெயர்களை மாற்றுவதாகச் சொல்லிக்கொண்டு, சென்னையிலே கூட நுங்கம்பாக்கத்தில் குட்டி மேஸ்திரி தெரு,மேஸ்திரியை அழித்துவிட்டார்கள். இது இப்போது குட்டித் தெரு என்று இருக்கிறது. சைதாப்பேட்டையில் குயவர் தெருவில் குயவரை அழித்துவிட்டார்கள். வெறும் தெரு என்றிருக்கிறது. அதேபோல், பூங்காநகரில், நான் பேசிய ஒரு பொதுக்கூட்டத்திற்கு




எதிரில் அண்ணாபிள்ளை தெரு என்று ஒரு தெரு இருந்தது. அதிலே பிள்ளை என்ற எழுத்தை அழித்துவிட்டார்கள். நான் பேசும்போது சொன்னேன். அண்ணாவிற்குத் தமிழ் நாட்டிலே ஆயிரம் தெருக்கள் இருக்கின்றன. அண்ணா பிள் ளைக்கு ஒரே ஒரு தெருதான் இருந்தது, அதையும் கெடுத்து விட்டீர்களே என்று சொன்னேன். அதனால் சில பெயர் களை ஜாதியின் பெயரால் குறிப்பிடும்போதுதான் தெரிந்து கொள்ளமுடிகிறது. எனவே, என்னதான் சொன்னாலும், பசும்பொன் முத்துராமலிங்கம் என்று சொன்னால், அது தேவர் திருமகனைக் குறிப்பிடாது என்ற காரணத்தால் பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம் என்று அந்த மாவட்டத்திற்குப் பெயர் அழைக்கப்படும் என்பதைச் சொல் லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

பேரவையில் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடி வுற்று, நாளை (4.4.1989) காலை 9.00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.33 மணிக்கு ஒத்தி வைக் கப்பெற்றது.

— — —

# தமிழரசு

1-5-1989

இதழின்

இலவச இணைப்பு



தமிழரசு அச்சகம்,

## ஏழை எளியோர் இதயம் குளிர தமிழக அரசின் பொன்னான திட்டங்கள்

# தமிழரசு

## இலவச இணைப்பு

1-5-1989




விபத்தில் இறக்கும் லாரி, ஆட்டோ, டாக்ஸி, பேருந்து - கார் ஓட்டுநர்கள், மற்றும் கட்டடக் கட்டுமானத் தொழிலாளர்கள் விபத்தில் இறந்தால் குடும்பத்துக்கு ரூ. 10 ஆயிரம் நிதி உதவி.




மாத வருமானம் ரூ. 300க்குக் குறைவாக உள்ள குடும்ப அட்டை வைத்திருக்கின்ற ஏழைக் குடும்பத்தினருக்கு, தமிழ்ப் புத்தாண்டு, பொங்கல், தீபாவளி ஆகிய நாட்களில் 5 கிலோ அரிசி இலவசமாக வழங்கப்படுகிறது.

லடைய அறிவு வளர்ந்தது. அப்போது புன்னை குழந்தையாகப் பிறந்த கதையையும் வளர்ந்த வரலாற்றையும் தாய் விளக்கினாள். மகளுக்கு உண்மை விளங்கிவிட்டது.

மகளும் உற்ற வயது அடைந்தாள். வாழ்க்கை தொடங்கினாள்.

ஒரு நாள் தன் காதலனோடு அந்தப் புன்னை மரத்து நிழலில் இருந்து பேசிக்கொண்டிருந்தாள். பேச்சில் விளையாட்டும் நகைச்சுவையும் பெருகிவிட்டன. காதல் பேச்சு, காதல் விளையாட்டு இவற்றுக்கு இடையே திடீரென்று காதலியின் உள்ளத்தில் ஒரு புத்துணர்ச்சி தடையாக எழுந்தது. பேச்சும் மகிழ்ச்சியும் தடைப்பட்டன.

காரணம் வேறொன்றுமில்லை. நிழலில் இருந்த அவள் நினைவு நிழல் தந்த புன்னை மரத்தின் மேல் சென்றது. இளமை முதல் தன் உள்ளத்தில் ஊறிவந்த உறவுமுறை முன்வந்து நின்றது.

புன்னை மரம் தமக்கை: தான் தங்கை-இதை எப்படித்தான் மறக்க முடியும்? ஒருநாள் பாடமா? தமக்கையின் எதிரில் காதல் பேச்சும் விளையாட்டும் நிகழ்த்தத் தங்கைக்கு மனம் இல்லை. ''என்ன செய்தோம்'' என்று நாணம் அடைந்தாள்.

இதை அவளுடைய உயிர்த்தோழி அந்தக் காதலனுக்குத் தெரிவித்தாள்.

இந்தக் கருத்து ஒரு பழம் பாட்டில் உள்ளது. பாடிய புலவர் யார் என்று தெரியவில்லை. தமிழ்நாடு பெயரை மறந்துவிட்டது. ஆனால், நல்ல காலம், அந்தப்பாட்டை மறக்கவில்லை.

''விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி
மறந்தனம் துறந்த காழ்முளை அகைய
நெய்பெய் தீம்பால் பெய்துஇனிது வளர்த்தது
நும்மினும் சிறந்தது நுவ்வை யாகும்'' என்று
அன்னை கூறினள் புன்னையது நலனே;
அம்ம நாணுதும் நும்மொடு நகையே;

—நற்றிணை 172

(மணல்வீடு என்னும் நூலிலிருந்து)



குடும்ப நலம் வீட்டைக் காக்கும், தொழில்வளம் நாட்டைக் காக்கும்

TAMIN

# தமிழ்நாடு கனிம நிறுவனம்

## சென்னை-600 005.

( தமிழ் நாடு அரசு நிறுவனம் )

உலகப் புகழ் பெற்ற குன்னம், பைத்தூர் கரும்பாறைகளோடு செந்தாரப்பள்ளி சாம்பல் நிறப்பாறைகளையும் தமிழ்நாடு கனிம நிறுவனம் ஏற்றுமதி செய்கிறது.

தமிழ்நாடு கனிம நிறுவனத்துக்குச் சொந்தமான நூறு விழுக்காடு ஏற்றுமதி நோக்குடைய "டாமின் கிரானைட்ஸ்" 2-3 சென்டிமீட்டர் கனமுள்ள மெருகிட்ட கற்பலகைகள் மற்றும் சுவர்களில் பதிக்கவல்ல கற்பலகைகள் மற்றும் 10-15 சென்டிமீட்டர் கனமுள்ள மெருகிட்ட நினைவுக் கற்கள் ஆகியவற்றை ஏற்றுமதி செய்கிறது.

இந்நிறுவனம் உற்பத்தி செய்து விற்பனை செய்துவரும் இதர உயர்வகைக் கனிமங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1. | இந்திய தர மணல் | : | ஐ.எஸ். 650/1966 |
| 2. | கன்னாம்புக் கல் | : | கெமிகல் கிரேடு சராசரியாக +91% $CaCo_3$ |
| 3. | வெங்கக் கல் (குவார்ட்ஸ்) | : | +99.8% $Sio_2$ |
| 4. | பெல்ட்ஸ்பார் | : | +12% $K_2o$ |
| 5. | ரோஸ் குவார்ட்ஸ் | | ஆபரணங்கள் செய்யும் தரம் உடையது |
| 6. | சிலிகா மணல் | : | +99.7% $Sio_2$ |
| 7. | வெப்பத்தாங்கும் களிமண் | : | ரிப்ராக்டரி கிரேடு 32.1% $Al_2O_3$ |
| 8. | வெர்மிகுலைட் | : | சராசரியாக 14 மடங்கு கனபரிமாணம் விரிவடையும் தன்மையுடையது. |
| 9. | விரிவுபடுத்தப்பட்ட வெர்மிகுலைட் | : | பொன் நிறமானது |
| 10. | கன்னாம்புச் சிப்பி | : | சராசரியாக $CaCo_3$ +94% |

**தேவைக்கு அணுக வேண்டிய முகவரி:**


தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர்,
தமிழ்நாடு கனிம நிறுவனம்.
TWAD House 31 காமராஜர் சாலை
தபால் பெட்டி எண். 2961
சேப்பாக்கம், சென்னை-600 005.
தொலைபேசி எண். 848932
டெலக்ஸ் — 41 6081 TNMLIN

**தொழிற்சாலை**

டாமின் கிரானைட்ஸ்
மணலி - பொன்னேரி ரோடு
மணலி,
சென்னை - 600 068.
தந்தி - MINESALITE

DIPR/1174/MS/88/ARIES

# நினைவுக் கோலம்



மதுரையில், பாரதியார் ஆசிரியராகப் பணியாற்றியசேதுபதி உயர் நிலைப் பள்ளியில் 1956ஆம் ஆண்டு பாவேந்தர் தலைமையில் ஒரு கவியரங்க நிகழ்ச்சி நடைபெற்றது. அந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் வாய்ப்பு எனக்கும் கிடைத்தது. நிகழ்ச்சியின் முடிவில்,

''பழனியப்பா! திருக்குறளுக்கு ஒரு புரட்சி உரை எழுதப் போகிறேன். நீ என்னோடு புறப்படு. எனக்கு உதவியாக இருப்பதோடு அச்சகத்தையும் நீயே கவனித்துக் கொள்ளலாம்'' என்றார்.

நான், உடனே, பாவேந்தருடன் புறப்பட்டு, புதுவை சென்று, 'பாவேந்தரின் வீட்டில் நானும் ஓர் உறுப்பினரானேன்.

இரண்டொரு நாள் கழிந்ததும் இல்லத்திலுள்ள ஒரு சிறு அறையில் உட்கார்ந்து எழுத ஆரம்பித்தோம்.

''பழனியப்பா! முதலில், 'திருக்குறள் கனகசுப்புரத்தினம் என்ற பாரதிதாசன் எழுதிய புரட்சிஉரை' என்று எழுது'' என்றார்.

நான் அவரை நிமிர்ந்து பார்த்து, ''ஐயா பாரதிதாசன் என்னும் பெயர் தான் எல்லோருக்கும் அறிமுகமான பெயராகிவிட்டதே, அப்படியிருக்க, ''ஏன் கனக சுப்புரத்தினம் என்று குறிப்பிட வேண்டும்? என்று கேட்டேன்.

''உனக்குத் தெரியுமா? இந்த உரையில் நான் குறிப்பிடும் இலக்கண மேற்கோள்களும் குறிப்புகளும் நான்கனகசுப்புரத்தினமாக இருந்த போது கற்றுக்கொண்டவை. பாரதியாரின் தொடர்புக்குப் பிறகு, நான் அவரிடம் கற்றுக் கொண்டது, கவிதை எள்மையாக-எல்லாருக்கும் புரியும் நடையில் இருக்கவேண்டும் என்பதுதான். அதன் பிறகுதான் எளிய நடையில் கவிதை எழுதினேன். எனவே, இந்த உரையில், 'கனகசுப்புரத்தினம் என்ற பாரதிதாசன் எழுதியது' என்று குறிப்பிடுவதுதான் சரி என்று கூறினார்.

உண்மைதானே? அவர் கூறினார்-நான் எழுதினேன்.

### சந்தன மரமும் ஆலமரமும்

காரைக்குடியில் 'வாரச் செய்தி' என்னும் கிழமை இதழின் ஆசிரியனாகப் பணிபுரிந்த காலம். அப்போது, சென்னை 'அமுதசுரபி' மாத இதழ் ஆசிரியரிடமிருந்து, எனக்கு ஒரு கடிதம் வந்தது. அதில்,

''அமுதசுரபி'யில் வெளிவரும் பாரதி பரம்பரை என்னும் கட்டுரைத்தொடரில், தங்களையும் அறிமுகப்படுத்த விரும்புகிறோம். எனவே, தங்கள் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கத்தையும், தங்களது ஒளிப்படத்தையும், தங்கள் கவிதை ஒன்றையும் விரைவில் அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

—என்று அதன் ஆசிரியர் எழுதியிருந்தார். கடிதத்தைப் படித்து முடித்தேன். உடனே, அமுதசுரபி ஆசிரியருக்கு ஒரு கடிதம் எழுதினேன்.

''தாங்கள் என்பால் கொண்ட பேரன்பிற்கு நன்றி.

'பாரதி பரம்பரை' என்று கூறிக் கொள்வதற்கான தகுதி எள்ளத்தனையும் எனக்கில்லை. என்னைப் பொறுத்தவரை, அப்படிக் கூறிக் கொள்ளும் தகுதி, பாவேந்தர் பாரதிதாசன் ஒருவருக்கு மட்டுமே இருப்பதாக நான் கருதுகிறேன். என் கருத்து, சரியாகவும் இருக்கலாம். தவறாகவும் இருக்கலாம். தயவு செய்து, என்னை அத்தொடரில் சேர்ப்பதை விட்டுவிட வேண்டுகிறேன்'' என்று கடிதத்தில் குறிப்பிட்டேன். பிறகு, இரண்டோரு திங்களில் அத்தொடரும் நிறுத்தப் பட்டுவிட்டது.

பிறகு, நான் பாவேந்தரைப் பார்த்தபோது, இத் தகவலைத் தெரிவித்தேன். அதற்கு அவர் கூறியது என்ன தெரியுமா?

''பாரதியார் அவர்களோடு, பல அறிஞர்களும், சிந்தனையாளர்களும் எழுத்தாளர்களும், பழகினார்கள்; சிலர் கூடவே இருந்தார்கள். ஆனா

**கவிஞர் சாமி பழனியப்பன்**

லும் அவர்களில் யாரும் கவிஞராக ஒளிவிட முடியவில்லை.

''பாரதி ஒரு சந்தனமரம்;சந்தன மரத்தின் அடியிலே, வேறெந்தச் செடியும் மரமும் வளராது; நான் ஒரு ஆலமரம். ஆலமரம் வளர்ந்து, விழுது விட்டு, விழுதுகளையும் வலுப்படுத்தி,தானும் வலுப்பெற்று நிற்கும்'' என்றார்.

எவ்வளவு பெரிய உண்மை! எவ்வளவு அருமையான விளக்கம்! இதனை புதுக்கோட்டையிலிருந்து வெளிவந்த 'பொன்னி' இதழ் அறிமுகப் படுத்திய ''பாவேந்தர் பரம்பரை'' உண்மையாக்கிக் காட்டுகிறதல்லவா?

## தனியுடைமை தூங்குகிறது

செட்டி நாட்டிலே கோனாபட்டு என்னும் ஒரு ஊர்; தமிழ் மணத்திற்குப் பேர்பெற்ற ஊர்களில் அதுவும் ஒன்று. அங்கு ஓர் இலக்கிய நிகழ்ச்சிக்காக, பாவேந்தரை அழைத்திருந்தார்கள்.

காரைக்குடியிலிருந்து அண்ணன் இராம. சுப்பையா அவர்களும், நானும்,மற்றொரு நண்பரும் அந்த நிகழ்ச்சிக்குப் போயிருந்தோம். பாவேந்தர், மிக அருமையான சொற்பொழிவு நிகழ்த்தினார். நிகழ்ச்சி முடிய இரவு 10 மணிக்கு மேல் ஆகிவிட்டது. நாங்கள், காரைக்குடிக்குத் திரும்ப மறுநாள் காலையில்தான் பஸ் என்றார்கள். நாங்கள் எப்படியும் இரவே காரைக்குடிக்கு வந்தாக வேண்டும்.

நிலைமையை அறிந்த பாவேந்தர், ''ஏம்பா! நீங்கள் இனிமேல் எப்படி ஊருக்குப் போவீங்க? பஸ் இல்லையாமே!'' என்று பாசத்தோடு கேட்டார்.

அண்ணன் இராம.சுப்பையா, ''நாங்கள் எப்படியும் போயிடுவோம் அய்யா,'' என்று அவரிடம் கூறிவிட்டு எங்களைப் பார்த்து, ''தம்பிகளே!நல்லா நிலாவெளிச்சம் இருக்கு! அப்படியே பேசிக்கொண்டு நடந்து போயிடலாமா?'' என்று கேட்டார்.

நாங்கள் அப்போது மிகவும் இளைஞர்கள். அண்ணன் இராம. சுப்பையா சற்று முதுமையான இளைஞர்.

''ஓ! தாராளமா!'' என்று நாங்கள் கூறினோம்.

அன்று முழுநிலவு. எங்கும் பட்டப் பகல் போல் இருந்தது. சற்றுத் தொலைவில், ஆங்காங்கே சிலர், படுக்கை ஏதுமின்றி, வெறுந்தரையிலேயே குறட்டைவிட்டு, அநாயாசமாகத் தூங்கிக் கொண்டிருந்தார்கள்.

இதைப் பார்த்த பாவேந்தர் 'அதோ பாருங்கள்! அங்கே தூங்கிக் கொண்டிருக்கிறார்களே, எந்தக் கவலையுமில்லாமல், எவ்வளவு அநாயாசமாகத் தூங்குகிறார்கள்! இப்போது அவர்களிடத்தில் எத்தகைய வேறுபாட்டுணர்வுமில்லை- நான் பெரியவன், நீ பெரியவன் என்ற அகம்பாவமுமில்லை, 'அது என்னுடையது - இது எனக்குச் சொந்தம்'என்று சொல்லுகிற, தனியுடைமையுமில்லை. இவன் எனக்கு வேண்டியவன்-என்னவன், இவன் என்னுடைய பகைவன் என்ற பகையும் நட்பும் இல்லை. எவ்வளவு இனிமையான உலகம்!'' என்றார்.

நாங்கள், வியப்படைந்தவாறே, பாவேந்தரிடமும் விடைபெற்றுக் கொண்டு, அந்தப் 'பொதுமை'யையும், தனியுடைமையையும் பற்றிப் பேசிக் கொண்டே நடைபோட்டோம், காரைக்குடியை நோக்கி! சோர்வும் தெரியவில்லை! தொலைவும் தெரியவில்லை.

### 8-வது உலகத் தமிழ்மாநாடு

வருகிற டிசம்பர் திங்களில் மோரீஸ் தீவில் 7-வது உலகத்தமிழ் மாநாடு நடைபெற உள்ளது. மோரீஸ் அரசுடன் உலகத் தமிழ் மாமன்றம் இணைந்து நடத்த உள்ளது. 19-3-87 அன்று நடைபெற்ற உலகத் தமிழர் மாமன்ற செயற்குழுக் கூட்டத்தின் பின் இத்தகவல்களைக் கூறிய அம்மாமன்றத்தின் தலைவரும் மலேயா தமிழர் தலைவருமான டாக்டர் வி. டேவிட் எம்.பி. அவர்கள் ''எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டை, தமிழ்நாட்டின் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடத்த வேண்டும் என்றும்,மாநாடு சிறப்புற நடைபெற நாங்கள் முழு ஒத்துழைப்பு அளிப்போம்'' என்றும் கூறினார்.

## பாவேந்தரைப் பின்பற்றினால்

எந்தச் சூழ்நிலையிலும் அவசர அவசரமாகக் கவிதை, எழுதி, அதனை அப்படியே அனுப்பிவிடும் பலர் இன்று இருக்கிறார்கள். அவை, பெரும்பாலும் அரைவேக்காடுகளாகவே இருக்கும். பாவேந்தரைப் பொறுத்தவரை அப்படிக் கவிதைகள் எழுதுவதில்லை. கவிதையைச் சொல்லி, 'எழுது' என்பார். சொல்லச் சொல்ல எழுதியபின், படிக்கச் சொல்லிக் கேட்பார். வார்த்தைகளை, வரிகளை மாற்றி எழுதச் சொல்லி, பிறகு படிக்கச் சொல்வார். அதைக் கேட்டு, அவர் மனதுக்கு நிறைவாகத்தெரிந்தாலே நகலெடுத்து அனுப்பச் சொல்வார்.

இன்று, கவிதை படைப்போர் இந்த முறையினைக் கொஞ்சம் ஆழமாகச் சிந்தித்துப் பார்த்துப் பின்பற்றினால், அது அவர்களுக்கும் நல்லது; நமது தமிழுக்கும்,இலக்கியத்திற்கும் கூட நல்லது.

## பூட்டை உடைத்தோம்

காந்தியடிகள், தந்தைபெரியார், பாரதியார், ப. ஜீவானந்தம் ஆகியோரெல்லாம் வந்து தங்கிச்சென்ற இல்லம், கானாடுகாத்தான் 'இன்ப மாளிகை'. ஆம். செட்டிநாட்டில் வாழ்ந்த சிறந்த சீர்திருத்தவாதிகளில் குறிப்பிடத்தக்க ஒருவரான பெரியார் வை. சு. சண்முகம் அவர்களின் இல்லம்தான் அந்த இன்ப மாளிகை.

வை.சு.அவர்கள் புலவர் உள்ளம் படைத்தவர்; உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசத் தெரியாத உத்தமர். தனக்குச் சரியென்று பட்டால் அதை நிலைநாட்ட எந்த விலையும் கொடுக்கத்தயங்காதவர்; பாவேந்தரிடம் மிக்க ஈடுபாடும், குடும்ப நட்பும் கொண்டவர்.

ஒரு சமயம், பாவேந்தரும் அண்ணன் இராம. சுப்பையாவும், இன்னும் ஒருசில அன்பர்களும்,அப்போது மாணவனாக இருந்த நானும் கானாடுகாத்தான், இன்ப மாளிகைக்குச் சென்றோம். பாவேந்தரின் படைப்புகளை நூலாக வெளியிட 'முத்தமிழ் நிலையம்' என்னும் பெயரில் ஒரு வெளியீட்டு நிறுவனம் உருவாக்குவது பற்றிக் கலந்துபேசி முடிவெடுப்பதற்காக.

'இன்ப மாளிகையினுள் செல்லுவதற்கு இரண்டு வழிகள் உண்டு; 'முகப்பு வழிக்கதவு' எப்போதும் உள்ளே பூட்டப்பட்டிருக்கும், முக்கியமான நிகழ்ச்சிகளின்போதுதான் திறக்கப்படும். பக்கத்திலேயே இன்னொரு வழி, அது அடையாநெடுங்கதவம். சாதாரணக் காலங்களில் அந்த வழியாகத்தான் போக்குவரத்து!

நாங்கள் இன்ப மாளிகைக்குப் போனதும், பெரியவர் வை.சு.சண்முகமும்,அவர்தம் குடும்பத்தினரும் மிக்க அன்போடு வரவேற்று உபசரித்தனர். சிறிது நேரத்தில் மதிய உணவு.

உணவருந்தி, சிறிதுநேர ஓய்வுக்குப் பின், முத்தமிழ் நிலையம் பற்றிக் கலந்துரையாடல், கலந்துரையாடலில், எங்களுடன் வந்திருந்த அன்பர்களில் ஒருவர் தெரிவித்த கருத்து, 'வை.சு.'வுக்குப் பிடிக்கவில்லை. எதிர்ப்புத் தெரிவித்தார். 'உரையாடல்' திசை திரும்பிப் புயல் ஆயிற்று. பாவேந்தரின் உள்ளம்எளிமையானது,'ஒன்றும் வேண்டாம். உடனே இங்கிருந்து புறப்படு' என்று ஆணையிட்டுவிட்டு, எழுந்து வேகமாக நடந்தார். அண்ணன்

இராம. சுப்பையா'வும் நானும், பாவேந்தரைப் பின் தொடர்ந்தோம். 'வை. சு.' எவ்வளவோ தடுத்தும் பயனில்லை.

பூட்டப்பட்டிருக்கும் முகப்புக் கதவை நெருங்கினார், பாவேந்தர். 'ஐயா! கதவு பூட்டப்பட்டிருக்கே' என்றேன். நான்.

'பூட்டை உடை' என்று உரத்த குரலில் ஆணையிட்டார் பாவேந்தர்.

பக்கத்தில் கிடந்த ஒரு இரும்பை எடுத்து, பலங்கொண்ட மட்டும் ஓங்கி அடித்தார் அண்ணன் இராம. சுப்பையா. பூட்டு உடைந்தது. கதவைத் திறந்து கொண்டு, நாங்கள் வெளியேறினோம். அங்கிருந்து பேருந்து நிலையத்திற்கு நடந்து, பேருந்து மூலம் காரைக்குடி அண்ணன் இராம.சுப்பையா அவர்களின் இல்லத்திற்கு வந்து சேர்ந்தோம். அதுவரை பாவேந்தர் எதுவும் பேசவே இல்லை. முகம் மட்டும் கடுகடுப்பாகவே இருந்தது.

ஒய்வு நாற்காலியில் உட்கார்ந்தார் பாவேந்தர். உடனே, சமையலறையிலிருந்து அங்குவந்த அண்ணியார் விசாலாட்சி இராம.சுப்பையா பாவேந்தரைப் பார்த்து, ''என்னங்க ஐயா, வை.சு.வோடசண்டை போட்டுக்கொண்டு வந்துவிட்டீங்களா?'' என்று கேட்டார்.

உடனே பாவேந்தர் கலகலவென்று சிரிப்பு ஒலி அதிர, "என்னம்மா உனக்குச்சோதிடமா தெரியும்?" என்று கேட்டார். நாங்களும் அப்போதுதான் சிரித்தோம்.

சில ஆண்டுகளுக்குப் பிறகு, பெரியவர் வை.சு.வின் மகன் வயிற்றுப் பேத்திகமலாவுக்கும், அண்ணன் இராம.சுப்பையாவின் மூத்த மகன் திரைப்பட இயக்குநர் எஸ்.பி.முத்துராமனுக்கும் திருமணம் நடைபெறும் என்பது அப்போது எங்கள் யாருக்குமே தெரியாது.

### வைணவ உணவு

பாவேந்தர் ஒருசமயம் கடலூரில் ஒரு பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளச் சென்றிருந்தார். அதே கூட்டத்தில் டார்பிடோ திரு.ஏ.பி. ஜனார்த்தனமும் கலந்து கொண்டார்.

அன்று இரவு சுமார் 7 மணி அளவுக்குக் கடலூரில் இருந்து பாண்டிக்கு வந்த பேருந்து நடத்துநர் ஒருவர், பாவேந்தரின் பழனியம்மா அச்சகத்திற்குவந்து 'இதை, கவிஞர் ஐயா உங்களிடம் கொடுக்கச் சொன்னார்கள்'' என்று கூறி, என்னிடம் ஒரு கடிதத்தைத் தந்தார். நான் கடிதத்தைப் பிரித்துப் படித்தேன்.

''அன்புள்ள பழனியப்பனுக்கு,

இரவு, கூட்டம் முடிந்ததும், தோழர் ஜனார்த்தனமும் நானும் கடைசி வண்டியில் வருகிறோம், எங்களுடன் இன்னும் இருவரும் வருவார்கள். எனவே, நான்கு அல்லது ஐந்து பேருக்கு வைணவ உணவு தயாரித்து வைக்கச் சொல்லவும்."

கடிதத்தைப் படித்து முடித்ததும், பாவேந்தரின் நகைச்சுவையை எண்ணிச் சிரித்தேன்.

ஆம். 'அசைவ உணவைத்தான், அவர் 'வைணவ உணவு'என்று குறிப்பிட்டிருந்தார். பாவேந்தர் வீட்டிற்குச் சென்று விஷயத்தைச் சொல்லி 'அசைவச் சாப்பாடு' சமைத்துவைக்கும்படி அம்மாவிடம் சொல்லி ஏற்பாடு செய்தேன்.

'பிறகு, பாவேந்தரும், டார்பிடோவும், மற்றிருவரும் வந்தனர். டார்பிடோ என்னைப் பார்த்துப் புன்னகைத்தவாறே, 'என்ன சாப்பாடு 'என்றார். நான் சிரிப்பை அடக்கிக் கொண்டே 'வைணவம் தான்' என்றேன். அப்புறமென்ன? இந்த நகைச்சுவை விருந்தில் அனைவருமே கலந்து கொண்டனர்.

## சிறார் பொறுப்பு



இன்று குழந்தைகள் நீங்கள்-எனினும்
இனி இந்த நாட்டினை ஆளப்பிறந்தீர்!
இன்று குழந்தைகள் நீங்கள்!

நன்றாய்ப் படியுங்கள்! நாட்டின் குழந்தைகாள்!
ஒன்றாய் இருங்கள் உயர்வினை எண்ணுங்கள்!
இன்று குழந்தைகள் நீங்கள்!

குன்றினைப்போல் உடல்வன்மை வேண்டும்!
கொடுமை தீர்க்கப்போ ராடுதல் வேண்டும்!
தின்றதையே தின்று தெவிட்டுதல் இல்லாமல்
அன்றன்று வாழ்விற் புதுமை காணவேண்டும்
இன்று குழந்தைகள் நீங்கள்!

பல்கலை ஆய்ந்து தொழில் பல கற்றும்,
பாட்டிற் சுவை காணும் திறமையும் உற்றும்,
அல்லும் பகலும் இந்நாட்டுக் குழைப்பீர்கள்!
அறிவுடன் ஆண்மையைக் கூவி அழைப்பீர்கள்!
இன்று குழந்தைகள் நீங்கள்!

## தூய்மை

தூய்மை சேரடா தம்பி-என்
சொல்லை நீ பெரிதும் நம்பித்
தூய்மை சேரடா தம்பி!


வாய்மையாலும் ஒழுக்கத்தினாலும் அகத்
தூய்மை உண்டாகும் மேலும் மேலும்
தூயமை சேரடா தம்பி!

உடையினில் தூய்மை-உண்ணும்
உணவினில் தூய்மை-வாழ்வின்
நடையினில் தூய்மை-உன்றன்
நல்லுடற் றூய்மை-சேர்ப்பின்
தடையில்லை வாழ்நாள் ஒவ்வொன்றும் இன்பம்
தரும்நாள் ஆகும்-நீ-என்றும்
தூய்மை சேரடா தம்பி!



துகளிலா நெஞ்சில்-சாதி
துளிர்ப்பதும் இல்லை;-சமயப்
புகைச்சலும் இல்லை;-மற்றும்
புன்செயல் இல்லை!-தம்பி!
அகத்திலே அன்பின் வெள்ளம் மூளும்;தீய
அச்சம் போகும்!-நீ எந்நாளும்
தூய்மை சேரடா தம்பி!

பாவேந்தர் பாரதிதாசன்




## குழாய்க் கிணறுகளில் பிளாஸ்டிக் குழாய்களின் பயன்

தமிழ்நாட்டில் விவசாயிகள் பாசனத்திற்கு வேண்டிய நீரை குழாய்க் கிணறுகளின் மூலம் எடுத்துப் பயன்படுத்துகின்றனர். இந்த குழாய்க்கிணறுகளில் பொதுவாக உலோகக் குழாய்கள் பயன்படுத்தப் படுகின்றன.

உலோகக் குழாய்கள் சிறிது காலங்களில் துருப்பிடித்து விடுவதால் அதனுடைய ஆயுட்காலம் குறைவதுடன் நீரேற்றும் திறனும் குறைகின்றது. விலையும் அதிகமாக உள்ளது. மாறாக,தற்போது குழாய்க் கிணறுகளில் பிளாஸ்டிக், பிவிசி, மற்றும் உயர் அழுத்தமுள்ள பாலி எதிலின் குழாய்கள் பயன்படுத்தப்படுகின்றன.

இந்தக் குழாய்கள் அழுத்த விரயத்தைக் குறைத்து அதிக நீரை வெளியேற்றுகிறது. ஆராய்ச்சி முடிவுகளின்படி இந்தக் குழாய்களைப் பயன்படுத்துவதால் உலோகக் குழாய்களைவிட ஏற்படும் விரயத்தைக் குறைத்து, அதாவது சக்தியைச் சேமித்து, சுமார் 5 சதவிகிதம் நீரை அதிகமாக வெளியேற்றுகிறது.

மேலும், பிளாஸ்டிக் குழாய்கள், உலோகக் குழாய்களைவிட மூன்று மடங்கு விலை குறைவானதாகும். எனவே, வேளாண் பெருமக்கள் இந்த வகையான பிளாஸ்டிக் குழாய்களை ஆழ்கிணறுகளில் பயன்படுத்தி அதிக நன்மை பெறலாம்.

## மாசி எள்ளும் மடியில் பணமும்

'மாசி எள், மடியில் பணம்' என்ற பழமொழியை யாவரும் அறிவர். எள் சாகுபடியை மானாவாரியிலும், இறைவையிலும் நடப்புப் பருவத்தில் சாகுபடி செய்யலாம்.

வருகிற கோடை மழை பெய்கிற காலத்து – அதாவது பங்குனி-சித்திரைப் பட்டத்தில் பெய்யும் மழையைக் கொண்டு மானாவாரி சாகுபடி செய்ய முடியும். கிணற்றுப் பாசனமுள்ள பகுதிகளில் இறைவைப் பயிராக சாகுபடி செய்யலாம்.

பூமியை நன்றாக உழுது, நன்றாக மக்கிய தொழுஉரம் எக்டேருக்கு 12.5 டன் கடைசி உழவில் போட்டு விட வேண்டும். இரசாயன உரங்களை மண் பரிசோதனை செய்து, அதன் பரிந்துரையின்படி அடியுரமாகவே இட வேண்டும். அப்படி இல்லையெனில், மானாவாரிப் பயிருக்கு எக்டேருக்கு 23 கிலோ தழை, 13 கிலோ மணி, 13 கிலோ சாம்பல்,முறையே இடவேண்டும். இறைவைப் பயிருக்கு எக்டேருக்கு 35 கிலோ தழை, 23 கிலோ மணி, 23 கிலோ சாம்பல் சத்து இட வேண்டும். இதனையும் அடியுரமாக இடவேண்டும்.

ஓர் எக்டேருக்கு 5 கிலோ விதை தேவைப்படும். ஒரு கிலோ விதையுடன் 3 கிராம் அல்லது 2 கிராம் கார்பாக்ஸின் அல்லது 2 கிராம் கார்பெண்டாஜின் என்ற பூசண மருந்தைக் கலக்க வேண்டும். பின்பு 24 மணி நேரம் கழித்து அசோஸ்பைரில்லம்' நுண்ணுயிர் உரத்தை 5 கிலோ எள் விதையுடன் 3 பாக்கெட் (600 கிராம்) என்ற அளவில் வடிகஞ்சியுடன் கலந்த கலவை கலக்க வேண்டும். இதனை நிழலில் 15-30 நிமிடம் உலர வைத்து உடனே விதைக்க வேண்டும். விதை விதைப்பதற்கு முன்பு எக்டேருக்கு 5 கிலோ மாங்கனீஸ் சல்பேட்டை 50 கிலோ மண்ணுடன் கலந்து சீராகத் தூவிவிட வேண்டும்.

எள் பயிருக்கு இடைவெளி மிக முக்கியம். 'அடர விதைத்து சிதற எடு' என்ற பழமொழிப்படி ஆரம்பக்கட்டத்தில் பயிர் சிறிது நெருக்கமாக இருந்தாலும், 15-வது மற்றும் 30வது நாள் களை எடுக்கும் போது 30-30 செ.மீ இடைவெளியில் பயிர் இருக்கும்படி செய்து, மற்ற பயிர்களைக் கலைத்து விட வேண்டும்.

மேற்கண்ட சாகுபடி நுட்பங்களை வருகிற பங்குனி-சித்திரைப் பட்டத்தில் கையாள வேண்டும்.

## மிளகாயில் வெள்ளைச் சிலந்தியைக் கட்டுப்படுத்திடுவீர்!


தற்பொழுது நிலவும் மழையற்ற தட்ப வெப்பநிலைகளில் மிளகாயில் வெள்ளைச்சிலந்தியின் தாக்குதல் பரவலாகக் காணப்படுகிறது.

வெள்ளைச்சிலந்தி நுண்ணியவை. கண்ணுக்குத் தெரியாதவை. (உருப்பெருக்கியின் மூலம்தான் பார்க்க முடியும்) மிளகாய் நாற்றுவிட்டது முதல் இச்சிலந்தி பயிரின் எல்லா வளர்ச்சிப் பருவங்களிலும் தாக்குகிறது. இச்சிலந்திகளின் முட்டை மற்றும் குஞ்சுகள் இலைகளின் அடிப்பாகத்தில் காணப்படும். இளம் பயிர்களில் பளபளப்பான கருப்பு நிறப்புள்ளிகள் இலைகளின் அடிப்பாகத்தில், அங்குமிங்குமாகத் தோன்றும். இலைகள் சுருங்கி, கீழ் நோக்கி மடியும். மேலும் இலைகள் தடித்து, தொட்டால் உடையும் தன்மை பெறும். இலைகளின் நுனிகள் கருகிச் சுருங்கும். (எனவே இது ''முரனை'' என்று அழைக்கப்படுகிறது.) பயிர் வளர்ச்சி குன்றி,பயிர் நோயுற்றது போலச் சிறுத்துக் காணப்படும்.

வெள்ளைச் சிலந்தி கண்ணுக்குத் தென்பட வாய்ப்பில்லாததால் சிலந்தியின் அறிகுறி பல சமயங்களில் பூச்சியின் தாக்குதல் என எண்ணி பூச்சிக் கொல்லிகளை உபயோகிப்பீர். இதனால் இச்சிலந்தியைத் தாக்கும் எதிரிச் சிலந்திகள் கொல்லப்பட்டு வெள்ளைச் சிலந்திகள் மேலும் பரவுகின்றன. பாதிக்கப்பட்ட செடிகளில் கருகிய இலைகள் முற்றிலும் உதிர்ந்துவிடும். மிளகாய் பூக்கும் பருவத்திலும், காய்கள் பிடிக்கும் பருவத்திலும் பாதிக்கப்பட்ட செடிகளில் பூக்கள் உதிர்ந்து விடும். காய்பிடிப்பது வெகுவாகப் பாதிக்கப்படும்.

மிளகாயில் தோன்றும் வெள்ளைச் சிலந்தியைக் கட்டுப்படுத்த அசிபேட் 0.05 (1 கிராம் மருந்தை 1.5 லிட்டர் நீரில் கரைக்கவும்). மருந்துக் கரைசலைக் கைத்தெளிப்பான் மூலம் ஓர் எக்டேருக்கு 500 லிட்டர் என்ற அளவில் கலந்து பயிர் மீதும், இலைகளின் மீதும் அடிப்பாகத்திலும் நன்கு படும்படி தெளிக்கவேண்டும். தற்போது மிளகாய் வற்றலுக்கு நல்ல விலை இருப்பதால், சாகுபடியாளர்கள் மேற்கூறிய மருந்தைப் பயன்படுத்தி வெள்ளைச் சிலந்திகளைக் கட்டுப்படுத்தி, மகசூலைப் பெருக்கலாம்.

**வெளியீடு: வேளாண் தகவல் பணி மையம்,**
**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை-641003.**



# நூல் நயம்

**சந்திப்பு**

ஆசிரியர்: புலவர் இளஞ்செழியன்
வெளியீடு: மலர்மாமணி பதிப்பகம்
9, சிவராமன் தெரு,
திருவல்லிக்கேணி
சென்னை-600005.

விலை: ரூ.12.00 பக்கம்: 96

மூன்று நாடகங்களைக் கொண்ட இந்த நூல், கதை அமைப்பிலும் நிகழ்ச்சிப் பின்னல்களிலும் சிறப்பாக அமைந்துள்ளது. பாத்திரங்கள் தக்க முறையிலே உருவாக்கப்பட்டிருக்கிறார்கள். உரையாடல்கள் நல்ல தமிழில் எழுதப்பட்டிருக்கின்றன. தத்துவங்களைப் போதிக்கின்றன. எதுகை மோனைகள் மிக இயல்பாகக் காணப்படுகின்றன. நடையிலே விறுவிறுப்பு உள்ளது.

உரையாடல்களில் சிறந்தவை சில தேர்ந்தெடுக்கப்பெற்று பொன் மொழிகள் போல, நூலின் இறுதியில் வெளியிடப்பட்டிருப்பது பாராட்டத்தக்கது.

''விடியாத இரவுண்டா? விலகாத பனி உண்டா? இல்லை! அதுபோல முயன்றால் எதுவும் முடியும்''

—மொத்தத்தில் மரபுக்கவிதை நூலைப் படித்த நிறைவு ஏற்படுகிறது.

–தமிழ்ப்பித்தன்

## முயற்சியின் வெற்றி

ஆசிரியர்: கவிஞர் தமிழ்முடி
வெளியீடு: தமிழ்முடி நிலையம்
எச்.10 ,கே. பொன்னம்பலம் சாலை,
கே.கே. நகர்
சென்னை-600 078

விலை. ரூ. 4.50 பக்கம்.48

சின்னச் சின்னக் கதைகளின் தொகுப்பு. குழந்தைகளுக்கு ஒவ்வொரு கதையிலும் ஓர் அறிவுரை கூறப்பட்டுள்ளது.

எளிமையாக எழுதப்பட்டிருக்கும் இக்கதைகளில் சில, படிக்கும் போதே முடிவைத் தெரிந்துகொள்ள ஆவலைத் தூண்டும் வண்ணம் அமைந்துள்ளன.

கதைகளின் இறுதியில் அந்தந்தக் கதைக்ளில் கூறப்பட்டுள்ள நீதியைத் தனியே நான்கு வரிகளில் சுருக்கிக் கொடுத்திருப்பதுசிறப்பாகவுள்ளது.

## அது ஏன்? இது ஏன்?

ஆசிரியர்: டாக்டர்ஆனைவாரிஆனந்தன்-
வெளியீடு: சங்கர் பப்ளிகேஷன்ஸ்;
6, தம்பையா தெரு 'விரிவு'
மேற்கு மாம்பலம்,
சென்னை-600 033.

விலை. ரூ. 7.50 பக்கம் 74

ஒவ்வொரு நாளும் நம் குழந்தைகள் தங்களுக்கு எழும் சந்தேகங்களைப் போக்கிக்கொள்ளும் ஆவலில் ஏன்? எதற்கு? எப்படி? என்று நம்மிடம் கேட்கின்றனர். தெரிந்தவைகளுக்கு அரைகுறையாக பதில் கூறிச் சமாளிக்கிறோம் தெரியாதவற்றிற்கு அதட்டி அடக்கி விடுகிறோம் அத்தகைய பல வினாக்களையும், அவற்றிற்கான விடைகளையும் கொண்டதுதான் இந்நூல்

நம் அன்றாட வாழ்க்கையோடு தொடர்புள்ள பல விவரங்களை நம் குழந்தைகள் அறிந்துகொள்ள (ஏன்? நாமும்தான்) உதவுகிறது இந் நூல்

–அ மருதவிநாயகம்

## பாவேந்தர் பாலம்

தொகுப்பாசிரியர்: அமுதவல்லி
வெளியீடு: பூங்கொடி பதிப்பகம்
14, சித்திரைக்குளம் மேற்குவீதி,
மயிலாப்பூர், சென்னை-600004.

விலை ரூ 14. பக்கம்: 168

பாவேந்தர் பாரதிதாசன் அவர்களைக் குறித்து 17பெருமக்கள் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு இந்நூல். அவ்வப்போது பாவேந்தரைக் குறித்துப் பல இதழ்களில் வெளிவந்த கட்டுரைகளைத் தொகுத்து நூலாக்கியுள்ளார், பாவேந்தரின் பேர்த்தி அமுதவல்லி.

ஒவ்வொரு கட்டுரையும் பாவேந்தரின் ஒவ்வொரு திறன் குறித்து எடுத்துக் கூறுகிறது. பாரதிக்கும் பாரதிதாசனுக்கும் உள்ள ஒற்றுமையை-ஒப்பியல்பை ஒரு கட்டுரை விவரிக்கிறது. குழந்தை இலக்கியத்திற்குப் பாவேந்தர் ஆற்றிய தொண்டினை மற்றொரு கட்டுரை விளக்கம் செய்கிறது.

இப்படி அரிய தொரு இலக்கியப் பெட்டகமாக இந்நூலைத் தொகுத்திருக்கும் நூலாசிரியர் பாராட்டுக்குரியவர் என்று பல முறை சொல்லலாம். சொல்லிச் சொல்லி மகிழலாம்.

—எஸ்.எஸ்.சுந்தரம்.

## நாட்டுப்புற மண்ணும் மக்களும்

ஆசிரியர்: டாக்டர் கே.ஏ.குண சேகரன்
வெளியீடு: நியூசெஞ்சுரி புக்ஹவுஸ்
பிரைவேட் லிமிடெட்,
41-பி, சிட்கோ எஸ்டேட்,
சென்னை-600098

விலை: ரூ.15 பக்கம்: 172

எழுதப் படிக்கத் தெரியாத பாமர மக்களின் வாய்மொழியாக வெளிவந்தவைதாம் நாட்டுப்புறப் பாடல்கள்-நாட்டுப்புறக் கலைகள்.

நீ செய்யும் காரியத்திற்கு நீயே
பொறுப்பாளியாயிருக்க வேண்டும்,
நீ செய்வதற்குப் பிறர் தண்டனை
அடையும்படி ஏற்படக்கூடாது.

— மாக்ஸிம் கார்க்கி

இது வெறும் பாடலாக மட்டுமின்றி, ஆடல்வாயிலாகவும் வெளிப்படுத்தப்படுகிறது. பல்வேறு காவ கட்டங்களில் நாட்டுப்புற மண்ணின் தன்மைகளை எடுத்துக்காட்டும் இலக்கியங்கள் என்றுகூட இதனைக் கூறலாம்.

நாட்டுப்புறவியல் அன்றும் இன்றும் பற்றிய ஆய்வினைத்தொடங்கி, நாட்டுப்புறக் கலையும் சமூகத் தேவையும் என்று முடித்து, இடையே நாட்டுப்புற நடனங்கள்-ஒயிலாட்டங்கள்-தெருக்கூத்து-சிந்து இசைவகை-பேயாட்டம் முதலான இத்துறை பற்றிய கூறுகள் எல்லாம் ஆராய்ச்சிக் கண்ணோட்டத்துடன் எழுதப்பட்டுள்ளது.

நாட்டுப்புறக் கலைகள் பற்றி ஆராய்வோருக்கு மட்டுமல்ல, ஆர்வலருக்கும்கூட இந்நூல் ஒரு வரப்பிரசாதமாக விளங்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

–பி.வி.கிரி.

மாணவர் பக்கம்

# நல்லபடி வாழ்ந்திட...




கலைப் பொழிலன்

நல்லபடி வாழ்வதற்குத்
தம்பி — சில
நல்லுரைகள் சொல்லுகிறேன்
கேட்டுநட நம்பி!

பெரியோரைப் பணிவதே
பெருமை - உன்னைப்
பெற்றவர்க்கு அடங்கி
நடத்தலே கடமை!
சிறியோரின் நட்பெலாம்
சிறுமை - நீ
சிறப்புறவே வாழ்வதற்கு
வேண்டுமடா திறமை !

அன்பெனும் பண்புகொண்ட
உள்ளம் - அது
ஆண்டவன் விருப்பமுடன்
இருக்கின்ற இல்லம் !
வம்பின்றிப் பிறரிடம்
நீபழகு - அது
வசையில்லா வாழ்க்கைக்கு
வளமான அழகு !

உண்மையுடன் உழைப்பதற்கே
பிறப்பு - அது
ஊருக்கும் உறவுக்கும்
நீசெய்யும் சிறப்பு !
திண்மையுடன் தீமைகளை
எதிர்த்து - மன
வன்மையுடன் வாழ்ந்திடுநீ
நல்லோரை மதித்து !



## விளையும் பயிர்!

தருமபுரி மாவட்டம், ஒசூர் இரா. பி.வி. அரசு ஆண்கள்மேல் நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்புப் பயிலும் மாணவர் நா.சண்முகநாதன்.

இவர் படிப்பில் மட்டுமல்ல, கட்டுரை, கவிதை, பேச்சுப் போட்டிகளிலும் பரிசுகள் பெற்றுள்ளார். பாண்டிச்சேரியில் நடைபெற்ற அகில இந்தியக் குழந்தைகள் விழாவில், தருமபுரி மாவட்டத்தின் சார்பில் இவர் கலந்து கொண்டார்.

**14 வது வயதில்**

வில்லியம்பட் — உலகமே புகழும் அருமையான அரசியல் சோக நாடகத்தை எழுதிப் பெயர் பெற்றார்!



**15வது வயதில்**

விக்டர் கியுகோ — பிரஞ்சு இலக்கியக் கழகத்துக்குச் சிந்தனையூட்டும் கவிதை ஒன்று எழுதிப் படைத்துத் தன் கீர்த்திக்கு விதை நட்டார்.

**16வது வயதில்!**

மாவீரன் அலெக்சாண்டர் — தன் தந்தையாரின் படையில் தளபதியாகி, உலகையே கலக்கினார்.

அரிஸ்டாட்டலின் தத்துவத்தில் உள்ள தவறுகளை அறிஞர் பேகன் எடுத்துக் காட்டியதும் இதே வயதில்தான்!



**17 வது வயதில்**

கலிலியோ — பைசா நகரத்தின் சாய்ந்த கோபுரத்திலுள்ள விளக்கு அப்படியும் இப்படியும் 'ஏன்' அசைகிறது என்ற ஆராய்ச்சியில் இறங்கினார்.


**18வது வயதில்**

ஜோன்-ஆப்-ஆர்க் — பிரஞ்சுக்காரர்களிடம் தாய்நாட்டுப்பற்றை ஊட்டி, போர்க் குரல் எழுப்பிப் புகழ் பெற்றார்.



# திராவிடர் நிலையை உயர்த்திய தியாகராயர்

—பேரறிஞர் அண்ணா



தியாகராயர் பெரிய செல்வந்தர், பணம் படைத்தவர்; தியாகராயர் விரும்பியிருந்தால் வியாபாரத்தின் மூலம் பல இலட்சம் ஈட்டியிருக்கலாம். ஆனால் அவர் அதனை ஒரு பொருட்டாக மதிக்கவில்லை.

தியாகராயர் விரும்பியிருந்தால் சென்னையிலேயே பெரும்பாலான இடங்களை அவர் சொந்தமாக வாங்கியிருக்க இயலும். பணத்தின் மதிப்பு இன்றிருந்ததை விட அன்று பல மடங்கு உயர்ந்திருந்தது. இன்றைய இலட்சம் அன்றைய ஆயிரம் ரூபாய்க்குச் சமமானது. அத்தகைய காலத்திலே பல இலட்சம் படைத்த அவர் நினைத்திருந்தால் சென்னை நகரையே தன் முதலீட்டுப் பணமாக ஆக்கியிருக்கலாம். அவர் கூப்பிட்ட நேரத்திலே பணியாற்ற பல ஆட்கள் அவரிடம் இருந்திருக்கக்கூடும். எத்தனையோ சீமான்கள், சிற்றரசர்கள், வியாபார வேந்தர்கள், ஜமீன்தார்கள் உண்டு களித்து, உல்லாச வாழ்வு வாழ்ந்து, களியாட்டத்தில் காலத்தைக் கடத்திக் கொண்டு இன்பத்வத நுகர்ந்து கொண்டிருப்பதைப் போல, தியாகராயரும் இருந்திருக்க முடியும்.

மேலும், தியாகராயர் விரும்பியிருந்தால், பழைய கோயில்களைப் புதுப்பிக்கும் வேலையிலோ, பளிங்கு மண்டபம் கட்டும் வேலையிலோ ஈடுபட்டிருக்கலாம். அவர் விரும்பியிருந்தால் தெற்கிலுள்ள பழனியைப் போல, வடக்கே ஒரு பழனியை உண்டாக்கியிருக்கலாம். இவைகளை ஏற்படுத்துவதற்குரிய பணம் அவரிடம் ஏராளமாக இருந்தது. அவர் இவைகளையெல்லாம் பெரிதாக மதிக்கவில்லை. தன்னுடைய சமூகத் தொண்டைத்தான் ஒரு பொருட்டாக மதித்தார். திராவிட சமூகத்திலே ஒரு பெரிய விழிப்புணர்ச்சியை உண்டாக்கினார். அரசியலிலே நம்மவர்கள் முதலிடம் பெறவேண்டுமென்று அவர் விரும்பினார். தியாகராயர் போக போக்கியத்தை விட்டுத் தாமாகவே கல்லும் முள்ளும் காட்டாறும் கருங்குழியும் நிரம்பிய பாதைவழியேசெல்லத் தொடங்கினார்.

சர் தியாகராயர் தோன்றி, திராவிடப் பெருங்குடி மக்கட்குத் தலைமைப் பூண்டு, அவர்களின் தன்னுணர்விற்கு வழிகோலி, அவர்களின் வாழ்வில் இருந்துவந்த அடிமைத் தனத்தை அகற்றப் பாடுபட்டு, சமுதாயத்துறை, பொருளாதாரத்துறை, அரசியல் துறை ஆகியவற்றில் இடம் பெற்று உழைத்தார்.

நம்முடைய அடிப்படைக் கட்டடம் பலமாக இருக்கவேண்டுமென்று அவர் அல்லும் பகலும் பாடுபட்டார். திராவிட இயக்கத்திற்குப் புத்துயிர் அளித்த பூமான் அவர்.

அவர் களத்திலே தூவிய விதை நன்றாக வளர்ந்திருக்கிறது. அவர் அன்று பறக்கவிட்ட சமுதாயப் புரட்சிக் கொடியின் கீழ் நின்றுதான், நாம் இன்று பணியாற்றி வருகிறோம்.

எங்கு நோக்கினும் திராவிடர் துன்ப வாழ்வில் சிக்கிச் சிதைந்து வந்த அந்தக் காலத்தில்தான் தியாகராயர் தோன்றினார். வேதனைமிகுந்த காட்சியைக்கண்டு உள்ளம் வெதும்பினார். சீறிப் போரிட்டுச் சீர்கேட்டை ஒழிக்கச் செயலிலே இறங்கினார். அவரைப் பொறுத்தமட்டும் அவருக்கு ஒரு குறையுமில்லை. மற்ற பிரச்சாரங்களைவிட அறிவுப் பிரச்சாரம்தான் முக்கியமானதென்று தியாகராயர் எண்ணினார். அன்றே அவர் அறப் போரைத் துவக்கினார். அந்த அறப் போர் இன்று வெற்றி பெற்றிருப்பதைக் கண்டு நாமனைவரும் பூரிப்படைகிறோம். இன்றைய தினம் திராவிட இனம் வளர்ந்திருப்பதைக் கண்டு பெருமை அடைகிறோம். அரசியல் வாழ்விலே பலர் இடம் பெற்றிருப்பதைக் கண்டு பெருமை அடைகிறோம். அன்று தியாகராயர் மத விஷயங்களிலே புகவில்லை. புரோகிதத்தை எதிர்க்கவில்லை. ஏனென்றால் முதலில் அவர், திராவிடர்களுக்குத் தன்னுணர்வை ஏற்படுத்தி மக்களைத் தட்டி எழுப்பிய பின்தான், மத விஷயத்திலே புக விரும்பினார். முதன் முதலில் நம் மக்களுக்கு என்ன தேவை என்பதை நன்குணர்ந்தே அவர் முதலில் அப்படி ஈடுபட்டார்.

தியாகராயர் நாம் வெற்றிமேல் வெற்றி பெற வழி காட்டினார். இருட்டறைகளிலும், காட்டு நிலத்திலும், கூட்டம் கூடி, இயேசுநாதர் உபதேசத்தைக் கேட்டு உலகம் உயர்ந்தது போல, தியாகராயரின் சொற்கள் தென்னாட்டில் மெள்ள, மெள்ள, ஏழை எளியோர் குடிசையில் குடிபுகுந்த பின்னர், மாளிகைகளிலெல்லாம் சென்று, மக்கள் மன்றத்திலே புதியதோர் எழுச்சியை உண்டாக்கிவிட்டன. சர். தியாகராயர் புதுமை பல செய்து காட்டினார்.

தியாகராயர் நம்மை விட்டுப் பிரிந்தார். ஆனால் அவரது ஞாபகம் நம்மை விட்டுப் பிரியாது. சர். பி.ட்டி. தியாகராயர் அரும்பாடுபட்டு வளர்த்த கொள்கைகளைக் கடைப்பிடித்து அதனின்றும் வளர்ச்சி பெற்று உயர்ந்தோங்கி வந்திருக்கும் திராவிடர் இயக்கம் வெற்றிமேல் வெற்றி பெறும்.

***(30-6-1950 அன்று திருவல்லிக்கேணியில் நடைபெற்ற தியாகராயர் நினைவுக்கூட்ட உரையிலிருந்து)***

# உழைப்பே



இலமென் றசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்!

—திருவள்ளுவர்.

ஒரு நல்ல தொழிலும், போதுமான வருமானமும், எதிர்காலத்துக்குக் கொஞ்சம் மீத்துவைக்க வசதியும், தன் குழந்தைகளுக்குக் கல்வி புகட்ட அறிவும், பிறருக்கு உதவிடும் எண்ணமும் உடையவன் எவனோ-அவனே உண்மையான மகிழ்ச்சி, உள்ளவனாவான்!

—இங்கர்சால்.

கடினமான உழைப்பே, நம் வளர்ச்சிக்கு உறுதியான அடித்தளத்தை உருவாக்கிக் கொடுக்கும்; பொறுப்புணர்ந்து உண்மையுடனும் ஒற்றுமையுடனும் உழைக்கும் நம் மன உறுதிப்பாட்டினால்தான் நம் நாட்டின் முன்னேற்றத்தைக் காண முடியும்:

—அண்ணல் காந்தியடிகள்.

உழைத்து வாழ்பவனே வணங்கத்தக்கவன்: வாழ்த்துக்குரியவன்! அந்த உழைப்பாளிக்கு ஊறு ஏற்படுவது சமுதாயத்தின் நல்வாழ்வையே புரையோடச் செய்வதாகும்.

—பேரறிஞர் அண்ணா.

கடினமான நிலத்தில் ஏர் கட்டி உழுவோரிடமும், சாலை அமைக்க சரளைக் கல் உடைப்போரிடமும் இறைவன் இருக்கிறான். அவர்களுடன் அவன் மழையில் நனை கின்றான். வெயிலில் உலர்கின்றான். அவனைப்போல நீங்களும் புழுதியில் இறங்கி வாருங்கள். நெற்றி வேர்வை நிலத்தில் விழ உழைத்து உங்கள் இறைவனைக் கண்டு கொள்ளுங்கள்:

—கீதாஞ்சலியில் தாகூர்.

உழைக்கும்போது நீங்கள் உலகில் பண்டைய நெடுங்கனவில் ஒரு பகுதியை நிறைவேற்றியவ ராவீர்கள். அக்கனவு என்று பிறந்ததோ அன்றே உங்களுக்குரிய பங்கும் ஒதுக்கி வைக்கப் பட்டுவிட்டது. எனவே, உழைப்போடு ஒத்திசைந்து நடக்கையிலேதான் உண்மையில் நீங்கள் வாழ்வைக் காதலிக்கின்றீர்கள். இவ்வாறு உழைப்பால் வாழ்வைக் காதலிப்பது, வாழ்வின் இரகசியங்களை நெருங்கி அறிந்து கொள்ளதாகும்.

—கலீல் கிப்ரான்.

தான் வாழ்வதற்காக மற்றவர்களை உழைக்கச் செய்துவிட்டுத் தான் மட்டும் உழைக் காமல் வாழ முடியும் என்கிற நிலை படைத்த மனிதன் எங்கே இருக்கிறானோ, அங்கே அடிமைத்தனம் நிச்சயமாய் இருக்கும்.

—டால்ஸ்டாய்.

மனிதன் தானாக உழைத்துப் பழகிக் காய்த்துப் போயிருக்க வேண்டும். இன்ப நுகர்ச்சியிலும், மகிழ்ச்சியிலுமே ஆழ்ந்திருக்கக்கூடாது. அவை உடலுக்கும் நன்மை செய்வதில்லை; அறிவுக்கும் உதவுவதில்லை!

—சாக்ரடீஸ்.

மனிதன் தானாக நிமிர்ந்து நிற்கவேண்டும். மற்றவர்கள் அவனை அப்படி நிறுத்தி வைக்கக்கூடாது.

—மார்க் ஒளரேலியர்.



# உயர்வு

# மே நாள்



மே முதல் நாள்!

தொழிலாளர் இனத்துக்கு உவகை தரும் நாள்!

உலகம் முழுதும் உள்ள தொழிலாளர்கள் இந்த நாளைக் கொண்டாடுகிறார்கள். ஒரு நாட்டின் விடுதலைநாள் விழா, குடியரசு நாள் விழா போன்ற தேசிய நாட்கள் எவ்வளவு சிறப்புப் பெற்றிருக்கின்றனவோ அதுபோல மே நாளும் உலகச் சிறப்புப் பெற்றிருக்கிறது.

இந்த விழாவின் பொருள் என்ன? ஏன் இது கொண்டாடப்படுகிறது?

நாள்தோறும் 12 மணி நேரம் வேலை செய்துவந்து தொழிலாளர்கள் தங்கள் அலுவல் நேரத்தை 8 மணி நேரமாகக் குறைக்க வேண்டும் என்று போராட்டம் செய்து, வெற்றி பெற்றது இந்த மே நாளில் தான்.

## உழைக்கும் இனத்தின் உள்ளக் குமுறல்

ஏறக்குறைய 40 ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்க நாட்டில் தொழிலாளர்கள் நாள்தோறும் 16 மணி நேரம் அலுவல் பார்த்துவந்தார்கள். உழைக்கும் இனத்தின் உள்ளத்தில் குமுறல் ஏற்படத் தொடங்கியது. அலுவல் நேரத்தைக் குறைக்க வேண்டும் என்று கூறத் தொடங்கினர்.

1837இல் அமெரிக்க நாட்டின் குடியரசுத் தலைவராக இருந்த வான்ப்யூரன், அரசு அலுவலகங்களில் வேலை செய்வோர் 10 மணிநேரம் வேலை செய்தால் போதும் என்ற சட்டத்தை அறிமுகப்படுத்தினார். அவரது சட்டத்தைப் பின்பற்றிச் சில தொழிற்சாலைகள் 10 மணி நேர வேலைத் திட்டத்தை அமல் நடத்தின.

''பத்து மணி நேர அலுவல்கூட அதிகம், எட்டு மணி நேர அலுவலே நிர்ணயிக்கப்பட வேண்டும்'' என்று தொழிலாளர்கள் போராட்டம் செய்தார்கள்.

## தொழிலாளர்கள் ஒன்று கூடினர்

போராட்டம் மாபெரும் ஆர்ப்பாட்டமாக மாறியது. முதலாளிகள் அதனை அடக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். துப்பாக்கிகள் பயன்படுத்தப்பட்டன. 6 தொழிலாளர்கள் இறந்தனர். எண்ணற்ற தொழிலாளர் காயமுற்றனர். இந்த அடக்குமுறையைக் கண்டிப்பதற்காக 'ஹேய் மார்க்கெட்' என்ற இடத்தில் முப்பாதாயிரம் தொழிலாளர்கள் ஒன்று கூடினர். அவர்கள் மீதும் அடக்குமுறை பயன்படுத்தப்பட்டது. மிகப் பலர் கைதாகினர். அவர்களில் பலரது தலைகள் கொய்யப்பட்டன.

அதன் பின்னர் 1888இல் அமெரிக்காவில் தொழில்கூட்டு மாநாடு ஒன்று நடைபெற்றது. அந்த மாநாடு, எட்டு மணி நேர வேலைத் திட்டத்தை வலியுறுத்தியது. பாரிஸ், பிரஸ்ஸேல்ஸ் ஆகிய இடங்களில் கூடிய தொழிலாளர் மாநாடுகளும் அமெரிக்க மாநாட்டின் கருத்தை ஏற்றுக் கொண்டன. அந்தப் போராட்டங்கள் யாவும் மே திங்களில் நடைபெற்றதால் மே நாள் போராட்டம் என்று பெயர் பெற்றது. மிகுந்த இன்னல்களுக்குப் பின்னர் இந்தப் போராட்டத்தில் வெற்றி கிட்டியது.

1904ஆம் ஆண்டில் ஆம்ஸ்டர்டாமில் கூடிய தொழிலாளர் மாநாட்டில் ''இனிமேல் ஒவ்வொரு மே மாதம் முதல் நாளன்றும் இவ்விழாவைக் கொண்டாடவேண்டும்'' என்று முடிவு செய்யப்பட்டது.

அமெரிக்காவில், சிறிது காலம் வரைமேமுதல் நாள், 'குழந்தைகள் நல நாளாகக் கொண்டாடப்பட்டது. சிலர், ''முதலாளி ஒழிப்பு நாள்'' என்றும் கொண்டாடி வந்தார்கள். அன்று அமெரிக்காவில் மட்டும் கொண்டாடப்பட்ட இந்த நாள், இன்று உலகப் பெரும் நாளாகத் திகழ்கிறது.

## உரிமை காக்கும் நாள்

தொழிலாளர்களின் உரிமைகளைக் காக்கும் நாளாக மே நாள் விளங்குகிறது. எந்த ஓர் அரசியல் கட்சிக்கும், சொந்தமானதல்ல இந்த நாள்! சாதி, சமயம், நாடு, மொழி என்ற வேறுமையின்றி அனைத்து நாட்டவராலும் கொண்டாடப்படும் இந்தமேநாள் அனைத்துலக விழா நாள் என்பதில் ஐயமில்லை.

தொழிலாளர்களைப் பெருமைப் படுத்தும் வகையில், மே நாளை, சம்பளத்தோடு கூடிய விடுமுறை நாளாக்கியுள்ளது தமிழ்நாடு அரசு.

# இவர் ஒரு சாதனையாளர்



இராமநாதபுர மாவட்டத்தில் வேதாளை கிராமத்திற்கு அருகில் தாழையடித் தோப்பு என்ற பகுதியில்ஒரு வீட்டில் மின்விளக்கு எரிந்து கொண்டிருக்கிறது. வீட்டிலே மின்விளக்கு எரிவதில் வியப்பு என்ன இருக்கிறது என்று நீங்கள் கேட்கலாம்.

மின்சாரத்தின் மூலமோ, ஜெனரேட்டரின் மூலமோ அந்த விளக்கு எரியவில்லை. ஏரோ ஜெனரேட்டர் என்னும் ஒரு காற்றாலையின் மூலம் கிடைக்கும் சக்தி 6 வோல்ட் சக்தி படைத்த ஒரு மின்கலத்தில் (பேட்டரி) சேமித்து வைக்கப்பட்டு, ஓர் ஊக்குவிப்பானின் மூலம் 220 வோல்ட் சக்தியாக மாற்றப்பட்டு, அதன் உதவியால் அந்த விளக்கு எரிகிறது என்றால், இது வியப்புக்குரிய செய்தி இல்லாமல் வேறென்ன?

அந்த அதிசயத்தை உருவாக்கியவர் - 50 வயதைக் கடந்த சுறுசுறுப்பு மிகுந்த அலிமனிக்பன் என்னும் அதிசயமனிதர் ஆவார்.

லட்சத்தீவுகளின் தென்கோடியில் இருக்கும் மினிகாய்த் தீவைச் சேர்ந்த இவர், பழங்குடி வகுப்பில் வந்தவர். பள்ளியில் பயிலாத இவர் அனுபவக் கல்வியை, வேண்டிய அளவு கற்றிருக்கிறார். அதிலும் விஞ்ஞான அறிவை இவர் ஏராளமாகப் பெற்றிருக்கிறார்.

1960 ஆம் ஆண்டில் இராமநாதபுரத்தின் கடற்கரைப் பகுதியான மண்டபத்திற்கு வந்து சேர்ந்த இவர், கடுமையாக உழைத்து-முன்னேற்றம் பெற்றார். 1984ல் வேதாளை கிராமத்தில் 2 ஏக்கர் பரப்புள்ள நிலத்தை விலைக்கு வாங்கி, அதில் பல விஞ்ஞான அதிசயங்களை உருவாக்கியுள்ளார்.

குறிப்பாக, கடல் அரிப்பினைத் தடுப்பதற்கு ஓர் உத்தியைக் கையாண்டிருக்கிறார் இவர். கடற்கரைப் பகுதியில் காற்று அதிகமாக வீசுவது வாடிக்கை. அப்போது கரையில் உள்ள மணல், காற்றினால் வேறொரு தரைப் பகுதிக்கு அடித்துச் செல்லப்படுவதும் உண்டு. அதன் காரணமாகக் கடற்கரையில் பள்ளங்கள் உருவாவதும், அந்தப் பள்ளங்களில் கடல்நீர் சூழ்ந்து கொள்வதும் உண்டு. அதனால் நீர்ப்பகுதி அதிகமாகி நிலப்பகுதி குறைந்துவிடும் அபாயம் ஏற்படுகிறது. இந்த இடர்ப்பாட்டைத் தடுப்பதற்கு அலிமனிக்பன் அரியதோர் உத்தியைக் கையாண்டு வெற்றி பெற்றிருக்கிறார்.

கடற்கரையை ஒட்டியுள்ள இவரது நிலத்தில் கடற்பனைக்கொடி என்னும் ஒருவகைத் தாவரத்தை வளர்த்து நிலமெங்கும் அதனைப் படரவிட்டார். அந்தத் தாவரம் நிலமெங்கிலும் பரவியிருப்பதால் அங்கிருக்கும் மணல், கடற்காற்றினால் அடித்துச் செல்ல முடியாமல் இருந்த இடத்திலேயே வியாபித்து விடுகிறது. அதனால் கடல்அரிப்பு முழுமையாகத் தவிர்க்கப்படுகிறது. இது அவரது விஞ்ஞான ஆய்வுகளில் ஒன்று.

இதுமட்டுமா? இன்னும் எத்தனையோ விஞ்ஞானச் சாதனைகளை இவர் உருவாக்கியிருக்கிறார்.


0.25 குதிரைச் சக்தியுள்ள ஸ்ப்ரேயர் இன்ஜின் ஒன்றினை இணைத்து, பெட்ரோலின் சக்தியால் இயங்க வைத்து, அதனை சைக்கிள் சக்கரத்துடன் பொருத்தி, மோட்டார் வாகனம் போல் சைக்கிளை ஓடவிடுகிறார். இப்படிப்பட்ட சைக்கிளைப் பயன்படுத்தி இராமநாதபுரத்திலிருந்து டெல்லி வரை சென்று திரும்பியிருக்கிறார்.

பொதுவாக, மின்சாரத்தினால் அல்லது ஜெனரேட்டரின் சக்தியால் குளிர்பதனப்பெட்டி இயங்கி வருகிறது. ஆனால் மண் எண்ணெய்யினால் குளிர்பதனப்பெட்டி ஒன்றை இயங்கச் செய்திருக்கிறார் இந்தச் சாதனையாளர்.

மினிகாய்த் தீவிலிருந்து கொண்டு வரப்பட்ட விதைகளைப் பயன்படுத்தி புதிய மாதிரி தாழைமரம் ஒன்றை வளர்த்து வருகிறார்.

பென்மனுஸ் லீவம் என்ற செடியை வளர்த்து அதன்மூலம் ஓலைப்பாய்களைத் தயாரித்து வருகிறார்.

இப்படிப் பற்பல சாதனைகளைப் படைத்துச் சரித்திரம் படைக்கிற இவரை ஒவ்வொருவரும் பின்பற்றினால் நமது நாட்டின் சாதனைப் பட்டியல் நீளுமல்லவா?



**இரா. பா. கார்மேகம்,**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,**
**இராமகாதபுரம் மாவட்டம்.**



# சமுதாயத்திற்குப் புத்துருவம் தருபவர்கள் தொழிலாளர்கள்

நம்நாடு வெப்பமுள்ள நாடு! இவ்வளவு வெப்பத்தையும் தாங்கிக்கொண்டு வேர்வை ஆறாகப் பெருகியோட உழைப்பவர்கள் இங்கு இருக்கிறார்கள். இயற்கை வளத்தைப் பயன்படுத்தித் தொழில் திறனை உண்டாக்குபவர்கள், தொழிற்சாலையை நடத்துபவர்கள் இருக்கிறார்கள்.

திட்டமிட்டுச் செயலாற்றினால் 15 ஆண்டுகளில் ஜப்பான் நாட்டைவிடச் சிறப்பாக நம் நாடு திகழும் என்பதில் யாரும் ஐயப்பட வேண்டாம்!

இப்பொழுது எங்குப் பார்த்தாலும் ஆலைகள் எழ ஆரம்பித்துவிட்டன. தொழிலாளர்கள் இந்தச் சமுதாயத்திற்குப் புது உருவத்தைக் கொடுக்கிறார்கள்.

தொழிலாளர் உரிமைகளையும், அவர்கள் நலனையும் எவ்வளவுக்கெவ்வளவு பாதுகாக்கின்றோமோ, அவ்வளவு விரிந்த அளவில், தொழில் வளம் பெருகும். நாட்டுடைமை சேதமாகாமல் செயல்படுமானால், தொழிலைப் பெருக்கலாம். தொழிலாளர் தங்கள் வாழ்வு ஒளிவிடும் அளவு உழைக்க வேண்டும்.

முதலாளிகளுக்கு நான் ஒன்று சொல்லிக் கொள்வேன்.

நன்றாக ஓடிய பந்தயக் குதிரை கொஞ்சம் நொண்டினால்கூட சுட்டுவிடுவார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அதுபோலத் தொழிலாளர் நலிவடைந்தால் அவர்களை விரட்டிவிடக்கூடாது.

சுடப்பட்ட குதிரை இறந்தபிறகு அதன் குட்டிகளை அடுத்தவர் யாராவது வாங்கி வளர்த்துக் கொள்வார். ஆனால், நலிவடைந்த தொழிலாளி மாள நேர்ந்தால், அவன் குடும்பத்தை யார் காப்பாற்றுவது?

அமெரிக்காவிலிருந்தும் ஜப்பானிலிருந்தும் இயந்திரம் தருவிக்கலாம். ஆனால், மனித இயந்திரங்களைத் தருவிக்க முடியாது. அந்த இயந்திரத்தையும் மனித இயந்திரம் தான் செய்கிறது. நூறில் ஒரு பங்காவது பாட்டாளி நலனில் அக்கறை காட்ட வேண்டும்.

—பேரறிஞர் அண்ணா

தொழிலாளர் சமூகம், நல்ல பலம் பெற்றால் அவர்கள் ஈடுபட்டுள்ள பணிகளில் மேலும் தெம்போடு உழைப்பார்கள். மனமும் உடலும் மகிழ்ச்சியாக இருந்தால் உற்பத்தியின் அளவு அதிகரிக்கும்; செல்வம் வளரும்.

எனவே, தொழிலாளர் நலனுக்காக எவ்வளவு செலவிட்டாலும், அது சமூகத்துக்கு, ஒன்றுக்கு ஒன்பதாகத் திரும்பி வரும். தொழிலாளருக்காகச் செலவிடப்படும் தொகை ஒரு நாளும் நட்டக் கணக்கில் கணக்காகி விடுவதில்லை.

இன்று மனிதனைக் காட்டிலும் திறமையாகப் பணியாற்றும் நவீனக் கருவிகளைப்பற்றிக் கூறுகிறார்கள். அதையும் மனிதன் தான் செய்தான் என்பதை மறந்து விடலாகாது.

உணர்ச்சியில் உந்தப்படுபவன் மனிதன். அந்த மனிதன் அருமையான இயந்திரம். அவனுடைய இதயத்தில் வலி - அவனது கண்களில் கண்ணீர் - அவனது உடலில் வாட்டம் காணப்பட்டால், அந்த இயந்திரத்திடமிருந்து முழுப் பயனும் பெறமுடியாது.

அந்த மனிதப் பிறவியின் மாண்பினை உணர்ந்து அவனது வலியினையும் வாட்டத்தையும் போக்கிடக் கிடைத்துள்ள நல்ல வாய்ப்பு இது. அந்த மனித இயந்திரத்தினைக் கவனித்தால், அது உற்பத்திப் பெருக்கத்திற்குத் துணை நிற்கும்.

தொழிலாளர் வாழ்வில் நிம்மதி ஏற்பட்டால்தான் தொழில் நேர்த்தியாக இருக்கும். குறைப்பட்ட மனத்தோடு அவர்கள் வேலை செய்தால் தொழிலில்நேர்த்தியிருக்காது. தரம் இருக்காது - பயனும் கிடைக்காது.

காலையில் எழுந்தவுடன் பச்சைப் பசேலென்ற காட்சியும், பூங்காற்றும் வீசுகின்ற இயற்கையோடு ஒட்டி வாழ்தலே உடலுக்கு நலன் பயக்கும்என்றுஉடற்கூறுநிபுணர்கள் கூறுகின்றனர். ஆனால், நாட்டிலே இப்போது நல்ல வயல்களெல்லாம் பாங்கானகட்டடங்களாகி விடுகின்றதைப் பார்க்கிறோம். தொழில்கள் அதிகமாகி வளரும்போது புதிய நோய்களும் உண்டாவதாக மருத்துவர்கள் கூறுகின்றனர். ஆனால், இந்தக் காரணங்களால், நாம் தொழில் வளர்ச்சியை விட்டுவிட முடியாது. தொழில் வளர்ந்தால் தான் பொதுச் செல்வம் ஏற்படும் - அதன் வாயிலாகத் தனிப்பட்ட மனிதன் வாழ்விலும் வளமுண்டாகும்.

தொழிலாளரது வாழ்வானது பாழ்நிலமாக அல்லாமல், பசுமையோடு பூங்காற்று வீசும் தோட்டமாக இருக்க வேண்டும்.

## புது வாழ்வுதரும் புத்தக சாலை!

மனிதரெலாம் அன்புநெறி காண்ப தற்கும்
மனோபாவம் வானைப்போல் விரிவ டைந்து
தனிமனித தத்துவமாம் இருளைப் போக்கிச்
சகமக்கள் ஒன்றென்ப துணர்வ தற்கும்
இனிதினிதாய் எழுந்தஉயர் எண்ண மெல்லாம்
இலகுவது புலவர்தரு சுவடிச் சாலை
புனிதமுற்று மக்கள்புது வாழ்வு வேண்டில்
புத்தக சாலை வேண்டும் நாட்டில் யாண்டும்!

—பாவேந்தர் பாரதிதாசன்





**பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்திற்கு விருது**

அனைத்திந்திய அளவில், புறநகர் போக்குவரத்து இயக்கத்தில்-1987-88-ஆம் ஆண்டில் முதன்மையான கழகமாகப் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் தேர்ந்தெடுக்கப்பட்டது. அதற்கான விருது 31-3-89 அன்று, மாண்புமிகு மத்திய தொழில்துறை அமைச்சர் திரு. ஜெ. வெங்கல்ராவ் அவர்களால் வழங்கப்பட்டது.

புதுடில்லியில் அளிக்கப்பட்ட அந்த விருதைப் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநர் திரு என். வெங்கட கிருஷ்ணன் பெற்றுக் கொண்டார்.

இந்த வகையில், இக்கழகம் இந்தப் பரிசை இரண்டாவது தடவையாகப் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர், திரு. மு. கண்ணப்பன் அவர்கள் அந்த விருதைக் கண்டு மகிழ்ந்து, நிர்வாக இயக்குநரைப் பாராட்டினார்.

# நிதிநிலை அறிக்கை மகிழ்ச்சியைத் தந்தது

1.4.89 இதழில், நிதி நிலை அறிக்கை முழு விவரம் படித்தேன். மகிழ்ச்சியைத் தந்தது.

-ஜின்னா,
ஆர்.கே.எஸ். ஷம்சுகனி
டி. மாரியூர்.

மாண்புமிகு கலைஞரின் வரவு செலவுத் திட்டப் பேருரையை அப்படியே பிரசுரித்துள்ளதால், அவரின் பேச்சைக் கேட்டது போலிருந்தது.

செ.மு.வேடியப்பன்,
ஈச்சம்பாடி.

தமிழரசு ஒவ்வொரு இதழும் ஒரு பொன்னேடு. படித்துப் பாதுகாக்க வேண்டியவை.

தி.பாலமுரளி,
தி.சுரேந்திரன்,
எஸ்.அக்ரகாரம்.

'வரவேற்பு' சிறுகதைக்கு வரவேற்பு. மாணவர் பக்கம் வழக்கம் போல் இனிமை.

-மாவேந்தன்,
பரமன்குறிச்சி.

முதல்வர் கலைஞர் அவர்கள் சமர்ப்பித்த நிதிநிலைஅறிக்கைவிவரங்களை முழுமையாகத் 'தமிழரசு' இதழில் படித்தபோது நேரிலேயே அவர் உரையைக் கேட்டது போன்ற உணர்வு ஏற்பட்டது.

எம்.பி.இளங்கோ,
மேட்டுப்பாளையம்.

இந்தியப்பிரதமர் - தமிழக முதல்வர் அட்டைப்படம் அருமை.

க. வெற்றிவேல்,
உதயமார்த்தாண்டபுரம்

வெ.சங்கரநாராயணன்,
திருவண்ணாமலை-1.
க. சம்பத்குமார்,
விழுப்புரம்.

**பார்த்தோம் - படித்தோம்**



# அண்ணல் அம்பேத்கார்

கீழ்ச்சாதி, மேல்சாதி என்ற பாகுபாடு நீங்க காந்தியார் பெரிதும் பாடுபட்டார். 'அரிசனங்கள்' என்றால் தெய்வத்தின் பிள்ளைகள் என்று அவர் கூறினார். அவர்கள் ஆலயப் பிரவேசம் செய்ய ஒரு போராட்டமே நடத்தி வெற்றி கண்டார்.

எம்மதமும் சம்மதமே என்ற கொள்கை மிகவும் உயர்ந்தது ஆகும். மேலவர் கீழவர் என்பது அவரவர் பிறப்பால் அமைவதில்லை; அவரவர் அறிவை வைத்தே வரையறுக்கப்பட வேண்டும் என்பார்கள் அறிஞர்கள். இதைத் தெளிவு படுத்தத்தான் ''சாதிகள் இல்லையடி பாப்பா'' என்று பாடினார் பாரதியார்.

ஒருவரது பிறப்பை வைத்தே மேலோர், கீழோர் என்று கூறுவது தவறு. அவரவர் அறிவுத் திட்டத்தை வைத்தே இதைக் கணிக்க வேண்டும்.

முள் நிறைந்த கள்ளிக் காட்டில் தோன்றினாலும் அகில் அதிகம் மதிக்கப்படுகிறது.

உப்புக் கரிக்கும் கடல் நீரில் கிடந்தாலும் முத்து உயர்வானதாக எண்ணப்படுகிறது.

சேற்றில் பிறந்தாலும் செந்தாமரை சிறப்பாகப் பேசப்படுகிறது.

1891-ஆம் ஆண்டில், ஏப்ரல் 14 ஆம் தேதி மராட்டிய மாநிலத்தில் உள்ள அம்பாவதி என்ற சிற்றூரில் பிறந்தவர் அவர். தந்தையார் பெயர் ராம்ஜீ சக்பால், தாயார் பெயர் பீமபாய். பெற்றோர் அவருக்கு வைத்த பெயர் பீமராவ் என்பதாகும்.

பதினான்காவது பிள்ளையாகப் பிறந்த அவர், பள்ளியில் சேர்க்கப்பட்டார்.

தீண்டாமைக் கொடுமை அந்தப் பள்ளியிலும் தலைவிரித்தாடியது. உயர்சாதி என்று அப்போது கருதப்பட்ட சாதியில் பிறந்த பிள்ளைகள் மட்டுமே பலகையில் உட்காருவர். கீழ்ச்சாதி என்று கருதப்பட்ட சாதியில் பிறந்த பிள்ளைகள் வெறும் தரையில்தான் உட்காருவர். தாழ்த்தப்பட்ட சாதியில் பிறந்த பீமராவும் தரையிலேயே அமர்த்தப்பட்டார்.

ஆசிரியரோ, உயர் சாதிப் பிள்ளைகளோ தாழ்த்தப்பட்ட வகுப்புப் பிள்ளைகளைத் தொடக்கூடக் கூசுவார்கள். அவர்களுடைய பாட நூல், எழுதுகோல் ஆகியவற்றைக் கூடத் தொடமாட்டார்கள்.

பீமராவ் தனது பள்ளியில் இருந்த இந்த நிலையை வெறுத்தார். இதனால் கல்வியிலும் அவரால் கவனம் செலுத்த முடியவில்லை.

இதுபோன்ற நேரத்தில் அந்தப் பள்ளிக்கு அம்பேத்கார் என்றொரு ஆசிரியர் வந்து சேர்ந்தார். அவர் பிறப்பால் அந்தணர், ஆனால், அப்போதிருந்த மற்ற ஆசிரியர்களைப் போலத் தாழ்த்தப்பட்ட சாதி மாணவர்களை அவர் அலட்சியம் செய்யவில்லை.

பீமராவ் தாழ்ந்த சாதியினரானாலும் அவரை மிகவும் அன்போடு

## மேலான மே நாள்!

அகில உலகமெங்கும் அகமகிழ்ந்து கொண்டாடப்படும் இம் மே தின விழாவை, கட்சி-கருத்து வேற்றுமை இன்றி அனைவரும் கொண்டாடுவதைப் பற்றிப் பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.

பாட்டாளிகள் போராட்ட முயற்சியின் இடையிலே ஓர் நாள், ஒய்வு பெற்று நின்று, சென்றகால-வருங் காலக் கணக்கைப் பார்க்கும் திருநாளே இம் மே நாள். சென்ற காலங்களில் மகத்தான வெற்றிகளைக் காண முடியாவிட்டாலும், கண்ட சிறு சிறு வெற்றிகளை நினைந்து, மகிழ்ந்து, உள்ளத்தை ஊக்குவித்துக் கொள்ளவும், வருங்காலத்தில் ஆற்றவேண்டிய செயல்களை எண்ணிச் செயலாற்றும் நெறியிலே உறுதி கொள்ளவும் இம் மே நாள் பயன்[illegible]கின்றது.

—பேரறிஞர் அண்ணா.





## தியாகராயரும், செய்தித் தாள்களும்

சர் பிட்டி தியாகராயர் ஆங்கிலம், தமிழ், தெலுங்கு ஆகிய மூன்று மொழிகளிலும் தினச் செய்தித்தாள்களை அச்சிட்டு வெளியிட்டார்.

'ஜஸ்டிஸ்' என்ற பெயரில் ஆங்கில செய்தித் தாளை 1917 பிப்ரவரி 26 செவ்வாய்க்கிழமை அச்சிட்டு வெளியிட்டார். அதன் பதிவு எண். எம். 1263. 'ஜஸ்டிஸ்' என்ற ஆங்கில இதழின் பெயரின் காரணமாக சௌத் இந்தியன் லிபரல் பெடரேஷனானது ஆங்கிலத்தில் ''ஜஸ்டிஸ் பார்ட்டி'' என்றும், தமிழில் ''நீதிக்கட்சி'' என்றும் அழைக்கப்படலாயிற்று.

1885-இல் ரெவரெண்ட் ஜான் ரத்தினம் அவர்கள் தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட மக்களின் நலன் கருதி ''திராவிட பாண்டியன்'' என்ற ஒரு தமிழ்ச் செய்தித் தாளை வெளியிட்டார். அதே நோக்கில்தான் சர். பிட்டி. தியாகராயரும் தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட மக்களின் நலன் கருதி 1917 ஜூன் 1 சனிக்கிழமை 'திராவிடன்'' என்ற பெயரில் தமிழ் தினச் செய்தித் தாளை அச்சிட்டு வெளியிட்டார். அதன் பதிவு எண்.எம். 1279.

1885-இல் தெலுங்கு மொழியில் 'ஆந்திர பிரகாசிகா' என்ற செய்தித் தாள் வெளிவந்தது. சர். பிட்டி. தியாகராயர் அதே தெலுங்கு செய்தித் தாளை 1917 ஜூன் 10 திங்கட்கிழமையிலிருந்து அச்சிட்டு தினச் செய்தித் தாளாக வெளியிட்டார். அதன் பதிவு எண். எம். 1280.

நடத்தினார். தான் கொண்டுவரும் உணவையும் அவருக்கு உண்ணக் கொடுத்தார். படிப்பதில் உற்சாகம் ஊட்டினார்.

ஆசிரியர் அம்பேத்கார் காட்டிய அன்பே, சிறுவன் பீமராவை அக்கறையோடு படிக்க வைத்தது. தான் பெற்ற முன்னேற்றத்திற்குக் காரணமான அவர் பெயரையும் சேர்த்துத்தான் இவர் தன்பெயரை 'பீமராவ் ராம்ஜி அம்பேத்கார்' என்று மாற்றிக்கொண்டார். நாளடைவில் அம்பேத்கார் என்ற பெயரே நிலைத்தது.

சதாரா என்ற இடத்தில் அம்பேத்காரும் அவர் தமையனாரும் படித்துக் கொண்டிருந்தனர். அப்போது அவர்கள் தந்தை கோரிக்கேன் என்ற ஊரில் வேலை பார்த்துவந்தார்.

ஒருநாள் அம்பேத்காரும், அவரது தமையனாரும் தந்தையைப் பார்க்கப்புறப்பட்டனர். ரயில்மூலம் மாசூரில் போய் இறங்கினார்கள். அங்கிருந்து கோரிக்கேனுக்குப் போக ஒரு மாட்டு வண்டியில் புறப்பட்டனர்.

போகிறவழியில், இவர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் என்று தெரிந்துகொண்ட வண்டிக்காரர் மிகவும் கோபப்பட்டார். தன் வண்டியின் தூய்மையே கெட்டு விட்டதாகச் சொல்லி வண்டியைக் குடை சாய்த்து அவர்களை கீழே உருட்டிவிட்டார்.

அப்போது நிதானம் இழக்கவில்லை அம்பேத்கார். பேசியது போல் இரண்டு பங்கு வாடகை தருவதாகவும், தம்மை ஏற்றிச் செல்லுமாறும், வண்டிக்காரரிடம் கூறினார். வண்டிக்காரர் சிறிது யோசித்து விட்டுப் பிறகு சம்மதித்தார்.

ஆனால், அவர்களை வண்டி ஓட்டச் சொல்லிவிட்டு, தன்சாதிப் பெருமை கெட்டுவிடக் கூடாதே என்று வண்டியின் பின்னால் நடந்தே சென்றார் அவர்.

இன்னொரு சமயம் தாகமுற்று நீர்கேட்டார் அம்பேத்கார். அவர் தாழ்த்தப்பட்டவர் என்பதால் யாரும் நீர்தர மறுத்துவிட்டார்கள். தாகம் தாளாமல் குளத்தில் இறங்கித் தண்ணீர் குடித்தார் அம்பேத்கார். இது கண்ட அந்த ஊர்ச் சாதி இந்துக்கள் கோபமுற்று அவரைப் பலமாகத் தாக்கிவிட்டனர்.

இந்த இரண்டு சம்பவங்களும் அம்பேத்கார் நெஞ்சில் ஆழப்பதிந்தன. எனவே, தீண்டாமைக் கொடுமையைப் பூண்டோடு அழிக்க உறுதி பூண்டார்.

தாழ்த்தப்பட்டோர் அவல நிலை பற்றிக் காந்தியாரைக் கண்டு பேசினார் அம்பேத்கார். காந்தியார் அவரது அறிவாற்றலைப் பெரிதும் பாராட்டினார். 1947-ல் ''தீண்டாமை பெருங்குற்றம்; அதைக் கடைப்பிடிப்பவர்கள் குற்றவாளிகள்' என்று அறிவித்தது அரசியல் அமைப்புச்சபை. அம்பேத்கார் ஓரளவு நிம்மதிப்பட்டார்.

1947-ல் ஜவகர்லால் நேருவின் அமைச்சரவையில் சட்ட அமைச்சராகப் பதவியளித்துச் சிறப்பிக்கப்பட்டார் அம்பேத்கார். இந்திய அரசியல் சட்டத்தை நிர்ணயிக்க ஒரு குழு நியமிக்கப்பட்டது. இதன் தலைவராகவே அம்பேத்கார் நியமிக்கப்பட்டார்.

அந்தக் குழுவை உறுப்பினர்கள் பல காரணங்களால் ஒதுக்கியிருந்தனர். ஆனால், அம்பேத்கார் தனித்தே நின்று அரும்பாடுபட்டு இந்திய அரசியல் சட்டத்தை இயற்றித்தந்தார்.

அம்பேத்காருக்கு அமெரிக்காவில் உள்ள கொலம்பியா பல்கலைக் கழகம் சிறப்புப் பட்டம் அளித்தது. நம் இந்திய நாட்டிலுள்ள உஸ்மானியா பல்கலைக்கழகம், இலக்கியத்தில் டாக்டர் பட்டம் அளித்துச் சிறப்பித்தது.

அழியாப் புகழுக்குச் சொந்தக்காரரான டாக்டர் அம்பேத்கார் 1956-ஆம் ஆண்டு டிசம்பர் 6-ஆம் நாள் உயிர்நீத்தார்.

தாழ்த்தப்பட்ட வகுப்பில் பிறந்தாலும், தன்னம்பிக்கையோடு படித்து முன்னேறிய டாக்டர் அம்பேத்கார் பெருமை அளவிடற்கரியதாகும்.



# பெண்களுக்கு சொத்துரிமை

பால் அடிப்படையில் பெண்களுக்குக் காட்டப்பட்ட பாரபட்சம் நீக்கப்படும் வகையிலும் மகளிர் மனம் மகிழும் வகையிலும் மறுமலர்ச்சிச் சட்டம் ஒன்று 13.4.89 அன்று சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்பட்டது.

பெண்களுக்குச் சொத்தில் சம உரிமை அளிக்க வகை செய்யும் இந்தச் சட்ட முன்வடிவை, மாண்புமிகு சட்ட அமைச்சர் திருஎஸ்.ஜே. சாதிக்பாட்சா அவர்கள் முன்மொழிந்தார்.

சட்ட முன்வடிவில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இந்தச் சட்டம் 1989-ஆம் ஆண்டு இந்து வழிமுறை உரிமை (Succession) தமிழ்நாடு திருத்தச் சட்டம் என வழங்கப்படும்.

இது தமிழ்நாடு மாநிலம் முழுவதையும் அளாவி நிற்கும்.

இந்தியக் குடியரசின் 40ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டப் பேரவையால் இயற்றப்படும் இந்தச் சட்ட முன் வடிவு, தமிழ்நாடு அரசு இதழில் முதன்முதலாக வெளியிடப்படும் தேதியிலிருந்து நடைமுறைக்கு வந்து விட்டதாகக் கொள்ளப்படும்.

சட்டத்தின் முன்பு சமத்துவத்தை ஓர் அடிப்படை உரிமையாக இந்திய அரசு அமைப்பானது சாற்றியுள்ளமையாலும், பெண்பாலாய் இருக்கிற காரணத்தினால் மட்டுமே கூட்டுஉடைமை உரிமையில் பங்கு கொள்வதிலிருந்து மகளை விலக்கி வைப்பதாவது அந்த அடிப்படை உரிமைக்கு முரணாக இருக்கின்றமையாலும், மகளை அவ்வாறு விலக்கி வைப்பதானது சமூகத்திற்குப் பெரும் கேடு விளைவிக்க வல்ல வரதட்சிணை முறையையும் அதனோடு சேர்ந்த சமூகக் கேடுகளையும் உருவாக்குவதற்கு வழிவகுத்துள்ளமையாலும், ஆக்கமுறையான நடவடிக்கைகளின் மூலம் கொடுமையான இந்த வரதட்சணை முறை ஒழிக்க வேண்டியுள்ளமையாலும் ,அதே நேரத்தில் இந்து சமூகத்தில் பெண்களின் நிலையை அது சீராக்கும் என்பதாலும் இந்தியக் குடியரசின் 40-வது ஆண்டின் தமிழக மாநிலச் சட்டமன்றப் பேரவையில் சட்டம் இயற்றுவதற்காக இந்தச் சட்ட முன்வடிவு கொண்டு வரப்படுகிறது.

1956-ஆம் ஆண்டு இந்து வழிமுறை உரிமைச் சட்டமானது (மையச் சட்டம் 30/1956) உயில் இல்லாத நிலையில் வழிமுறை உரிமையைப் பற்றிய இந்துக் சட்டத்தைத் திருத்திக் தொகுக்க விழைகின்றது.

தற்போது இந்து மிகிதாச்சாரச் சட்டத்தின் கீழ் மகள்கள் கூட்டுடைமை உறுப்பினர்களாக இல்லை. அதனால் கூட்டுடைமைச்சொத்தில் பாகப்பிரிவினை கோருவதற்கு அவர்களுக்கு உரிமை தகுதிஇல்லை. அவ்வாறு மகள்களை விலக்கி வைத்திருப்பதாவது, சமூக ரீதியாகப் பெருங்கேடு விளைவிக்கவில்லை. வரதட்சணை முறையையும் அதனோடு சேர்ந்த சமூகக் கேடுகளையும் உருவாக்குவதற்கு வழி வகுக்கிறது. ஆக்க முறையான வழிகளின் மூலம் இந்தத் தீமைகளை ஒழிப்பதற்காகவும் அதே நேரத்தில் இந்து சமூகத்தில் பெண்களின் நிலைமைகளை அது சீராக்கும் பொருட்டும் மேற்சொன்ன சட்டத்தைத் தக்கவாறு திருத்துவதன் மூலம் அரசமைப்பு வலியுறுத்துகிற சமத்துவத்தை எய்துவதற்காக வேண்டி ஓர் இந்து கூட்டுக் குடும்பத்தில், மகன் ஒருவன் பெற்றிருப்பதன் மூலம் அதே உரிமைகளை ஓர் இந்து மகளுக்கும் வழங்கக் கருதப்பட்டுள்ளது. கருதியுள்ள திருத்தங்கள் இந்த திருத்தச் சட்டத்தின் தொடக்கத் தேதிக்கு முன்பு திருமணமாகியுள்ள மகள்களுக்குப் பொருந்தாததாகச் செய்யப்பட்டுள்ளன. கருதியுள்ள 29எ பிரிவின் (11) ஆம் கூறின் வகை முறைகள் தகுதியுள்ள இந்தத் திருத்தச் சட்டத்தின் தொடக்கத்,தேதிக்கு முன்பு செய்து கொள்ளப்பட்ட ஒரு பாகப்பிரிவினைக்குப் பொருந்தாது.

# மூன்றாம் வகுப்பிலிருந்து ஆங்கிலப்பாடம் கற்பிக்கப்படும்.

1948-49 ஆம் ஆண்டிலிருந்து சில காலம் ஆங்கிலப் பாடம் ஆறாம் வகுப்பிலிருந்து மட்டும் கற்பிக்கப்பட்டது. அதன் பின்னர் கீழ்க்கண்டவாறு படிப்படியாக, கீழ் வகுப்புகளில் ஆங்கிலப் பாடம் அறிமுகப்படுத்தப்பட்டது:

1. 1960-61-ஆம் ஆண்டில் ஐந்தாம் வகுப்பு.
2. 1962-63-ஆம் ஆண்டில் நான்காம் வகுப்பு.
3. 1963-64-ஆம் ஆண்டில் மூன்றாம் வகுப்பு.

பின்னர், அரசு ஆணை எண்.79 கல்வி நாள் 25.1.88-இல், 1988-89ஆம் கல்வியாண்டிலிருந்து ஆங்கிலப் பாடத்தைப் பள்ளிகளில் முதலாம் வகுப்பிலிருந்து பேச்சு மொழியாகக் கற்றுத் தருவதற்கு அரசு ஆணையிட்டது.

முதலாம் வகுப்பிலிருந்தே ஆங்கிலப் பாடத்தைப் பள்ளிகளில் கற்பிக்க வெளியிடப்பட்ட ஆணையினை அரசு மறு பரிசீலனை செய்தது. முதலாம் வகுப்பிலிருந்தே ஆங்கிலப் பாடத்தைக் கற்பிப்பது இளஞ்சிறார்களுக்குப் பெருஞ்சுமையை ஏற்படுத்தும் என்பதால், ஜனவரி 1988-க்கு முன்பு அமலிலிருந்தவாறு மூன்றாம் வகுப்பிலிருந்து மட்டும் பள்ளிகளில்ஆங்கிலப் பாடத்தைக் குறிப்பதற்கு அரசு முடிவெடுத்தது. அதன்படி, 1989-90ஆம் கல்வியாண்டு முதல், பள்ளிகளில் மூன்றாம் வகுப்பிலிருந்து மட்டும் ஆங்கிலப் பாடம் கற்றுத் தரப்படவேண்டும் என அரசு ஆணையிடுகிறது.

இவ்வாணை அனைத்து மேலாண்மையின் கீழ் உள்ள பள்ளிகள், பள்ளிக் கல்வித்துறையின் கீழ் உள்ள அரசுப் பள்ளிகள், உள்ளாட்சித் துறை, ஆதிதிராவிடர், மற்றும் பழங்குடியினர் நலத்துறை பிற்பட்டோர் நலத் துறை மற்றும் சமூக நலத் துறையின் கீழ் நடத்தப்படும் பள்ளிகள் எல்லாவற்றிற்கும் பொருந்தும்.





# சென்னைப் பெருநகர வளர்ச்சிக்குழுமம் அலுவலகக் கட்டடத் திறப்பு விழா

சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் அலுவலகக் கட்டடமான 'தாளமுத்து-நடராஜன்' மாளிகையை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், 14-4-89 அன்று சென்னையில் திறந்து வைத்தார்.

விழாவிற்கு, மாண்புமிகு நகர்ப்புற வளர்ச்சி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் திரு. எஸ். தங்கவேலு தலைமை தாங்கினார். நகர்ப்புற வளர்ச்சித்துறை செயலாளர் திரு. சி. செல்லப்பன் வரவேற்புரையாற்றினார்.

160 அடி உயரம் கொண்டதும், 50 மனைகள் பரப்பளவு கொண்டதும், 12 மாடிகளைக் கொண்டதுமான இக்கட்டடம் 15 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டதாகும். திறப்பு விழாவில்-1974இல் துவக்கப்பட்ட சென்னைப் பெருநகர வளர்ச்சிக்குழுமத்தின் தோற்றம், வளர்ச்சி ஆகியவை பற்றிய விளக்க அறிக்கையைத் தலைமைப் பொறியாளர் திரு. எஸ். குமரேசன் படித்தார்.

எழும்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. பரிதி இளம்வழுதி, இவ்விழாவில் பேசும்போது குறிப்பிட்டதாவது;

''இந்த மாபெரும் மாளிகைக்குத் தாளமுத்து, நடராஜன் ஆகிய இருவரின் பெயரைச் சூட்டியதன் மூலம், தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களின் மதிப்பை நமது முதல்வர் அவர்கள் உயர்த்தியிருக்கிறார். டாக்டர் அம்பேத்காரின் பெயர் ஒரு மாவட்டத்திற்கு வைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்று, அடுத்து பிரியவிருக்கும் மாவட்டத்திற்கு அம்பேத்கார் பெயர் வைக்கப்படும் என்றும் முதல்வர் அறிவித்திருக்கிறார். இதற்காகவெல்லாம் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினரின் சார்பில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.''

நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் அ. கலாநிதி பேசுகையில்-''இந்தப் பெருநகர் வளர்ச்சிக்குழுமம், முன்பு, மாண்புமிகு கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது துவக்கி வைக்கப்பட்டதுதான். அவரது திருக்கரத்தால் துவக்கி வைக்கப்படும் எதுவுமே சோடை போனதில்லை என்பதற்கு இந்த மாபெரும் கட்டடமே தக்க சான்று'' என்று குறிப்பிட்டார்.

அரசு தலைமைச் செயலாளர் திரு. எம். எம். ராஜேந்திரன் பேசும்போது-''கிராமப்புற மக்கள் பெருமளவில் நகரத்தை நோக்கி வந்துகொண்டிருக்கிறார்கள். . இந்தியாவிலேயே, இப்படிப்பட்ட நிலையில் தமிழகம் இரண்டாவது இடத்தை வகிக்கிறது. அதற்கேற்ப நகர்ப்புற வளர்ச்சி அமையவேண்டும் என்கிற கருத்தில்தான், மாண்புமிகு முதல்வர் அவர்கள் சென்னைப் பெருநகர வளர்ச்சிக்குழுமத்தைத் தோற்றுவித்திருக்கிறார்; அதன் வளர்ச்சியில் அக்கறை கொண்டிருக்கிறார்'' என்று குறிப்பிட்டார்.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. பொன்முடி பேசுகையில்:''தமிழ் காக்கப் போராடி உயிர் நீத்த தியாகிகளின் பெயரை இக்கட்டடத்திற்குச் சூட்டி உள்ள மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் தமிழ்ச் சமுதாயமே கடமைப்பட்டிருக்கிறது'' என்றார்.

மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு. ஆற்காடு

வீராசாமி பேசுகையில்-''தேர்தல் நேரத்தில் தந்த வாக்குறுதிகளை, பதவியேற்ற இரண்டுமாத காலத்தில் பெருமளவு நிறைவேற்றிய பெருமைமிக்க மாநிலம் நம்முடைய தமிழ்நாடுதான். மாண்புமிகு முதல்வர் அவர்களின் இத்தகைய அரும்பணியைத் தமிழகமே போற்றுகிறது'' என்று சொன்னார்.

'தாளமுத்து—நடராஜன்' மாளிகைக்கு வடிவமைத்த நிபுணர்கள், கட்டுமானக் கழக நிர்வாக இயக்குநர் திரு. செங்கல்வராயன்-மற்றும் அக்கட்டடம் உருவாக அரும்பாடுபட்ட அலுவலர்கள், ஆண்-பெண் கட்டடத் தொழிலாளர்கள், தலைமைக் கொத்தனார், தலைமைத் தச்சர், தலைமை மின்தொழிலாளி ஆகியோருக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் நினைவுப் பரிசுகள் அளித்தார். 6 தளங்களில் அலுவலகம் அமைக்க உரிமை பெற்றோருக்கு வெள்ளித் திறவுகோல்கள் வழங்கினார்.

## முதல்வர் உரை

தாளமுத்து-நடராஜன் மாளிகையைத் திறந்து வைத்து, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசுகையில்-''பன்னிரண்டாண்டுக் கால இடைவெளிக்குப் பிறகு ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த நான், அரசாங்கத்தின் முதல் நிகழ்ச்சியாக இந்தப் பன்னிரண்டு மாடிக் கட்டடத்தைத் திறந்து வைப்பதில் பூரிப்படைகிறேன்'' என்று குறிப்பிட்டார்.

''தாளமுத்து—நடராஜன் என்ற பெயர்களுக்குப் பின்னால் இருக்கின்ற ஒரு பெரிய வரலாறு பெரும்பாலோருக்குத் தெரிந்திருக்க நியாமில்லை. 1938 ஆம்-ஆண்டு நடைபெற்ற மொழிப் போராட்டத்திலே பங்கேற்று-சென்னைச்சிறைச் சாலையிலேயே மாண்டு போனவர்கள்தான் தாளமுத்து-நடராஜன் என்ற இரண்டு தியாகத் தழும்புகளும்; அவர்கள் மேட்டுக்குடி மக்களல்ல; தாளமுத்து பிற் பட்ட சமுதாயத்தில் பிறந்த நாடார் குலத்தைச் சேர்ந்தவர்; நடராஜன் ஆதிதிராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர். இன்றைய தினம் இந்தித் திணிப்பு தமிழகத்திலே நிச்சயமாக இராது என்று வடக்கேயிருந்து வருகிற எல்லாத் தலைவர்களும் சொல்லுகிறார்கள் என்றால், அதற்குக்காரணம் அந்த இன்னுயிர்கள்தான் என்பதை யாரும் மறந்து விடமுடியாது. அப்படிப்பட்டவர்களின் பெயர் மங்கி மறைந்து விடக்கூடாது என்பதற்காகத்தான் இந்த ஓங்கி உயர்ந்த கட்டடத்திற்கு அந்தத் தியாகப் பெருமக்களினுடைய பெயர்கள் இடப்பட வேண்டும் என்று நான் கருதினேன்'' என்றும் முதல்வர் அவர்கள் தெரிவித்தார். ''1938-ஆம் ஆண்டு ஒரு ஐம்பதாண்டுக் காலம் என்னுடைய பொது வாழ்க்கையில் ஆரம்ப கட்டமாக அமைந்தது மொழிப்போராட்டக் காலம். இந்த மொழிப்பேராட்டக் காலத்திலே மேலும் எனக்கு உத்வேகத்தையும், ஆர்வத்தையும், மொழியின்பால் பற்றையும் உருவாக்கிய இரண்டு பெயர்களே தாளமுத்து-நடராஜன் என்ற பெயர்களாகும். இந்தக் கட்டடம், தீ ஏற்பட்டால் அந்தத் தீயைத் தானே அணைத்து விடும் தன்மைவாய்ந்தது என்று தெரிவிக்கப்பட்டது. அந்தக் காரணத்தினாலேதான் இந்தியை அணைக்கப் புறப்பட்ட அவர்கள் பெயரை இந்தக் கட்டடத்திற்கு நான் சூட்டினேன்'' என்றும் அவர் சொன்னார்.

மேலும் அவர் பேசியதாவது: ''கிருஷ்ணா நதி நீர்த்திட்டம் இன்னும் கிடப்பிலே போடப்பட்டிருக்கிறது. இது கடந்த கால அரசால் தொடங்கப்பட்ட திட்டம் என்றாலும்—வீராணம் திட்டத்தைப் போல. கடந்த கால அரசால் தொடங்கப்பட்ட திட்டம், ஆகவே கிடப்பிலே போடுவோம் என்ற குறுகிய மனப்பான்மை எங்களுக்கு இல்லை. யாரால் அது தொடங்கப்பட்டதாக இருந்தாலும் மக்களுக்கு அது நன்மைதரும் திட்டமாக இருந்தால், அதை நிறைவேற்றக்கூடிய-பெருந்தன்மையை அண்ணா அவர்கள் எங்களுக்கு கற்றுத் தந்திருக்கிறார். எனவே, விரைவில் தெலுங்கு கங்கைத் திட்டத்தை நிறைவேற்ற ஆந்திர முதல்வரோடு நான் பேசவிருக்கிறேன். சில நாட்களில் காவிரி நீர்ப்பிரச்சினை குறித்து கர்னாடக முதல்வரோடு பேசவிருக்கிறோம். ஆந்திர முதலமைச்சரோடு பேச்சுவார்த்தை நடத்தி இன்னும் இரண்டு மூன்றாண்டுக்காலத்தில் அத்திட்டத்தை நிறைவேற்றி, தெலுங்கு கங்கைத் தண்ணீரை சென்னை மாநகரமக்கள் பருகும் வாய்ப்பை இந்த அரசு உருவாக்கித்தரும்.

—இவ்வாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசினார்.

பின்னர், கட்டட நுழைவாயிலில் குத்து விளக்கேற்றி வைத்த அவர், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் கண்காட்சியைப் பார்வையிட்டார்.

விழா முடிவில் சென்னைப் பெருநகர வளர்ச்சிக்குழும உறுப்பினர் திரு. எல். கே. திரிபாதி நன்றியுரையாற்றினார்.



# முதல்வர் நிதியிலிருந்து உதவி


சென்னை பெரம்பூரைச் சேர்ந்த திரு ந.சுப்பிரமணியன் என்பவரின் இரண்டரை வயது குழந்தை ராம்குமாருக்கு, இருதய அறுவைச் சிகிச்சைக்காகத் தற்போதுள்ள விதிகளின்படி அவர் தகுதி பெறாத போதும் அக் குழந்தையின் நலன் கருதி, தனி இனமாக ரூ.5000 கருணை அடிப்படையில் வழங்கவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்.

தென்னார்க்காடு மாவட்டம் கடலூர் வட்டம், சான்றோர்பாளையம் கிராமத்தில் கடந்த 20.10.88 அன்று இரு வகுப்பினரிடையே ஏற்பட்ட மோதலில் 15 வயது சிறுமி சாந்தி மரணமடைந்தார். இனக் கலவரத்தில் இறந்த செல்வி சாந்தியின் தந்தை திரு குப்புசாமி படையாச்சிக்கு, மாண்புமிகு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.5000 நிதியுதவி வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

சேலம் மாவட்டம் சேலம் ஆதின வட்டம், சுந்தரபிள்ளை வலசு கிராமத்தில் தென்னை மரத்தில் இருந்து தவறி விழுந்து மரணமடைந்த திரு ராமலிங்கம் குடும்பத்தின் துயர் துடைக்க அவரது வாரிசுதாரர்களுக்கும், கன்னியாகுமரி மாவட்டம் கல்குளம் வட்டம், குளச்சல் கிராமம் ஈத்தம்பாடு தட்டாரவிளையில் பனை மரத்தில் இருந்து தவறி விழுந்து மரணமடைந்த திரு ஆ.சிரான்மணியின் குடும்பத்தின் துயர் துடைக்க அவரது வாரிசுதாரர்களுக்கும் ரூ. 5000 வழங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணை பிறப்பித்தார்.

சிதம்பரனார் மாவட்டம் கோவில்பட்டி வட்டம் சித்தரக்குளை கிராமத்தில் மின்னல் தாக்கி மரணமடைந்த திருமதி கோஷலாவின் குடும்பத்தின் துயர்துடைக்க அவரது வாரிசுதாரர்களுக்கு ரூ.2000 வழங்கவும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்.

# படமும் செய்தியும்



தமிழகத்திற்கு, 14-4-89 அன்று வருகை தந்த மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு ஆர். வெங்கட்ராமன் அவர்களைச் சென்னை விமான நிலையத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் வரவேற்றார்.





இந்தியத் திரைப்படப் பவள விழாவையொட்டி, 16-4-89 அன்று சென்னையில் நடைபெற்ற விழாவில் மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. ஆர். வெங்கட்ராமன், மேதகு தமிழக ஆளுநர் திரு. பி. சி. அலெக்சாண்டர் ஆகியோர் கலந்து கொண்டார்கள். அவ்விழாவில் மாண்புமிகு மத்திய செய்தி ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு. எச். கே. எல். பகத் அவர்கள்பழம் பெரும் திரைப்படக் கலைஞருக்கான விருதினை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்கு வழங்கிப் பொன்னாடை போர்த்தினார். மாண்புமிகு தமிழ்நாடு செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு பொன். முத்துராமலிங்கம் அவர்களும் இவ் விழாவில் கலந்து கொண்டார்.

தமிழ்நாடு அரசு, வரும் கல்வியாண்டிற்கான இலவசப் பாட நூல்களை, மையங்களுக்கு லாரிகள் மூலம் அனுப்பி வைக்கும் நிகழ்ச்சியை மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் திரு. க. அன்பழகன் அவர்கள் 12-4-89 அன்று துவக்கி வைத்தார்.





மாண்புகு சட்ட அமைச்சர் திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா அவர்கள், 13-4-89 அன்று, சென்னை உயர்நீதி மன்றத்தில் அட்வகேட்ஜெனரல், அரசுத் தரப்பு வழக்கறிஞர், பப்ளிக் பிராசிக்கியூட்டர் மற்றும் அலுவலர்களுடன் இடவசதி குறித்தும் பராமரிப்பு குறித்தும் ஆலோசனை நடத்தினார்.



மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள், சென்னையில் ஆஸ்திரேலியக் கழகத்தினர் நடத்திய போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவியர் ஆஸ்திரேலியச் சுற்றுப்பயண வழியனுப்பு விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பயணச் சீட்டுகளை 20-4-89 அன்று வழங்கினார்.

மாநில அளவிலான செய்தி, கல்வி, தொடர்பு விரிவாக்க அலுவலர்களுக்கான முத்தமிழ்ப் பணியிடைப் பயற்சிக் கருத்தரங்கை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் பொன்முடி அவர்கள் துவக்கி வைத்தார். (11-4-89).



# பாவேந்தர் விருது

# திரு.வி.க. விருது

சிறந்த கவிஞருக்குப் பாவேந்தர் விருதினை ஆண்டுதோறும் வழங்கும் திட்டத்தைத் தமிழக அரசு 1978-ஆம் ஆண்டில் அறிமுகம் செய்தது.

1986-ஆம் ஆண்டுக்குப் பின்னர் இவ்விருது யாருக்கும் வழங்கப்படாமல் இருந்தது.

தற்போது, 1987-1988-1989 ஆகிய மூன்றாண்டுகளுக்கு உரிய விருதுகள் முறையே கவிஞர் முடியரசன், கவிஞர் பொன்னிவளவன், கவிஞர் அப்துர் ரகுமான் ஆகியோருக்கு வழங்கப்படுகின்றன என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

விருது பெறும் கவிஞர்கள், விருது பெறக் காரணமாக இருந்த விழுதுவிட்ட ஆலமரமாம் புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் ஆகியோரின் உருவப்படங்களை இந்த இதழ் அட்டையில் வெளியிட்டுப் பெருமை கொள்கிறது 'தமிழரசு'.

தமிழக அரசால் அறிமுகம் செய்யப்பட்ட சிறந்த எழுத்தாளர்களுக்கு திரு. வி. க. விருது வழங்கும் திட்டம் கடந்த 3 ஆண்டுகளாக நிறைவேற்றப்படாமல் இருந்தது.

தற்போது அந்த விருதுகளுக்கு உரியவர்களைத் தேர்ந்தெடுத்துள்ளது தமிழக அரசு.

1986-ஆம் ஆண்டுக்குரிய விருது திரு. கா. மு. ஷெரீப் அவர்களுக்கும், 1987-ஆம் ஆண்டுக்குரிய விருது டாக்டர் ந. சுப்புரெட்டியார் அவர்களுக்கும், 1988 ஆம் ஆண்டுக்குரிய விருது திரு. மணவை முஸ்தபா அவர்களுக்கும் வழங்கப்படுகிறது.

### பாவேந்தர் விருதுபெறும் கவிஞர்களின் வாழ்க்கைக் குறிப்புகள்

**கவிஞர் முடியரசன்**

கவிஞர் முடியரசன் 7.10.1920 இல், மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த பெரியகுளத்தில் பிறந்தார். இயற் பெயர் துரைராசு.

காரைக்குடியில் ஸ்ரீமீனாட்சி சுந்தரேஸ்வரர் உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராய் பணியாற்றி ஓய்வு பெற்றார்.

பாரதிதாசன் பரம்பரைக் கவிஞர் என்ற சிறப்புப் பெற்றவர். கோவையில் 1951இல் நடைபெற்ற முத்தமிழ் மாநாட்டில் அழகின் சிரிப்பு என்னும் கவிதைப் போட்டியில் பரிசு பெற்றார்.

**கவிஞர் பொன்னிவளவன்**

தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த பள்ளியக்ரகாரம் என்னும் ஊரில் பிறந்தவர் பொன்னிவளவன். கரந்தை தமிழ்க் கல்லூரியில் பயின்று புலவர் பட்டம் பெற்ற இவர், சென்னை மாநகராட்சிப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணி ஆற்றி வருகிறார். தமிழ் உணர்ச்சி மிக்க கவிதை நூல்களைப் படைத்திருக்கிறார்.

**கவிஞர் அப்துர் ரகுமான்**

1937இல் பிறந்த இந்தக் கவிஞர், வாணியம்பாடி இஸ்லாமிய கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராக இருந்து வருகிறார். மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த இவர், கவியரங்குகளில் தனிச் சிறப்புப் பெற்று வருகிறார். தஞ்சைப் பல்கலைக் கழகத்தின் 'தமிழன்னை' பரிசினை இவர் பெற்றிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

### திரு.வி.க. விருது பெறும் எழுத்தாளர்களின் வாழ்க்கைக் குறிப்புகள்

**கவிஞர் கா.மு. ஷெரீப்**

பள்ளியில் பயிலாமல் தன் முயற்சியால் தமிழ் கற்றுக் கவிஞரானார் இவர். அரபுமொழி நன்கு பயின்றவர். இளம் வயதிலேயே சுயமரியாதை இயக்கத்தில் சேர்ந்தார். விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறை சென்றவர்.

திரையுலகத்தில் பணிபுரிந்து பலநூறு பாடல்களை எழுதியுள்ளார்.

**டாக்டர். ந. சுப்புரெட்டியார்**

திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த கோடாத்தூரில் 7.9.1917இல் பிறந்தார். தமிழ்க் கலைக்களஞ்சியப் பொறுப்பாளராகப் பணி ஆற்றியவர். திருப்பதி வெங்கடேசுவரா பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறைத் தலைவராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். 80க்கு மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். அறிவியல் நூல்கள் பலவற்றைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். தமிழில் அறிவியல் நூல்களையும் எழுதியுள்ளார்.

**மணவை முஸ்தபா**

மதுரை மாவட்டம், பிலாறு என்னும் கிராமத்தில் 15.6.1935 இல் பிறந்தவர் இவர்.

யுனெஸ்கோ கூரியர் இதழின் தமிழ்மொழிப் பிரிவின் பதிப்பாசிரியராக இருந்து வருகிறார். அறிவியல் தமிழ் வளர்ச்சியில் பெரிதும் ஆர்வம் கொண்டவர்.

கா.மு. ஷெரீப்




சுப்புரெட்டியார்



மணவை முஸ்தபா



# அறப்புரட்சிக்கு வித்திடும் தொழிலாளர் இயக்கம்



இந்தியாவிலேயே முதன் முதலில் தொழிற்சங்கம் உருவாகியது சென்னையில்தான். இதன் தோற்றத்திற்குக்காரணமானவர் தமிழ்த்தென்றல் திரு.வி.க. ஆவார். தொழிலாளர் இயக்கம் குறித்து அவரது விளக்கவுரை இங்கே இடம் பெறுகிறது:

## தமிழ்த்தென்றல் திரு.வி.க.

எனது வாழ்க்கை, தொடக்கத்தில் சமயப்பணிகளில் ஈடுபட்டது. அதனால் பல சமய ஆராய்ச்சிப் பேறு எனக்குக் கிடைத்தது. அவ்வாராய்ச்சி பொதுமை உணர்ச்சியை உண்டாக்கியது. சமயங்களின் அடிப்படையாயுள்ள பொதுமை சமரசம் ஏன் உலகில் பரவவில்லை என்று யான் எண்ணுவேன். சிற்சிலபோது ஆழ எண்ணுவேன். எனக்கு ஒன்றும் விளங்குவதில்லை. சிங்காரவேல் செட்டியார் கூட்டுறவு சிறிது விளக்கஞ் செய்தது. அவ்விளக்கம் பொதுமையை உலகில் பரப்பி நிலை பெறுத்தவல்லது. காரல் மார்க்ஸ் கொள்கை என்ற எண்ணத்தை என் உள்ளத்தில் இடம் பெறச் செய்தது.


காந்தியடிகளின் அகிம்சா தர்மத்தில் என் மனம் சென்றது. அகிம்சை நல்லதே. அது வெறும் தத்துவ உலகிலும், கவி உலகிலும் நிலவிக் கொண்டிருக்கும்; வாழ்க்கை உலகில் ஒன்றி நிலவுமா?' என்று ஐயுறுவேன். சிலவேளை ஐயம் முளைத்தெழுந்து என் நெஞ்சைத் துளைக்கும். துளைப்பு, சிற்சில சமயம் மனநோயையும் உண்டு பண்ணும். அந் நோயைப் போக்க, மார்க்ஸ் மருத்துவராய் என் மானத உலகில் தோன்றுவார். மார்க்ஸ் அருளியுள்ள கொள்கை உலகில் பரவினால் வாழ்க்கை அகிம்சையில் ஒன்றுவதாகும் என்னும் நுட்பம் எனக்குச் செவ்வனே விளங்கியது.

ஒரே வயிற்றில் பிறந்தவர் பொருளைக் குறித்துப் போரிடுவதும், மன்றம் ஏறுவதும் என் உள்ளத்தைப் புண்படுத்தும். உடன் பிறந்தவரிடத்தில் போர் மூட்டாத அவரை மன்றம் ஏற்றாத- ஆட்சி முறை அமையுமா என்று ஏக்குறுவேன். மார்க்ஸ் நினைவு அவ்வேகத்தைப் போக்கும். அமைதி நினைவு தோன்றும் போதெல்லாம் மார்க்ஸ் நினைவும் உடன் தோன்றுவது வழக்கமாகியது.

மார்க்ஸ் கொள்கைக்கு ஆக்கம் தேடும் அமைப்பு தொழிலாளர் இயக்கம். அவ்வியக்கத்தில் இறங்கித் தொண்டு புரிய, கீர் ஹார்டியின் காட்சியும், 'வேங்கடேச குணாமிர்த வருஷுனி சபை'' யின் அழைப்பும் துணை நின்றன. வாழ்க்கையில் என்னென்னவோ மாறுதலும் வளர்ச்சியும் நிகழ்கின்றன. அவ்விசித்திரத்தை யான் என்ன என்று விளம்புவேன்?

மார்க்சியம் பொருட் பொதுமையை அறிவுறுத்தும் நாத்திகமன்றோ? என்று சிலர் என்னைக் கேட்பதுண்டு. மார்க்சியம் என்று சிலர் நாத்திகப் பிரச்சாரஞ் செய்வதும் எனக்குத் தெரியும். என் மனத்துக்கு மார்க்சியம் நாத்திகமாகத் தோன்றவில்லை. எப்படி?

### தொழிலாளர்களின்
### கடமை-கண்ணியம்-கட்டுப்பாடு



கடமை-பாட்டாளிகளுடைய கடமை, சமுதாயத்திற்கு நன்மை செய்வதிலே இருக்கிறது.

அவர்களுடைய கண்ணியம், தங்களுடைய சக்தியைப் பாழ்படுத்திக் கொள்ளாததிலே இருக்கின்றது.

அவர்களுடைய கட்டுப்பாடு, தங்களுடைய ஒற்றுமையை உடைப்பதற்கு யார் எந்த மாதிரி முயற்சி எடுத்துக் கொண்டாலும் ஒரு துளியும் இடம் கொடுக்காத தன்மையிலே இருக்கின்றது.

—பேரறிஞர் அண்ணா.

மகம்மதுவின் தெய்வ ஒருமையும் கிறிஸ்துவின் அன்பும், புத்தர் தர்மமும், அருகர் அஹிம்சையும், கிருஷ்ணன் நிஷ்காமியமும், குமரன் அழகும், தட்சிணாமூர்த்தியின் சாந்தமும் பொதுமை அறத்தை வேராகக் கொண்டவை. அப்பொதுமை அறம் ஏன் ஓங்கவில்லை? சில தடைகள் மறிக்கின்றன. அவை யாவை? சாம்ராஜ்யங்கள், மடங்கள், சம்பிரதாயங்கள், கட்டுப்பாடுகள், கண்மூடி வழக்கவொழுக்கங்கள் முதலியன. இவற்றைப் படைத்து வளர்ப்பது எது? முதலாளி தொழிலாளி வேற்றுமை. இவ்வேற்றுமையை ஒழிக்கவல்லது பொருட் பொதுமை; பொருட் பொதுமை மகம்மதுவின் தெய்வ ஒருமையும், கிறிஸ்துவின் அன்பும், பிறவும், மன்பதையின் கால் கொள்வதற்குத் துணை செய்யும் ஆற்றல் வாய்ந்தவைஎன்னும் நுட்பம் எனக்குப் புலப்பட்டது. அதனால் மார்க்சியம் என் உள்ளத்தைக் கவர்ந்தது.

உலகம் போராட்டத்துக்கும் இரையாதல் கண்கூடு. மூலம் என்ன? இது குறித்துத் தனித்தனி ஆராய்ச்சி செய்தவர் பலர். அவருள் சிறந்தவர் காரல் மார்க்ஸ். உலகப் போராட்டத்துக்கு மூலமாக நிற்பது முதலாளி-தொழிலாளி என்னும் வேற்றுமை உணர்வென்பது மார்க்ஸ் கண்ட உண்மை. இது நடுநிலையில் நின்று போர்மூலத்தை ஆராயும் ஒவ்வோர் அறிஞர்க்கும் எளிதில் புலனாகும்.

பண்டைநூலில் சாம்ராஜ்யங்கள் பெருகவில்லை. அதனால் முதலாளி-தொழிலாளி உணர்வு, வளராமற் கிடந்தது. இந்நாளில் சாம்ராஜ்யங்கள் பெருகிட உள்ளன. அப்பெருக்கம் முதலாளி-தொழிலாளி வேற்றுமை உணர்வை வளர்ப்பதாயிற்று. அவ்வளர்ச்சி வாழ்க்கையில் போராட்டத்தைப் புகுத்தியது. போராட்டத்தை ஒழிக்கும் மருந்து காரல் மார்க்சுக்குக் கிடைத்தது. அது, பொதுமை அறத்தை நிலைபெறுத்தவல்ல பொருளாதார சமரசம்.

மார்க்ஸ் கண்ட பொருட் பொதுமை, உலகில் புறஅமைதியை நிலவச் செய்யும் மாண்புடையது. அக அமைதியை மகம்மது, கிறிஸ்து அருகர், புத்தர், கண்ணபிரான், குமரன், தட்சிணாமூர்த்தி முதலியோர் கொள்கை நிலைபெறச் செய்யும். அக அமைதிக்குப் புற அமைதி வேண்டற்பாலது.

புற அமைதியை உலகில் நிலவச்செய்யும் வல்லமை வாய்ந்த மார்க்சியத்தை நாத்திகம் என்று எப்படித் தள்ளுவது? மார்க்சியத்தைத் தள்ளுவது சான்றோரின் அமைதிச் செல்வத்தைத்தள்ளுவதாகும். போராட்டத்தை அழைப்பதாகும்.

சான்றோர் அருளிய பொதுமை அறத்துக்கு ஆக்கந்தேடவே யான் மார்க்சல் பொருட் பொதுமைக் கொள்கையைத் தழுவுகிறேன். மார்க்சியத்தைச் சான்றோரின் மூலக்கொள்கைக்கு மாறாகப் பயன்படுத்தும் இயக்கங்களில் என் மனம் ஈடுபடுவதில்லை.

மார்க்சியம் முழுமையதா? குறையுடையதா? எதிலுங் குறையுண்டு. மார்க்சியத்திலும் சிறு குறையுண்டு. என்ன குறை? அதன்கண் சத் என்னும் நுண் பொருள் வெளிப்படையாகக்காணப்படாமை; மார்க்சியத்தில் 'சத்' என்னும் செம்பொருள் சேர்ந்தால் அது நிறைவுடையதாகும்.

மார்க்சியம் சமதர்மத்தை அறிவுறுத்துவது; சமதர்மத்தில் 'சத்' தானே சேரும். 'சத்' தைக் கொண்ட சமதர்மமே சன்மார்க்கமென்பது. சன்மார்க்கம் எது? மார்க்சியமும், மகம்மது, கிறிஸ்து, புத்தர், அருகர், கண்ணபிரான், குமரன், தட்சிணாமூர்த்தி முதலியோர் கொள்கையுஞ் சேர்ந்த ஒன்று சன்மார்க்கம். இஃது எனது கல்வி கேள்வி ஆராய்ச்சி அனுபவங்களின்றும் கனிந்த உண்மை.

முதலாளி-தொழிலாளி வேற்றுமை உணர்வு சன்மார்க்கத்தை வளர விடாது. சன்மார்க்க வளர்ச்சிக்கு முதலாளி-தொழிலாளி வேற்றுமை உணர்வு பொன்றியே தீர்தல் வேண்டும். வேற்றுமை உணர்வு எப்படிப் பொன்றும்? இதற்குப் புரட்சி தேவை. புரட்சிக்கு உரியது தொழிலாளர் இயக்கம் என்று சொல்லவேண்டுவதில்லை. ஆதலின் யான் புரட்சி மனப்பான்மையுடன் தொழிலாளர் இயக்கத்தில் இறங்கினேன்.

புரட்சி இருவகை. ஒன்று அறவழியில் நிகழ்வது. மற்றொன்று மறவழியில் நிகழ்வது. அஃது அறப் புரட்சி. இது மறப்புரட்சி. உலகைச் சீர் செய்ய அறப்புரட்சி இடம் பெறாத வேளையில், மறப்புரட்சி அவ்விடத்தில் தானே நுழையும். இரண்டாலும் விளையும் பயன் ஒன்றாகுமா? ஒல்லும் வகை அறப் புரட்சிக்கு இடம் தருவதே அறிவுடைமை. இல்லையேல் மறப் புரட்சி எழும். எனது மனத்துக்கு இயைந்தது அறப்புரட்சியே. அறப் புரட்சி வாயிலாகச் சன்மார்க்கத்தை ஓம்பவே யான் தொழிலாளர் இயக்கத்தில் ஈடுபட்டேன்.

இந்நாட்டில் தொழிலாளர் இயக்கம் தோன்றி இருபத்தைந்து ஆண்டுகளாகின்றன. இருபத்தைந்து ஆண்டு அநுபவம் எனக்குண்டு. புரட்சி ஏன் உச்சநிலையைஅடையவில்லை? சாதி மத வெறி; சம்பிரதாயக் கட்டு, மூடவழக்கவொழுக்கம், மூர்க்கப் பிடிவாதம், முதலாளி அமைப்புக்களில் மோகம், தலைமைப் போராட்டம், விட்டுக்கொடுத்தல் இன்மை முதலிய தளைகள் புரட்சியைத் தகைந்து நிற்கின்றன என்று எனது அனுபவம் சொல்கிறது. இத்தளைகளை உடைத்தெறியத் தோன்றிய இயக்கங்கள் பலப்பல. அவற்றுள் சிறந்தது தொழிலாளர் இயக்கம். இது தொழிலாளர் இயக்கத்தில் ஈடுபட்டவர்க்கு வியப்பாகத் தோன்றாது.

(1944ல் வெளிவந்த திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புக்கள் என்னும் நூலிலிருந்து)

# 200 பெண்களுக்கு ஆட்டோரிக்ஷா!

மகளிர் முன்னேற்றத்திற்காக இந்த அரசு அறிவித்த திட்டங்கள் தீவிரமாகச் செயல்படுத்தப்படும்.

சில மாநிலங்களில் பெண்கள் சொந்தமாக ஆட்டோரிக்ஷா வைத்துக்கொண்டு குடும்பத்துக்குத் தேவையான வருமானத்தைப் பெறுகிறார்கள். இப்போது இங்கு பள்ளிகளிலிருந்து குழந்தைகளை அழைத்துச் செல்லும் ஆட்டோ ரிக்ஷாக்களை ஆண்கள்தான் ஓட்டிச் செல்கிறார்கள். அதிகக் குழந்தைகளை ஏற்றிக்கொண்டு பலர் கண்மண் தெரியாமல் ஓட்டிப் போவதைப் பார்க்கிறோம்.

பெண்கள் இத்தகைய ஆட்டோ ரிக்ஷாக்களை ஓட்டிச் சென்றால் பாதுகாப்பாக இருக்கும்.

எனவே முதல் கட்டமாக 200 பெண்களுக்கு ஆட்டோ ரிக்ஷாக்கள் வாங்க 13 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாயும், 10 பெண்களுக்கு மோட்டார் பொருத்தப்பட்ட சைக்கிள் ரிக்ஷா வாங்க 60 ஆயிரம் ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதுதவிர, கரும்புச்சாறு பிழியும் இயந்திரம், ஐஸ்கிரீம் வண்டி, ஆகியவை வாங்கவும், பிளாஸ்டிக் பாய்முடைதல் போன்றவற்றுக்காகவும் இந்த ஆண்டு ரூ.33 இலட்சம் செலவிடத்திட்டமிடப்பட்டுள்ளது. இதன்மூலம் 5,500 பெண்கள் இந்த ஆண்டு பயன் அடைவார்கள்.

—மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள் 21.4.89 அன்று சட்டமன்றத்தில் பேசியதிலிருந்து.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.

அதி / நவீன / பாலியெஸ்டர் / வகைகள்




உங்கள் மனதைக் கவர்ந்தவை மலர்கள்.
அவைகளின் அற்புத வண்ண ஜாலங்களை
உங்களுக்கு கோ-ஆப்டெக்ஸ் அளிக்கிறது,
மிக நவீனமாக அழகு மிளிரும்
பாலியெஸ்டர் புடவை வகைகளில்!

கோ-ஆப்டெக்ஸ் பங்கு பெறட்டும் —
உங்கள் இனிய நேரங்களில்!


**கோ-ஆப்டெக்ஸ்**
தமிழ்நாடு கைத்தறி

இந்தியாவின் உயர் விற்பனை கைத்தறி வகைகள்.

• புடவைகள் — பருத்தி, பாலியெஸ்டர், பட்டு • ஷர்ட்டிங் • சூட்டிங் • ஃபர்னிஷிங் • பெட்ஷீட்கள் • டவல்கள் • வேட்டிகள் • லுங்கிகள். இணையிலா புதுமைகள். எண்ணிலா வகைகள்.

DIPR/1766/MS88/HTA

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23



டாக்டர் அம்பேத்கார் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு சென்னைத் துறைமுகம் எதிரே அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 14.4.1989 அன்று மாலையணிவித்தார்.